

## ஆசிரியர் உரை

# ஆத்தும உணர்வுள்ள
# Soul Conscious

**Louis Rushmore**

**ஆ**ண்களுக்கே உரிய **குருட்டுத்தனம்** எனும் சொற்றொடர் சில பெண்களால், ஆண்களைப் பார்த்து முணுமுணுக்கும் ஒருசொற்றொடராகும். குறிப்பாக, என் மனைவி கூட என்னைக் குறி வைத்து இச்சொற்றொடரைப் பயன்படுத்தியிருக்கிறார். உதாரணமாக, குளிர்சாதனப்பெட்டியில் ஏதாவது ஒரு பொருளை நான் தேடிக் கண்டுபிடிக்க முடியாமல் போனால், அதிலும் குறிப்பாக வெளிப் படையாகத் தெரியும் பொருளை கண்டுபிடிக்க முடியாமல் போனால், இன்னும் குறிப்பாக வெளிப்படையாகத் தெரிந்தும் அதை நம்மால் கண்டுபிடிக்க முடியவில்லையென்றால் சிலர் வேறு பெயரால் கூட நம்மை அழைக்க வாய்ப்புண்டு. நாமெல்லோருமே பல சந்தர்ப்பங் களில் நம் கண்களில் வெளிப்படையாகத் தெரியும் காரியங்களைத் குறித்து அறியாதிருக்கிறோம். பெரும்பாலான நேரங்களில், நம் குருட்டுத்தனம் ஏதாவது ஒரு பொருளை கண்டுபிடிப்பது சம்மந்தமாக மாத்திரமல்ல, அன்றாட பூமிகுரிய வாழ்வோடு சம்மந்தம் உடைய தாகவும் இருக்கிறது.

ஆம், ஆவிக்குரிய காரியங்களில், ஒருவருடைய நித்திய ஜீவன் சம்பந்தமான காரியங்களில் குருட்டாட்டமாயிருப்பது மனித இனத்தின் மிகப்பெரிய தோல்வியாகும். இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் ஆவிக்குரிய நலனைக்குறித்து அக்கறையில்லாமல் இருந்தது அதிர்ச்சியாயிருக்கிறது. பூமிக்குரிய காரியங்களைக் காட்டிலும் ஆவிக் குரிய காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பது பற்றி என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று கவலைப்படாதிருங்கள். இவைகளையெல்லாம் அஞ்ஞானிகள் நாடித் தேடுகிறார்கள். இவைகளெல்லாம் உங்களுக்கு

வேண்டியவைகள் என்று உங்கள் பரமப்பிதா அறிந்திருக்கிறார். முதலாவது, தேவனுடைய ராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும் [மத்தேயு 6:31-33] என்று தெளிவாக இயேசு கிறிஸ்து விளக்கியிருக்கிறார். இருந்த போதிலும் தேவனுடைய பிள்ளைகள் ஆவிக்குரிய காரியங்களில் அவர்கள் குருடர்களாயிருக்கிறார்கள். **ஏசாயாவின் தீர்க்கதரிசனம் இவர்களிடத்தில் நிறைவேறுகிறது. அதாவது: காதாரக்கேட்டும்** உணராதிருப்பீர்கள்; கண்ணாரக்கண்டும் அறியாதிருப்பீர்கள். இந்த ஜனங்கள் கண்களினால் காணாமலும், காது களினால் கேளாமலும் இருதயத்தினால் உணர்ந்து மனந்திரும்பா மலும், நான் அவர்களை ஆரோக்கியமாக்காமலும் இருக்கும்படியாக, அவர்கள் இருதயம் கொழுத்திருக்கிறது. காதால் மந்தமாய்க்கேட்டு தங்கள் கண்களை மூடிக்கொண்டார்கள் என்பதே. [மத்தேயு 13:14,15]. ஏசாயா 6:9,10].

நம் ஆண்டவர் தம்முடைய சீஷர்களை அழைத்து, நீங்கள் வாழும் உலகத்தைத் தாண்டி மேலானவைகளைப் பார்க்க வேண்டுமென்பதில் ஆச்சரியம் ஏதாவது இருக்கிறதா? அறுப்புக்காலம் வருகிறதற்கு இன்னும் நாலுமாதம் செல்லும் என்று நீங்கள் சொல்லுகிற தில்லையா? இதோ, வயல் நிலங்கள் இப்பொழுதே அறுப்புக்கு விளைந்திருக்கிறதென்று உங்கள் கண்களை ஏறெடுத்துப் பாருங்கள் என்று இயேசு கிறிஸ்து தம்மைப் பின்பற்றுபவர்களைப் பார்த்து சொன்னபோது அவர்கள் ஆத்தும உணர்வுள்ளவர்களாக இருக்க வேண்டுமென்று சவால் விட்டிருக்கிறார் [யோவான் 4:35]. இங்கே நம் இரட்சகர் இப்பூமியில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் விதைத்தல், அறுத்தல் மூலமாக இழந்துபோனதைக் தேடவும், இரட்சிக்கவும், என்னும் தம்முடைய ஊழியத்தில் பங்கெடுப்பதற்கான அவசியத்தை வலியுறுத்தினார் [லூக்கா 19: 10]. இவ்வார்த்தைகள் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பரமேறுவதற்கு முன்பாகச் சொன்ன அந்த கடைசி வார்த்தைகளோடு ஒத்துப்போகிறது. பின்பு அவர் அவர்களை நோக்கி: உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் [மாற்கு 16:15] என்று கட்டளையிட்டார்.

**நீங்கள் மற்றவர்களிடத்தில் இடைப்படும் போது அவர்களிடத்தில் எதைக் காண்கிறீர்கள்?**

**தனிப்பட்ட கிறிஸ்தவர்கள் ஆத்தும உணர்வுள்ளவர்களாக இருக்க வேண்டும்.**

நம்முடைய விலையேறப் பெற்ற ஆத்துமாக்களை சுமந்து செல்லும் வாகனங்களாக நம் சரீரங்கள் இருக்கின்றன என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். ஒரு தனிமனிதனுக்குள்ளாக இருக்கும் ஆத்துமாவை வாகனத்தில் இருக்கும் ஒரு நபரோடு ஒப்பிட முடியும். அந்த வாகனம் நபர் அல்ல. ஆனால், அந்த வாகனத்தில் பயணிப்பவர் அதை விட்டு கடந்து செல்வார், அதைப் போலவே ஒருவருடைய ஆத்துமா அந்த நபருடைய சரீரத்தை விட்டு ஒரு நாளில் கடந்து போகும் (யாக்கோபு 2:26).

முதலாவது, நம்மை நாம் ஆத்துமாக்களாகப் பார்க்கும் குணாதிசயத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். இரண்டாவது, தான் அந்த ஆத்துமா வசிக்கும் சரீரமாக நம்மை நாம் காண வேண்டும். கிறிஸ்தவர்களாகிய நாம் நம் குடும்ப உறுப்பினர்களை, நண்பர்களை அயலகத்தாரை, உடன் வேலை செய்பவர்களை; சக மாணாக்கர்களை, பொதுவாக ஜனங்களை வழக்கமாக நாம் பார்க்கும் விதத்திலிருந்து வித்தியாசமாகப் பார்க்க வேண்டும். அவர்களுடைய தன்மைகள் ( முகங்கள், அந்தஸ்து, வளர்ச்சி, இனம் போன்றவை களைக் கடந்து ஒவ்வொருவரையும் ஆத்துமாக்களாக அடையாளங் காணவேண்டும். ஒவ்வொரு ஆத்துமாவும் விலையேறப் பெற்றதாயிருக்கிறது. ஒவ்வொரு ஆத்துமாவும் இவ்வுலகத்தால் குவித்து வைக்கப்பட்டுள்ள செல்வங்களை விட அதிக மதிப்புள்ளதாயிருக்கிறது (மத்தேயு 16;26) கிறிஸ்தவர்கள் ஆத்தும உணர்வுள்ளவர்களாயிருக்க வேண்டும்.

**கிறிஸ்துவின் சபைகள் ஆத்தும உணர்வுள்ளவைகளாக இருக்க வேண்டும்.**

தனிப்பட்ட முறையில் உள்ளூர் சபைகளும், உலகளாவிய சபைகளும் மனித இனத்தை ஆத்துமாக்கள் அடிப்படையில் பார்க்க வேண்டும். ஓர் ஆத்தும உணர்வுள்ள சபை முதலாவது அதன் அங்கத்தினர்களை ஆத்துமாக்களாகத்தான் பார்க்க வேண்டும். அதன் பிறகு தான் அந்த ஆத்துமாவை சுமக்கும் சரீரங்களாக பார்க்க வேண்டும். மேலும், நாம் உள்ளூர் சபை அங்கத்தினர்களைத் தாண்டி கோடிக் கணக்கான ஆத்துமாக்களை சுமந்து திரிகின்ற சரீரங்களை உலகளாவிய அளவில் கண்டறிந்து அந்த ஆத்துமாக்களை ஆதாயப்படுத்த வேண்டும்.

நிச்சயமாகவே, உண்மையுள்ள கிறிஸ்தவர்கள் வேதவாக்கியங்களில் விவரிக்கப்பட்டிருக்கிற ஆண், பெண் பாலின சம்பந்தமாகக் கொடுக்கப்பட்டிருக்கும் குறிப்பிட்ட பங்குகளைக் குறித்து அறிவிக்க வேண்டும். இங்கே மனித இனத்தின் ஆவிக்குரிய தன்மையை கண்டறிந்து ஆவிக்குரிய பிரகாரமாக ஆரோக்கியமான பழக்க வழக்கங்களை மேம்படுத்துவதற்காகத்தான் அழுத்தம் கொடுக்கப் படவேண்டும். அதின் ஊடே கிறிஸ்தவர்களல்லாதவர்களிடத்திலும், கிறிஸ்தவர்களிடத்திலும் ஊழிய வாஞ்சையை ஏற்படுத்த முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும்.

பெற்றோர்களே! உங்கள் குழந்தைகள் தற்காலிக கூடாரங்களாகிய சரீரங்களில் வாசம் செய்யும் ஆத்துமாக்களாகி இருக்கிறார்கள். சகோதரரே, உங்கள் உறுப்பினர்கள் மாம்சத்தில் பொதியப்பட்டிருக்கும் ஆத்துமாக்களாக இருக்கிறார்கள். நாம் திரும்பிப் பார்க்கும் இடங்களிலெங்கும் ஆத்துமாக்கள் நிறைய இருக்கின்றன. இப்பூமியில் வசிக்கும் ஒவ்வொரு நபருக்கும் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷம் அது அளிக்கும் இரட்சிப்பு மற்றும் அது வாக்களிக்கும் நித்திய ஜீவன் போன்றவைகளின் அவசியம் இருக்கிறது. உண்மையாகவே, நம்மைச்சுற்றிலும் ஆத்துமாக்கள் அதிகமாக இருக்கிறபடியால் அறுவடைக்கு ஆவிக்குரிய விளைச்சல் மிகுதியாயிருக்கிறது.

**ஆத்தும உணர்வுள்ளவர்களாயிருங்கள்! ஆவிக்குரிய கண்ணாடிகள் மூலமாக ஆத்துமாக்களைப் பாருங்கள்:**

நம் சொந்த இரட்சிப்பும், மற்ற ஆத்துமாக்களின் மீட்பும் நீங்களும் கர்த்தருடைய சபையும் எந்த அளவு ஆத்தும உணர்வுள்ளதாயிருக்கிறதோ அதைச் சார்ந்திருக்கிறது. நீங்கள் இடைப்படும் நபர்களிடத்தில் நீங்கள் எதைக் காண்கிறீர்கள்?

✝

---

**இயேசுவை நோக்கிப் பார்க்கலாமே**

*அவருடைய கண்களில் ஜீவ ஒளியிருக்கிறது*

*அவருடைய குரலில் சத்திய வாக்கிருக்கிறது*

*அவருடைய கரங்களில் ராஜ்யத்தின் வேலையிருக்கிறது.*

*அவருடைய இருதயத்தில் பிதாவின் அன்பிருக்கிறது.*



நிர்வாக ஆசிரியர் உரை

## இலைகளையல்லாமல் வேறொன்றையும் காணவில்லை

## Found Nothing but Leaves

*E.Z.S. Rajanayagam*

**ந**மதாண்டவராகிய இயேசுக்கிறிஸ்து '' மாபெரும் போதகர் என்ற சிறப்புப் பெயரை சர்ச்சைக்கிடமின்றி சான்றோரால் பெற்றவர். அவருடைய பேச்சில் எளிமையும். வலிமையும் மாத்திரமல்லாமல் கனிவும் கருத்தாழமும், சொல்லாட்சியும் மிகுந்து காணப்பட்டது. இது நடைமுறைக்கு ஒவ்வாதது என்றும் புரிந்து கொள்வதற்குச் சிரமம் என்றும் சொல்லப்படும் பகுதிகள் இல்லையென்று வேதத்தை ஆழ்ந்து படிக்கும் ஒருவனால் ஆணித்தரமாகச் சொல்ல முடியும். ஆனால், அவர் சம்பந்தப்பட்ட ஒரு சம்பவம் மாத்திரம் வேதத்தை மேலெழுந்த வாரியாகப் படிக்கும் அநேகரின் புருவத்தை உயர்த்தி விடுகிறது. அதற்குக் காரணம், நிச்சயமாக நமதாண்டவரல்ல. இருப்பினும், அவர் தனது தீர்ப்பில் தவறிழைத்து விட்டதைப் போல ஒரு மாயத்தோற்றம் கண்ணுக்குத் தெரியும் என்பதை பெரும்பாலும் நாம் மறுப்பதற்கில்லை.

இச்சம்பவம் இயேசுவின் பூமிக்குண்டான வாழ்வின் கடைசி ஆறு நாட்களில் நடந்த ஒன்று. பஸ்கா பண்டிகை சமீபித்திருந்த ஒரு சந்தர்ப்பம். அவரின் பூலோக வாழ்க்கையில் இது ஒரு முக்கியமான கட்டம். ஜீவனுக்குண்டான வழியைப் போதிக்கும்படி பூமிக்கு வந்த இயேசு தனது கடைசி கட்ட போதனையில் தீவிரம் காட்டியிருந்த நேரம். எரிகோவிலிருந்து எருசலேமுக்கு வரும்வழியில் எருசலேம் பட்டணத்துக்கு வெளியே இரண்டு மைல் தொலைவில் உள்ள ஒலிவமலையின் அடிவாரத்திலுள்ள பெத்பாகே, பெத்தானியா கிராமத்திற்கு வந்து சேர்ந்தார். அப்பொழுது வழக்கம் போல் மார்த்தாள், மரியாள் லாசரு இவர்களுக்குச் சொந்தமான வீட்டில் தங்கினார். மரியாள் விலையேறப்பட்ட களங்கமில்லாத நளதம் என்னும் தைலத்தில் ஒரு இராத்தல் கொண்டுவந்து, அதை இயேசுவின் பாதங்களில் பூசி. தன் தலைமயிரால் அவருடைய பாதங்களைத் துடைத்தாள் (யோவா 12:2)

அடுத்தநாளில், இயேசு ஒருவரும் ஒருக்காலும் ஏறியிராத கழுதைக்குட்டியின் மீதேறி, வெற்றி வீரராக எருசலேமுக்குப் பவனி வந்தார். அப்போது தங்களின் பரவசத்தை

வெளிப்படுத்த விரும்பிய பெருங்கூட்டம் வஸ்திரங்களை வழியிலே விரித்தது. அத்தோடு திருப்தியடையாமல் மரக்கிளைகளைத் தறித்து வழியிலே பரப்பவும் செய்தது. ''ஓசன்னா என்ற முழக்கம் விண்ணை முட்டியது. வெகு ஜன அங்கீகாரம் வெகுவாய் கிடைத்தது. திரளான ஜனங்கள் முன்னும், பின்னும் வர நகர வீதியில் வலம் வந்தார். எருசலேமில் இருந்த பரிசேயர். சதுசேயர் என்பவர்களின் அசுர செல்வாக்கால் எருசலேமில் இவ்வளவு பெரும் கூட்டம் கூடினதில்லை. ஆகவே, இயேசு எருசலேம் தேவலாயத்துக்குள் பிரவேசித்து எல்லாவற்றையும் சுற்றிப் பார்த்தபோது கூட அவருடைய எதிர்ப்பாளர்களால் அப்போது எதுவும் செய்ய முடியவில்லை . (மாற்கு 11:1–11)

சரி, அன்று இராத்தங்க பெத்தானியாவுக்கு வந்து. மீண்டும் எருசலேமுக்குப் போகும் போதுதான் நமது தலைப்புக்குண்டான சம்பவம் நடந்துள்ளது. மறு நாளிலே அவர்கள் பெத்தானியாவிலிருந்து புறப்பட்டு வருகையில், அவருக்குப் பசியுண்டாயிற்று. அப்பொழுது இலைகளுள்ள ஒரு அத்திமரத்தை தூரத்திலே கண்டு, அதில் ஏதாகிலும் அகப்படுமோ என்று பார்க்க வந்தார். அத்திபழக்கால மாயி ராதபடியால், அவர் அதினிடத்தில் வந்தபோது அதில் இலைகளையல் லாமல், வேறொன்றையும் காணவில்லை. அப்பொழுது இயேசு அதைப் பார்த்து: இது முதல் ஒருக்காலும் ஒருவனும் உன்னிடத்தில் கனியை புசியாதிருக்க கடவன் என்றார். (மாற்கு 11:12 – 14).

இயேசுவின் வார்த்தைகளில் மறைந்திருந்த உண்மையைக் கண்டுபிடிப்பதற்கு அத்திமரத்தைப் பற்றிக் கொஞ்சம் தெரிந்து கொள்வது அவசியம். அத்திமரம் மற்ற மரங்களைக் காட்டிலும் வித்தியாசமானது என்று சொல்வதைவிட விநோதமானது என்று கூறுவதுதான் சரியானது. பொதுவாகவே. உலகில் ஏனைய மரங்கள் அனைத்தும் துளிர்த்து, தழைத்து, பூத்துக் குலுங்கி, பிஞ்சாகி, காயாகி பிறகு கனிகொடுக்கும். ஆனால். பெலஸ்தீனா தேசத்தில் வெகுவாகக் காணப்பட்ட இம்மரங்களோ முற்றிலும் வேறுபட்டு காய்த்து கனிந்த பிறகு இலைகளைக் கொடுக்க ஆரம்பிக்குமாம். ஆக, இம்மரத்தில் இலைகள் இருந்தால் கனிகள் கட்டாயம் இருக்க வேண்டுமென்பது யதார்த்த நிலை. ஒருவன் இம்மரத்தில் கனி இருக்குமா? இருக்காதா? என்பதை இதன் இலைகளைப் பார்த்து தெரிந்து கொள்ள முடியும்.

சரி, இந்த வேதபகுதியிலிருந்து நமக்குப் பயன்படும் மூன்று பாடங்களைக் கற்றுக் கொள்ள முயற்சிப்போம்.

### 1. இயேசு என்ன தேடினார்? – என்ன தேடுகிறார்?

முதலாவது. இயேசு அத்திமரத்தினிடத்தில் என்ன தேடினார்? என்பது .''அப்பொழுது இலைகளுள்ள ஓர் அத்தி மரத்தைத் தூரத்திலே

கண்டு அதில் ஏதாகிலும் அகப்படுமோ என்று பார்க்க வந்தார் (வ.13) ஆம், இயேசு அதனிடம் கனிகளைத் தேடினார். இங்கே ஒன்றைக் கவனியுங்கள். மனுஷர் உள்ளத்திலிருப்பதை அறியும் இயேசுவுக்கு'' (யோவா 2:25) மரத்தில் கனியிருந்திருக்குமா அல்லது இருந்திருக்காதா என்பது தெரியமாலிருக்க வாய்ப்பில்லை. ஆயினும். அதன் புறத்தோற்றம் அப்படியிருந்தபடியால் அவர் தேடினார். அத்திப்பழக்காலமாக இல்லாவிட்டாலும் கூட, அம்மரம் தான் எல்லா அத்தி மரத்தைக் காட்டிலும் விசேஷமானது என்பதைப் போன்று மாயமான ஒரு தோற்றத்தை ஏற்படுத்தியிருந்தது, ஆகவேதான், இயேசு கனிகளைத் தேடினார். ஆனால், அங்கோ கனியில்லை.

இயேசு அத்திமரத்தில் கனியைத் தேடினார் என்பதை விட மாயமான தோற்றத்தோடு சமுதாயத்தில் உலா வந்த யூதர்களிடம் கனிகளைத் தேடினார் என்பதுதான் சரி. யூதர்களிடம் அவர் கனியைத் தேடினதற்கு காரணமும் இல்லாமலில்லை. ஆம். பூமியிலுள்ள சகல ஜனங்களிலும் அவர்கள் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள். அவருக்குச் சொந்தமானவர்கள் (உபா 7:6) ''தேவனாலே பல அற்புதங்களைத் தங்கள் வாழ்க்கையில் கண்டவர்கள் ஆச்சரியமாக வழி நடத்தப்பட்டவர்கள், தேவனின் தெய்வீகப் பாதுகாப்பை அனுபவித்தவர்கள். ஆனால், அவர்களிடமோ, கனியற்ற ஒரு போலி வாழ்க்கைதான் காணப்பட்டது. அவர்களாலே ஒரு அத்திமரம் பட்டுப்போயிற்று பாவம்.

அருமையானவர்களே! அன்று மாயமான தோற்றத்தோடிருந்த '' அத்திமரத்தினிடத்தில் கனிகளைத் தேடின இயேசு, தேவனால் விசேஷமாக தெரிந்துகொள்ளப்பட்ட யூதர்களிடத்தில் கனிகளைத் தேடின இயேசு, இன்று நம்மிடத்தில் கனிகளைத் தேடுகிறார். அன்று தேடினார், இன்று தேடுகிறார். ஆம். கிறிஸ்தவத்தில் நம்பிக்கை கொண்டுள்ள உங்களிடம், கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டுள்ள உங்களிடம், கிறிஸ்துவின் இரத்தத்தால் வாங்கப்பட்ட சபையில் அங்கம் வகிக்கும் உங்களிடம் கனிகளைத் தேடுகிறார்.

நாம் ஆவிக்குரிய இஸ்ரவேலர். தேவனுடைய அநாதி தீர்மானத்தின்படி தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் (எபே 1:4) இயேசுக் கிறிஸ்துவின் சுவிசேஷத்தினாலே அழைக்கப்பட்டவர்கள் (1 தெச 2:14) ஒளியினிடத்திற்கு வரவழைக்கப்பட்டதோடு, ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும். பரிசுத்த ஜாதியாகவும். அவருக்குச் சொந்த மானவர்களாகவும் மாற்றப்பட்டவர்கள் (1 பேது 19) ஆனால், நம்முடைய வாழ்க்கை எப்படியுள்ளது? சிந்திப்போம் இயேசு நம்மிடம் உரிமையோடும் ஆவலோடும் வரும்போது, கனிகளைப் பார்க்கிறாரா? அல்லது இலைகளை மாத்திரம் காண்கிறாரா? நெஞ்சிலே கையை வைத்து நாம் பதில் சொல்வோமானால் நம்மிடம் ஆவியின் கனிகள் அறவே இல்லை என்பதுதான் உண்மை. நம்முடைய பக்தியின் இலட்சணம் இந்தளவு தான் உள்ளது.

## II. இயேசு என்ன கண்டார்? - காண்கிறார்?

கனியை ஆவலோடு தேடி அத்திமரத்தின் அருகில் வந்த இயேசு என்னத்தைக் கண்டார்? வசனம் சொல்வதைக் கவனியுங்கள் இலைகளையல்லாமல் வேறொன்றையும் காணவில்லை'' (வச 13) எப்படிப்பட்ட ஏமாற்றம் பாருங்கள். ஏற்கனவே, சொன்னது போல் அவரை ஏமாற்றியது அத்திமரம் என்று மாத்திரம் நினைத்துக் கொள்ளாதீர்கள். யூத மதத் தலைவர்களும், யூதர்களும் சேர்ந்தே இயேசுவை ஏமாற்றியிருந்தார்கள். மத்தேயு 23ம் அதிகாரம் முழுவதும் அவர்களைத் திட்டித் தீர்த்தே எழுதப்பட்டுள்ளது. அந்த அதிகாரத்தில் உள்ளது போல கடுமையான வார்த்தைகளை இயேசு தனது ஊழியத்தின் பாதையில் பெரும்பாலும் உபயோகித்ததில்லை. அந்த மாயக்காரர்களுடைய வாழ்வில் ஒரு கனி கூட இல்லாமல் இலைகளை மாத்திரம் கண்டதால் தான் அந்தளவு சொற்கள் நமதாண்டவரிடமிருந்து சூடாக வந்துள்ளது.

கிறிஸ்துவுக்குள் அருமையானவர்களே! நம்முடைய வாழ்க்கையில் கிறிஸ்தவத்தின் நம்பிக்கை கொண்டுள்ள நமது வாழ்க்கையில், கிறிஸ்துவின் சபையில் அங்கம் வகிக்கும் பாக்கியம் பெற்ற நமது வாழ்க்கையில், இயேசு இன்றைக்கு என்னத்தைக் காண்கிறார்?

இந்த இடத்தில் நாம் நம்மை தற்பரிசோதனை செய்து பார்ப்பது அவசியம். மெய்யான தேவனை நான் தேவனாகப் பெற்றிருக்கிறேன் என்று மார்தட்டி கொள்கிறோம். பரம் செல்ல கிறிஸ்துவின் மார்க்கம் தான் ஒரே மார்க்கம் என்று பெருமை பேசவும் நாம் தவறுவதில்லை. கர்த்தருடைய சபைதான் உண்மையானது என்று எல்லோரும் அறிந்து கொள்ளவேண்டுமென்று பேராசையும் படுகிறோம். அது மாத்திரமல்ல வேதம் பேசுகிற இடத்தில் நாங்கள் பேசுகிறோம் என்றும், வேதம் பேசாத இடத்தில் நாங்கள் மௌனமாக இருக்கிறோம் என்று தம்பட்டம் அடிக்கவும் செய்கிறோம்.

ஆனால் உண்மை நிலை என்ன? மிகப் பெரும்பாலும் இலைகளுள்ள வாழ்க்கையாகவே உள்ளது. மெய்யான தேவனைப் பற்றிய பயம் நம்மவர்களிடம் மருந்துக்கும் இல்லை. கிறிஸ்துவின் மார்க்கத்தைப் பற்றிய முழு உண்மை தெரியவில்லை. புதிய ஏற்பாட்டுச் சபையின் மேன்மையை விளங்கிக்கொள்ள முடியவில்லை. ஒருவேளை அதை அறிந்திருந்தாலும் அதன்படி வாழ வேண்டுமென்ற வாஞ்சையும் வைராக்கியமும் இல்லை. இவைகளனைத்து இலைகள் மாத்திரமுள்ள வாழ்க்கையின் அடையாளங்களே. இப்படிப்பட்ட வாழ்க்கையை தேவன் ஒரு போதும் ஏற்றுக் கொள்ள மாட்டார்.

அன்று அத்திமரத்தை கண்டு இயேசு ஏமாந்ததைப் போல நம்முடைய வாழ்க்கையைக் கண்டும் ஏமாந்து போவார். அவரை அறிந்து கொள்ளும் வாய்ப்பைப் பெற்றிருக்கும் நாம் அவரை

ஏமாற்றுவது தவறு மாத்திரமல்ல, பாவமும் ஆகும். பாவம் நம்மை நரகத்துக்கு அழைத்துச் செல்லும். ஆகவே. இந்தக் கபட வாழ்வுக்கு இந்நிமிடம் முதல் சாவு மணி அடிப்போம்.

III. **இயேசு என்ன செய்தார்? – என்ன செய்வார்?**

இறுதியாக. நாம் அறிந்துகொள்ள வேண்டியது அத்திமரத்திடம் கனியைத் தேடி இலைகளை மாத்திரம் கண்ட இயேசு என்ன செய்தார் என்று வசனம் சொல்வதை இங்கே பாருங்கள். இதுமுதல் ஒருக்காலும், ஒருவனும் உன்னிடத்தில் கனியைப் புசியாதிருக்கக்கடவன் 14). ஆம், வேஷமிட்ட விருட்சத்தை சபித்தார். நன்மை செய்கிறவராகச் சுற்றித் திரிந்த இயேசு, எவ்வளவு கடுமையாக நடந்து கொண்டார் என்பதை கவனிக்கத் தவறிவிடாதீர்கள். இந்தப் பருவத்திலே மாத்திரமல்ல, ஒருக்காலும் கனியிருக்காது என்றார். மறுநாள் காலையில் பார்க்கும் போது, மரம் பட்டுப்போயிருந்தது என்று வசனம் சொல்கிறது (11:20).

ஏற்கனவே, நாம் பார்த்தது போல அத்திரமரத்தைச் சபித்து அதைப் பட்டுப் போகச் செய்ய வேண்டுமென்பது அவருடைய ஆசையல்ல. ஆனால், தன்னை சுற்றி நின்றவர்களிலும், யூத சமுதாயத்திலும் இருக்கிற ஏராளமான மக்களின் வேஷத்தை, போலியான பக்தியை, மாயமான தோற்றத்தைக் களைந்தெறிய வேண்டுமென்பது அவரின் ஒரே நோக்கம். அங்கே நடப்பதைப் பார்த்து, ஜனங்கள் திருந்தவேண்டுமென்பது அவரின் அதிரடித் திட்டம்.

எனக்கு அன்பானவர்களே! கனியில்லாத அத்திமரத்தையும். தனக்கு உண்மையாயில்லாத இஸ்ரவேல் தேசத்தையும் தண்டித்த நம் ஆண்டவர். நம்மை மாத்திரம் சும்மாவிட்டு விடுவாரா என்ன? அவரை நாம் நீதியுள்ள தேவன் என்று வாய் நிறையச் சொல்கிறோம். அது உண்மையானால் அந்த நீதியை நம்மீது செலுத்தாமல் விடுவாரா? கண்டிப்பாக நீதியாக நியாயந்தீர்த்தே தீருவார். ஆகவே, அன்பானவர்களே! இருதயத்தை சோதித்தறியும் தன்மை கொண்ட தேவனுக்கு முன்பாக நாம் பயந்து நமது வாழ்க்கையில் அவரின் வல்லமையான வசனங்களுக்கு நடுங்கி ஜீவிப்போம். இலைகள் மாத்திரம் உள்ள ஒரு போலியான வாழ்க்கைக்கு முடிவு கட்டிவிட்டு, கிறிஸ்துவில், அவருடைய உபதேசத்தில் நிலைத்திருந்து நிறைந்த கனிகளைக் கொடுத்து சபைக்கும், சமுதாயத்துக்கும், சாட்சியாக வாழ்வோம்.

தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக! ✝

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| ஆத்தும உணர்வுள்ள | Louis Rushmore | ... 1 |
| இலைகளையல்லாமல் வேறொன்றையும் .... | E.Z.S. Rajanayagam | ... 5 |
| ஞானஸ்நானத்தில் என்ன நடக்கிறது? | Jerry Bates | ... 12 |
| நீங்கள் தேவனுடைய வார்த்தையோடு .... | J.C. Choate | ... 15 |
| எனக்காக திறக்கப்பட்டிருக்கும் கதவு | Cliff Holmes | ... 19 |
| ஏன் உவமைகளால் பேசினார்? | P.C. Philemon Rajah | ... 21 |
| ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுங்கள் | Arjunan | ... 26 |
| தளர்ந்து போகாதிருந்தால் ஏற்றகாலத்தில் ... | Benny Martin | ... 31 |

**தேவன் – God**

| | | |
|---|---|---|
| தேவன் இல்லை என்று சொல்லும்போது | Jim Poland | ... 35 |
| துணிச்சல், அன்பு மற்றும் தியாகம் | Charles R. Rose | ... 37 |

**சாட்சியங்கள் – Evidences**

| | | |
|---|---|---|
| சிருஷ்டிப்பின் ஆறு நாட்கள் லட்சக்கணக்கான .... | Kevin L.Moore | ... 41 |
| நான் ஏன் தேவனில் விசுவாசம் வைக்கிறேன் | Michael Hooper | ... 43 |

**தேவனுடைய வார்த்தை – The Word of God**

| | | |
|---|---|---|
| கிறிஸ்துவின் சபை | Wes Mcadams | ... 46 |
| புத்தக மக்கள் | Dan.R.Owen | ... 50 |
| தியானம் | Edward Anderson | ... 52 |

**இரட்சிப்பு – Salvation**

| | | |
|---|---|---|
| நான் எழுந்திருப்பதற்கு முன்பாக மரிக்க .... | Steve. Higgin Botham | ... 57 |
| ஆசையாக ஞானஸ்நானம் | E. Clande Gardnet | ... 60 |
| பரலோகம் : அங்கேதான் இளைப்பாறுதல் | Charles Box | ... 62 |

**சபை – The Church**

| | | |
|---|---|---|
| கிறிஸ்தவம் - தேவனோடு மகிழ்ச்சியான.... | Thomas R. Dohling | ...64 |

செயலில் கிறிஸ்தவம் – Christianity in Action

| | | |
|---|---|---|
| உங்கள் வெளிச்சம் சமுதாயத்தில் பிரகாசி.... | Martha Lynn Rushmore | ... 68 |
| இன்றைய கலாச்சாரத்திற்கு பிரசங்கித்தல் | Andy Rodison | ... 69 |

வாழ்வதற்கான உபதேசம் – Doctrine to Live by

| | | |
|---|---|---|
| கேள்விகள் | David A. Sargent | ... 72 |
| கர்த்தாவே, என்னை கதவினிடத்தில் .... | Patick Morrison | ... 75 |
| திருமுழுக்குப் பெறும்போது புதிய .... | Owen D. Olbricht | ... 77 |

ஆராதனை – Worship

| | | |
|---|---|---|
| ஆராதனையில் கைகளைத்தட்டுவது .... | T. Pierce Brown | ... 80 |
| ஆராதிக்க நீங்கள் எவ்வளவு தூரம் போக .... | Mark T.Tonkery | ... 83 |

அனுதின கிறிஸ்துவ ஜீவியம் – Daliy Christian Living

| | | |
|---|---|---|
| வழக்கமானது | Derek Broome | ... 85 |
| ஜெபம் எனும் சிலாக்கியம் | Jack W. Carter | ... 87 |
| உற்சாகம் | Arlis Richardson | ... 89 |

கிறிஸ்தவ இல்லம் – The Christian Home

| | | |
|---|---|---|
| சிறந்த வீட்டின் நற்குணங்கள் | Jimmy Clark | ... 92 |
| தரமான தலைமைத்துவத்திற்கான ஆறு | Neal Pollard | ... 94 |
| உங்கள் குடும்பத்தின் ஆவிக்குரிய .... | Ken Tyler | ... 96 |

வேதாகம கதாபாத்திரங்கள் – Bible Characters

| | | |
|---|---|---|
| வேதாகமத்தின் மறைக்கப்பட்ட மனிதர்... | Rebecca Rushmore | ... 97 |
| சோதனையில் மகிழ்ச்சியாயிருப்பதற்... | Neal Pollard | ... 101 |
| யார் கிறிஸ்தவன்? | Maxie | ... 104 |

வேதாகம கேள்விகள் – Bible Questions

| | | |
|---|---|---|
| ஏன் அநேகர் சத்தியத்தைக் ... | Ardron Hinton | ... 106 |
| ஓர் உண்மையுள்ள கிறிஸ்தவன்... | Dennis Gulledge | ... 108 |
| உண்மையுள்ள வருகை | Mark N. Posey | ... 109 |



# ஞானஸ்நானத்தில் என்ன நடக்கிறது?

## What Happens In Baptism?

*Jerry Bates*

**ஞா**னஸ்நானத்தைக் காட்டிலும் மிகவும் சர்ச்சைக்குரிய சில மத சம்மந்தமான செயல்பாடுகள் இருக்கத்தான் செய்கின்றன. ஞானஸ்நானத்திற்கும், நம் இரட்சிப்பிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று கிறிஸ்தவ உலகில் பலர் நம்புகின்றனர். அதில் பெரும் பாலானோர் ஏற்கனவே நம் இருதயங்களிலும், வாழ்க்கையிலும் உண்டான பாவமன்னிப்பு போன்றவைகளை வெளிக்காட்ட ஞானஸ் நானம் என்பது ஓர் அடையாள சடங்காச்சாரம் என்று சொல்கிறார்கள். இந்த மனப்பான்மைக்கு எதிராக ரோமர் 6:3–4 வசனங்களைத் தவிர வேறு எந்த வசனப்பகுதியும் பேசவில்லை. கிறிஸ்து இயேசுவுக் குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக் கிறீர்களா? மேலும், பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித் தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, நாமும் புதிதான ஜீவனு ள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு அவருடைய மரணத்திற் குள்ளாக்கும். ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம் (ரோமர் 6:3,4).

ரோமர் 6 ஆம் அதிகாரம் ஞானஸ்நானத்தைப் பற்றியது அல்ல என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இது பாவத்தைப் பற்றிய அதிகாரமாகும். இவ்வதிகாரத்தில் பாவம் என்னும் வார்த்தை 16 முறை வருகிறது. பவுல், கிறிஸ்தவர்கள் ஞானஸ்நானம் பெற்ற போது என்ன நடந்தது என்பதை நினைத்துப் பார்க்கும்படியாக உற்சாகப் படுத்துகிறார். இயேசு கிறிஸ்துவின் தியாகத்தில் விசுவாசம் வைப்பது நம்முடைய மன்னிப்புக்கான அடிப்படையாக இருக்கிறது எனும் உண்மையை யாரும் கேள்வி கேட்பதாக எனக்குத் தெரியவில்லை. ஆகவே, இப்போது கேள்வி என்னவென்றால், நம்முடைய பாவங்கள் எப்போது மன்னிக்கப்படுகின்றன?

நம்முடைய பாவங்கள் ஞானஸ்நானத்தில் மன்னிக்கப்படுவதாக பவுல் சொல்கிறார். ஞானஸ்நானம் ஒரு சடங்காச்சாரத்தை விட மேலான செயலாகும். இது கீழப்படியும்படியான ஒரு சரீரப் பிரகாரமான செயல்மட்டுமல்ல. ரோமர் 6:2 ல் பவுல். நாம் இயேசு கிறிஸ்துவுக் குள்ளாக ஞானஸ்நானம் பெறுவது மட்டுமல்ல, அவருடைய மரணத் துக்குள்ளாகவும் ஞானஸ்நானம் பெறுகிறோம் என்று அறிவிக்கிறார்.

பெரும்பாலான மக்கள் நம்முடைய பாவங்களை உண்மையாகவே கழுவி சுத்திகரிப்பது இயேசு கிறிஸ்துவின் இரத்தம்தான் என்பதை ஏற்றுக்கொள்வார்கள் [வெளிப்படுத்தின விசேஷம் 1:5]. ஆனால், இயேசுவின் இரத்தத்தோடு ஒருவர் எப்படி தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள முடியும்? கிறிஸ்துவின் இரத்தம் சிலுவையில் சிந்தப்பட்டது. நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மரித்த போது போர்ச்சேவகரில் ஒருவன் ஈட்டியினாலே அவருடைய விலாவில் குத்தினான்; உடனே இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டது [யோவான் 19:34] நாம் நானஸ்நானம் பெற்றபோது அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றோம், அங்கே தான் கிறிஸ்துவின் இரத்தம் சிந்தப்பட்டது. இவ்விதமாக தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளாமல் யாரும் இரட்சிக்கப்பட முடியாது. இயேசுவின் இரத்தத்தோடு தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளாமல் யாரும் இரட்சிக்கப்படவே முடியாது.

ஞானஸ்நானத்திற்குப் பிறகு புதிதான ஜீவனுள்ளவர்களாக நடந்து கொள்ளும்படிக்கு எழுந்திருக்கிறோம் என்று பவுல் சொல்கிறார். மேலும், பவுல் சொல்லும்போது ஞானஸ்நானம் என்பது நடை முறையில் இயேசு கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலின் மறு சிருஷ்டிப்பு என்று சொல்கிறார். நம் இரட்சகர் புதிதாக ஓர் உயிர்த்தெழுந்த வாழ்க்கையை வாழும்படிதான் அவர் தன் சரீரப்பிரகாரமான வாழ்க்கையை முடித்தார். அதே விதமாக நாம் பாவத்திற்கு மரித்து, நம் கடந்தகால வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்து தூய்மையான புதிய வாழ்க்கையை தொடங்குகிறோம். இது ஞானஸ்நானத்தைப் பழைய வாழ்க்கை முடிந்து புதிய வாழ்க்கை தொடங்கும் ஒரு புள்ளியாயிருக்கிறது. இப்படியிருக்க ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின [II கொரிந்தியர் 5:17]. அதன் விளைவாக இயேசுவுக்கென்று ஒரே சிந்தையோடு அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கையை வாழ்கிறோம்.





ஞானஸ்நானத்தின் போது என்னவெல்லாம் நடக்கும் என்று பவுல் எழுதும் காரியங்களையெல்லாம் ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால் ஞானஸ்நானம் வெறும் சடங்காச்சாரம் அல்லது ஓர் அடையாளம் என்று ஒருவரால் எப்படிச்சொல்ல முடியும்? அது ஓர் அடையாளமாக இருநதாலும் கூட அது எதை அடையாளப்படுத்துகிறதோ அது நடந் தேறுகிறது. எந்த ஒரு மனிதனுடைய வல்லமையினாலோ அல்லது தண்ணீராலோ அல்ல, அது தேவனுடைய வல்லமையால் நடக்கிறது. ✝

---

**கிறிஸ்துவின் மூன்று ஊழியங்கள்**
**( எபி. 1:2,3)**

*தீர்க்கதரிசன ஊழியம்*

*ராஜ ஊழியம்*

*ஆசாரிய ஊழியம்*



1932—2008

# நீங்கள் தேவனுடைய வார்த்தையோடு வாக்குவாதம் செய்யமுடியாது

## You Can`t Argue With Gods Word

### *J.C. Choate*

**பெ**ரும்பாலான ஜனங்கள் தங்கள் நம்பிக்கை, நடைமுறை அல்லது சூழ்நிலைக்குப் பொருந்துகிற விதமாக தேவனுடைய வார்த்தையின் ஒரு பகுதியைத் தான் விரும்புகிறார்கள். இதனால் தான் அவர்கள் வேதாகமத்தின் ஒரு பகுதியை ஏற்றுக்கொண்டு, மறு பகுதியைத் நிராகரிக்கிறார்கள். இதனால், அவர்கள் விளக்கமளிக்க, வாக்குவாதம்பண்ண, காரணகாரியங்களை விவரிக்க முயற்சிக் கிறார்கள். இது பரிசுத்த வேத வாக்கியங்களை தவறாகப் பயன்படுத்து வதாகும். நமக்கு உண்மை தேவை, நாம் அங்கேயே நிற்கக்கூடாது. ஒவ்வொரு வசனத்திலுமுள்ள உண்மையை ஏற்றுக் கொள்ள வேண்டும். அதுவும் குறிப்பாக, ஒரு வேத வாக்கியத்தில் முழு உண்மை தேவை. நமக்கான கர்த்தருடைய சித்தத்தை நாம் முழுமையாக அறிந்து கொள்ள வேண்டும். தேவனுடைய வார்த்தை யின் ஒரு பகுதியை நாம் வேண்டுமென்றே அறியாமல் இருப்பதோ அல்லது அதை நிராகரிப்பதோ நமக்கும், வேறு யாருக்கும் எந்த உதவி யையும் செய்யாது. பாதி உண்மை என்பது எப்போதும் போதுமானதல்ல.

ஒருவர் இரட்சிக்கப்பட அவர் செய்ய வேண்டியதெல்லாம் விசுவாசிப்பது தான் என்று போதிக்கிறவர்களும் இருக்கிறார்கள். (யோவான் 3:16;3:36 மற்றும் அப்போஸ்தலருடைய நடபடிகள் (16:31) போன்ற வசனங்களை இதற்கு ஆதாரமாக காட்டுகிறார்கள். மற்ற வசனங்கள் போதிக்கிற காரியங்களை கணக்கில் எடுத்துக் கொண் டால் இரட்சிக்கப்பட தேவன் இவைகளை மாத்திரம் தான் எதிர் பார்க்கிறாரா எனும் ஒரு வாக்குவாதம் உண்டாகலாம். ஒருவர் இரட்சிக்கப்பட வேண்டுமா, இல்லையா என்பதைப் பற்றி எந்த வாக்குவாதமும் தேவையில்லை. ஒருவர் இரட்சிக்கப்பட

விசுவாசிக்க வேண்டுமென்று வேதவாக்கியங்கள் போதிக்கின்றன. ஆனால், ஆத்தும இரட்சிப்பு என்று வரும் போது இந்த வசனங்களை மாத்திரம் நாம் கருத்தில் கொள்ளக் கூடாது. விசுவாசத்தினாலே மாத்திரம் எனும் போதனையை போதிப்பவர்கள், இந்த வசனங்களை ஓர் ஓரமாக வைத்துவிட்டார்கள். ஒரு வேளை அவர்கள் விசு வாசத்தின் அர்த்தத்தை ஒரு எல்லைக்குட்படுத்தி தவறாகப்புரிந்து கொண்டிருக்கலாம்.

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மனந்திரும்பாமற்போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள் என்று சொன்னார் (லூக்கா 13:3). தேவன் எங்குமுள்ள மனுஷரெல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று கட்டளையிடுகிறார் (அப்போஸ்தலர் 13:30). மனமந்திரும்புதலுக்கான அவசியத்தை வலியுறுத்தும் வேறு சில வசனப்பகுதிகளும் உண்டு. ஒருவர் இரட்சிக்கப்படும்படியாக அவர் செய்யும் மிக முக்கியமான செயல் தன் பாவங்களிலிருந்த மனந்திரும்புவது தான் என்று சிலர் முடிவுக்கு வரலாம். அதே நேரத்தில் இரட்சிக்கப்படும்படி ஒருவர் மனம் திரும்புவதற்கு அதிகமாக செய்ய வேண்டுமென்று வாக்குவாதம் செய்யலாம். எது எப்படியிருந்தாலும் ஒரு பாவி தன் பாவங்களிலிருந்த மனம்திரும்ப வேண்டுமென்று தேவன் எதிர்பார்ப்பதில் எந்த மாறுபாடும் இருக்க முடியாது.

பல வசனப்பகுதிகள் ஞானஸ்நானத்தின் அவசியத்தை வலியுறுத்துகின்றன அப்போஸ்தலர் 22:16; ரோமர் 6:3). அப்படியென்றால், இதன் ஞானஸ்நானம் மாத்திரம் ஒருவரை இரட்சிக்கிறது என்று பொருள்படுமா? விசுவாசம் தேவையில்லையா? மனந்திரும்புதல் தேவையில்லையா? இக்கேள்விகள் எல்லாம் கொண்டு வரப்பட்டு விவாதிக்கப்படும். அதனால் ஒருவர் தேவனுடைய சித்தத்தின் எல்லா உண்மையையும் ஏற்றுக் கொள்கிறதாக இருந்தால் ஞானஸ்நானத்தின் அவசியத்தைப் பற்றி எந்த சந்தேகமும் இருக்கமுடியாது.

அப்போஸ்லதலனாகிய பேதுரு பெந்தேகொஸ்தே நாளிலே நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள் என்று சொன்னார் (அப்போஸ்தலர் 2:38). இங்கே விசுவாசத்தைப்பற்றி எதுவும் சொல்லப்படாவிட்டாலும் கூட இரட்சிப்பை பற்றி கேட்கப்பட்ட

கேள்வி அந்த ஜனங்கள் ஏற்கனவே விசுவாசித்தார்கள் என்று தெளிவாக காட்டுகிறது. இருந்தபோதிலும் எந்தக் கேள்விகளெல்லாம் கேட்கப்பட்டிருக்கிறது என்பதை பொருட்படுத்தாமல் எழுப்பப்படும் கேள்வி என்னவென்றால், நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொரு வரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள். இந்தக் கட்டளையைக் குறித்து எந்த விவாதமும் இருக்க முடியாது. நம்மால் செய்ய முடிந்ததெல்லாம் அதை அப்படியே ஏற்றுக் கொள்வது தான்.

நாம் இரட்சிப்பின் திட்டத்தைக் குறித்து படிக்கிறதாக இருந்தாலும் சரி அல்லது வேறு ஏதாவது பாடத்தைக் குறித்து படிப்பதாக இருந் தாலும் சரி ஒவ்வொரு வசனத்திலுமுள்ள எல்லா உண்மையையும் ஏற்றுக் கொண்டு ஒவ்வொரு வேத வாக்கியத்திலும் உள்ள கட்டளை யையும் ஏற்றுக்கொள்ளும் மனநிலையோடு வேத பாடத்தை அணுக வேண்டும்.

நிச்சயமாகவே, நம் கர்த்தர் எல்லா உண்மையையும் ஒரே வசனத்தில் கொடுக்கவில்லை. அதே போல் தேவன் சுவிசேஷத்தின் எல்லாக் கட்டளைகளையும் ஒரே வசனத்தில் கொடுக்கவில்லை. ஒரு குறிப்பிட்ட பாடத்தை குறித்து அறிய ஒரு வசனமோ அல்லது இரண்டு வசனமோ போதுமானதல்ல. எல்லா தேவனுடைய வார்த்தையையும் படித்து அதை ஒருங்கிணைக்க வேண்டும். ஒரு வசனத்தில் இடம் பெற்றுள்ள எல்லா உண்மையையும் ஏற்றுக் கொண்டு அடுத்த வசனத்திற்குள் கடந்து செல்ல வேண்டும். இப்படி நாம் செய்வதன் மூலமாக தேவன் நம்மிடமிருந்து எவைகளையெல்லாம் எதிர்பார்க்கி றாரோ அவைகளைளெல்லாம் நாம் காண முடியும். முழு சத்தியத் தையும் அல்லது உண்மையையும் விசுவாசித்து அதற்கு கீழ்ப்படிந்தால் மட்டுமே நாம் இரட்சிக்கப்பட முடியும். இதைக்குறித்து எந்த தர்க்கமும் இருக்கமுடியாது.

நிச்சயமாகவே, நம் வாழ்க்கையில் தேவனுடைய வார்த்தையோடு வாக்குவாதம் செய்யும் தர்மசங்கடமான ஒரு சூழ்நிலைக்கு தள்ளப்பட வேண்டாம். அதே போல் நாம் ஏற்கனவே ஏற்றுக்கொண்ட சத்தியத்தில் நிலைத்திருக்கத்தக்க வேத வாக்கியங்களில் இடம் பெற்றுள்ள சத்தியத்தை நிராகரிக்கும் ஒரு சூழ்நிலைக்கும் தள்ளப்பட வேண்டாம். நாம் அப்படிச் செய்தால் எப்போதுமே நாம் தோற் கிறவர்களாக இருந்து, கடைசியாக தேவனுடைய வார்த்தையின் ஒரு பகுதியை நிராகரிக்க அந்தத் தீர்மானம் நம் ஆத்துமாக்களை நித்திய நித்தியமாக இழந்து போகச் செய்துவிடும். மனிதப்பெருமை அல்லது பிடிவாதத்திற்கு நாம் கொடுக்க வேண்டிய விலை எவ்வளவு கொடுமையானது பாருங்கள்!



இச்சந்தர்ப்பத்தில் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகளை நினைத்துப் பார்ப்பது மிகவும் அவசியமாயிருக்கிறது. என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது. நான் சொன்ன வசனமே அவனை கடைசி நாளில் நியாயந்தீர்க்கும். நான் சுயமாய் பேசவில்லை, நான் பேச வேண்டியது இன்னதென்றும் என்னை அனுப்பிய பிதாவே எனக்குக் கட்டளையிட்டார். அவருடைய கட்டளை நித்திய ஜீவனாயிருக்கிறதென்று அறிவேன். ஆகையால், நான் பேசுகிறவை களைப் பிதா எனக்குச் சொன்னபடியே பேசுகிறேன் என்றார் (யோவான் 12:48 – 50).

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவிற்கே தேவனுடைய செய்தியை மாற்றும் துணிச்சலில்லாத போது, நிச்சயமாகவே எந்த ஒரு மனிதனும் இத்தகைய துணிச்சலான காரியத்தை செய்யத் துணிய மாட்டான். ✝

**நீங்கள் தொலைந்து போய்விட்டீர்களா? உங்களுக்கு தேவை தேவனுடைய GPS Gods Plan Of Salvation. அதாவது, தேவனுடைய இரட்சிப்பின் திட்டம் சுவிசேஷத்தை கேள்விப்படுங்கள். சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்; உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்புங்கள், கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிடுங்கள். அவரோடு ஞானஸ்நானத்தில் அடக்கம் பண்ணப்படுங்கள். இதன் விளைவு இரட்சிப்பு.**

# எனக்காக திறக்கப்பட்டிருக்கும் கதவு

**Cliff Holmes**



கடினமான காலக்கட்டங்களில்
கரடுமுரடான பாதைகளில்
எனக்காக ஒரு கதவு திறக்கப்பட்டிருக்கிறது.

மலைகள் செங்குத்தாக காணப்படும்போது
பள்ளத்தாக்குகள் ஆழமாக காணப்படும்போது
எனக்காக ஒரு கதவு திறக்கப்பட்டிருக்கிறது.

ஆத்துமாக்கள் இழந்துபோகும்போது
அவர்கள் செல்லுஞ்செலவை கணக்குப் பார்க்காதபோது
எனக்காக ஒரு கதவு திறக்கப்பட்டிருக்கிறது.

நான் எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுபடும்போது
உள்ளே வரும்படி கட்டளைபெறும்போது
எனக்காக ஒரு கதவு திறக்கப்பட்டிருக்கிறது.

என் பயணம் முடிவடையும்போது
என் இயேசுவை அவர் எனக்காக திறக்கும் கதவு வழியாக
முகமுகமாய் என் நேசரை தரிசிப்பேன்.

# ஏன் பவுல் சிலுவையில் மேன்மைப் பாராட்டினார்?
# கலாத்தியர் 6:14





பவுல் சிலுவையில் அறையப்பட்டிருந்த நபரை அறிந்திருந்தார்
பவுல் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கித்தார் (I கொரிந்தியர் 1:23).

பவுல் சிலுவையின் வல்லமையை அறிந்திருந்தார்.

சிலுவைக்கு இழுக்கும் வல்லமை உண்டு
யோவான் (12:32)

பவுல் சிலுவையின் நோக்கத்தை அறிந்திருந்தார்.
சிலுவை புதிய ஜனங்களை கிறிஸ்துவுக்குள் கொண்டு வந்தது (கலாத்தியர் 6:16)

# ஏன் உவமைகளால் பேசினார்?

Why Did he Speak in Parables?

Bro. P.C. **பிலேமோன் ராஜா**

**உ**வமைகளைத் திறமையாகப் பயன்படுத்தி கற்பிப்பதில் ஆண்டவருக்கு நிகர் அவரே! இன்றும் அவருடைய உவமைகள் மக்களுடைய மனதில் பசுமையாக இருக்கின்றன. இந்தக் கற்பிக்கும் உத்தியை இயேசு, ஏன் அடிக்கடி பயன்படுத்தினார்? அவருடைய உவமைகள் சக்தி வாய்ந்தவையாக இருந்ததற்கு என்ன காரணம்? என்பதை அறிவோம்.

**ஆண்டவரும் அவரின் உவமைகளும்**

நம்மில் அநேகருக்கு கிடைக்காத ஓர் அரிய பாக்கியம், ஆண்டவர் இயேசுவுடன் பயணம் செய்த சீடர்களுக்குக் கிடைத்தது. இந்த உலகின் ஒப்பிடமுடியாத, மிகச்சிறந்த, உன்னதமான போதகரிடமிருந்து அவர்கள் நேரடியாகக் கற்றுக்கொண்டனர். கடவுளுடைய வார்த்தையில் பொதிந்துள்ள அர்த்தத்தையும், மெய்சிலிர்க்க வைக்கும் சத்தியங்களையும், அவர் விளக்குகையில், அவருடைய குரலை நேரடியாகக் கேட்டனர். அந்த குரலின் கனிவையும், அதிகாரத்தையும் ஒரு சேரக் கேட்டனர்.

நமது ஆண்டவர், தாம் கற்பிக்கும் விஷயங்கள் அனைத்தும், கற்றுக் கொள்பவர்களாகிய தம் அடியார்களின் மனதைவிட்டு நீங்காமலிருக்க, ஓர் எளிய வழிமுறையைக் கையாண்டார். அது தான் உவமைகள்! அவர் உவமைகளைத் திறமையாகப் பயன்படுத்தி, மிகச்சிறப்பாக தம்முடைய அடியார்களுக்கு அன்று கற்பித்தார். கற்றுக்கொள்ளும் மனதுடன் அவரிடம் வருகின்ற அனைவருக்கும் பைபிளின் வாயிலாக இன்றும் கற்பிக்கின்றார், இனியும் கற்பிப்பார்.

அவருடைய உவமைகள் பெரும்பாலும், பரலோக அரசை மையப்படுத்தியே இருந்தன. பரலோக அரசையும், பரலோக மகிமையையும், பரலோக கடவுளையும் அவருடைய அன்பையும் விளங்க செய்வதற்காக, அவர் உவமைகளை மிகவும் நேர்த்தியாக பயன்படுத்தி போதித்தார். தாம் நன்கு அறிந்ததை, அறியாத தம் சீடர்களுக்கு உவமையின் மூலம் அறிவித்தார். ஏனெனில், மனதைத் தூண்டும் உவமைகளை மக்கள் எளிதில் மறக்க மாட்டார்கள்.

உவமைகள் என்பவை சிறு கதைகளாகும். வார்த்தைகளைவிட உவமைகளே, இறைவனையும் வாழ்வின் நோக்கத்தையும் நாம் நன்றாக அறிய உதவுகின்றன. கதையாகவும் படமாகவும் நம் உள்ளத்தில் என்றும் அழியாமல் நிலைநிற்கின்றன. அநேக புத்தகங்கள்

இல்லாத காலத்தில் இயேசு, உவமைகள் வாயிலாக மக்கள் உள்ளத்தில் சத்தியத்தை விதைத்தார். அவர் கூறிய உவமைகளில் ஆழ்ந்த கருத்துக்களும், உயர்ந்த பாடங்களும் ஒப்புமையாகக் கூறப்பட்டிருக்கின்றன. இயேசுவின் உவமைகள், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக அவர் நேரடியாக யூதர்களிடம் கூறினாலும், அந்த உவமைகள் அனைத்துக் காலங்களுக்கும், பல்வேறு நாடுகளில் வாழ்கின்ற அனைத்து மனிதர்களுக்கும் பொருந்துவதாகவே இருக்கின்றன.

**தீர்க்கத்தரிசினத்தின் நிறைவேற்றம்**

மத்தேயு 13:34,35 இவைகளையெல்லாம் இயேசு ஜனங்களோடே உவமைகளாகப் பேசினார்; உவமைகளினாலேயன்றி, அவர்களோடே பேசவில்லை. என் வாயை உவமைகளில் திறப்பேன்; உலகத்தோற்ற முதல் மறைபொருளானவைகளை வெளிப்படுத்துவேன் என்று தீர்க்கதரிசியால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது.

முதலாவதாக, ஆண்டவர் இயேசு தன்னை குறித்து சொன்ன தீர்க்கத்தரிசனங்களை நிறைவேற்றுவதற்காக உவமைகளை பயன்படுத்தினார். உவமைகளைப் பயன்படுத்தியே மேசியா பேசுவார் என நூற்றுக்கணக்கான வருடங்களுக்கு முன்பே பரலோக கடவுள் தம்முடைய தீர்க்கத்தரிசிகளைக் கொண்டு சொல்லியிருந்தார். அப்படியானால், இந்தக் கற்பிக்கும் உத்தியை பரலோக கடவுளே உயர்வாய் கருதியுள்ளார் என்று தெளிவாகப் புரிந்துகொள்ள முடிகின்றது. சங்கீதம் 78:1-2 என் ஜனங்களே, என் உபதேசத்தைக் கேளுங்கள்; என் வாயின் வசனங்களுக்கு உங்கள் செவிகளைச் சாயுங்கள், என் வாயை உவமைகளால் திறப்பேன்; பூர்வகாலத்து மறைபொருள்களை வெளிப்படுத்துவேன்.

தன்னைக் குறித்து சொன்ன தீர்க்கத்தரிசனங்களை ஆண்டவர் நிறைவேற்றினார் என்பதிலிருந்து, தேவனுடைய வார்த்தைகளை நிறைவேற்றுவதில் அவருக்கு இருந்த முனைப்பையும், நாம் நம்மை குறித்துச் சொல்லப்பட்டுள்ள கடவுளுடைய வார்த்தைகளின்படி நடக்க வேண்டும் என்பதனையும் தெளிவாக நம்மால் அறிந்து கொள்ள முடிகின்றது. யோவான் 10:27 என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது; நான் அவைகளை அறிந்திருக்கிறேன், அவைகள் எனக்குப் பின்செல்லுகிறது என்றார்.

கடவுளுடைய வார்த்தைகளின்படி நடப்பது மிகவும் கடின மானதல்ல என்பதனை நாம் விசுவாசிக்க வேண்டும். 1 யோவான் 5:3 நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்புகூருவதாம்; அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல.

மேலும், அவைகள் இலகுவானவைகள் மற்றும் மெதுவானவைகள் என்று ஆண்டவர் இயேசுவும் சொன்னார். [மத்தேயு 11:29-30] நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது என்றார்.

மேலும், பிசாசின் தூதுவர்கள் போல சிலர், 'அதெல்லாம் கடவுளுடைய வார்த்தையின்படி எல்லாம் வாழ முடியாது' என்றும், 'யாராவது வாழ்கிறார்களா? அவர்களை காண்பி!' என்றும் சொல்லி, நம்மை தேவ சட்டத்திற்கு கீழ்ப்படிய விடாமலும், தேவ திட்டத்திற்கு ஒப்புக்கொடுக்கவிடாமலும் தடை செய்வார்கள். கவனம் தேவை 1பேதுரு 5:8 'தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான். விசுவாசத்தில் உறுதியாயிருந்து, அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள்; உலகத்திலுள்ள உங்கள் சகோதரிடத்திலே அப்படிப்பட்ட பாடுகள் நிறைவேறிவருகிறதென்று அறிந்திருக் கிறீர்களே.

### மறைபொருள்களை வெளிப்படுத்துதல்

இரண்டாவதாக, ஆண்டவர் இயேசு மறைபொருள்களை வெளிப்படுத்த உவமைகளை பயன்படுத்தினார். மத்தேயு 13:35 என் வாயை உவமைகளினால் திறப்பேன்; உலகத்தோற்ற முதல் மறைபொருளானவைகளை வெளிப்படுத்துவேன் என்று தீர்க்கதரிசியால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது.

இந்த உலகம் படைக்கப்பட்ட நாள் முதல், பரலோக கடவுளால் மறைக்கப்பட்ட காரியங்களை, அதாவது, பரலோக கடவுளின் மனதிற்குள் இருந்த மகிமையான சத்தியங்களை, அவருடைய ஏக புத்திரனாகிய ஆண்டவர் இயேசு தனது உவமைகளால் வெளிப் படுத்தினார். உபா 29:29 மறைவானவைகள் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள்; வெளிப்படுத்தப்பட்டவைகளோ, இந்த நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளின் படியெல்லாம் செய்யும்படிக்கு, நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் என்றென்றைக்கும் உரியவைகள்.

ஆகையால், நம்மில் யாரும், நூதனமாக (புதியதாக) ஒன்றை பிதா வெளிப்படுத்துவார் என எண்ணிக்கொள்ள வேண்டாம். நாம் பரலோகம் செல்லும்படியாக, வேண்டிய யாவற்றையும் கிறிஸ்து வெளிப்படுத்தி விட்டார். எழுதப்பட்டுள்ள பரிசுத்த ஆவியானவரின் வேத வாக்கியங்களை மிஞ்சி யோசிக்காமலும் (1கொரி 4:6), அவைகளோடு ஒன்றையும் கூட்டாமலும், ஒன்றையும் குறைக்காமலும் (வெளி 22:18-19) இருப்போம்.

2000 ஆண்டுகளுக்கு முன்பு பவுல் அத்தேனே பட்டணத்திற்கு சென்ற போது, அந்த மக்கள் எப்படி நூதனமான காரியங்களை பேசவும், கேட்கவும் விரும்பியது போலவே, இன்றைய நாட்களிலும் கிறிஸ்தவ மத வட்டாரத்திலே அநேகர் இருக்கின்றனர். வேதாகமத்திற்கு விரோதமான போதனையா? இல்லையா? என யோசிக்காமல், அப்படிப்பட்ட காரியங்களை கேட்பதில் ஆர்வம் காண்பிக்கின்றனர். அதன் விளைவு , மன்னித்துக் கொள்ளுங்கள், அந்த சொறிப்பிடித்த காதுகளுக்கு ஏற்றபடி பேச, ஆயிரக்கணக்கான கள்ள போதகர்கள் உருவாகி, அவர்கள் நூற்றுக்கணக்கான கள்ள சபைகளை பிறப்பித்துள்ளனர். அநேகர் தங்கள் அறியாமையினாலும், அதிக ஆர்வக் கோளாறினாலும் பரலோக கடவுளுடைய நாமம் தூஷிக்கப் படவும், அவரது திட்டமும், சித்தமும் செயல்படத் தடையாகவும் ஆகிவிட்டனர் என்பது மிகவும் வேதனையான காரியமாகும்.

**பெருமையானவர்களுக்கு மறைத்தல்.**

மூன்றாவதாக, ஆண்டவர் இயேசு, மனம் 'இறுகிப் போயிருந்தவர்கள்; அதாவது சத்தியத்தை அறிந்துக்கொள்ள விருப்ப மில்லாதவர்கள், சத்தியத்தினை அறிந்துக்கொள்ளாமலிருக்க உவமைகளைப் பயன்படுத்தினார். மத்தேயு 13:10-12 அப்பொழுது, சீஷர்கள் அவரிடத்தில் வந்து: ஏன் அவர்களோடே உவமைகளாகப் பேசுகிறீர் என்று கேட்டார்கள். அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: பரலோக ராஜ்யத்தின் ரகசியங்களை அறியும்படி உங்களுக்கு அருளப் பட்டது, அவர்களுக்கோ அருளப்படவில்லை. உள்ளவன் எவனோ அவனுக்குக் கொடுக்கப்படும், பரிபூரணமும் அடைவான்; இல்லா தவன் எவனோ அவனிடத்தில் உள்ளதும் எடுத்துக் கொள்ளப்படும்.

ஆண்டவர் சில சமயம், அவர் சொன்ன உவமையின் முழு அர்த்தத்தையும் புரிந்துகொள்வதற்கு, மக்களே வந்து அவரிடம் விளக்கம் கேட்கும்படி அவர் எதிர்பார்த்தார். மனத்தாழ்மையுள்ளவர்கள் அவரிடம் வந்து விளக்கம் கேட்டார்கள். அகந்தையுள்ளவர்களோ அப்படிக் கேட்க மனமில்லாமல் இருந்தார்கள் (மத்தேயு 13:36: மாற்கு 4:34). சத்தியத்தை அறிய வேண்டுமென்ற தாகம் இருந்தவர்களுக்கு ஆண்டவரின் உவமைகள் சத்தியத்தை வெளிப்படுத்தின. ஆனால் கர்வம் பிடித்தவர்களுக்கு அவைகள் மறைபொருளாகவே இருந்தன.

ஆண்டவர் ஒருமுறை பன்றிகளுக்கு முன்பாக முத்துக்களை போட வேண்டாம் என தம் சீடர்களை எச்சரித்தார். ஏனெனில், அந்த முத்துக்களை அவைகள் பயன்படுத்த அறியாதவை மற்றும் அவைகளின் மதிப்பும், மகிமையும் அறியாததினால் அவைகள் அதனை வீணாக்கிவிடும் என்றார். மத்தேயு 7:6 பரிசுத்தமானதை நாய் களுக்குக் கொடாதேயுங்கள்; உங்கள் முத்துகளைப் பன்றிகள் முன் போடாதேயுங்கள்; போட்டால் தங்கள் கால்களால் அவைகளை மிதித்து, திரும்பிக்கொண்டு உங்களைப் பீறிப்போடும்.

பெருமை என்பது பிசாசின் குணம். ஆகையால், பெருமை யுள்ளவர்கள் ஒருபோதும் கற்றுக்கொள்வதில்லை, அவர்கள் கற்க கூடாதபடி பெருமை தடை செய்கின்றது. தாழ்மை என்பது சர்வவல்ல ஆண்டவரின் குணம் [மத் 11:29]. அது நம்மை கற்றுக் கொள்ளவும், கற்றதை கடைப்பிடிக்கச் செய்து கீழ்ப்படிதலுக்கு நேராக வழிநடத்தும்.

✝

---

**கிறிஸ்து மேலானவர் – எபிரெயர் நூலில்**

- ☞ **தீர்க்கதரிசிகளைக் காட்டிலும் மேலானவர் - (1:1-2)**
- ☞ **தேவதூதர்களை காட்டிலும் மேலானவர் - (1;4-2:18)**
- ☞ **மோசேயைக் காட்டிலும் மேலானவர் - (3:1-19)**
- ☞ **யோசுவானைக் காட்டிலும் மேலானவர் - (4:1-13)**
- ☞ **பழைய ஏற்பாட்டு ஆசாரியத்துவத்தைக் காட்டிலும் மேலானவர் (4:14-7:28)**
- ☞ **ஒட்டுமொத்த யூத நடைமுறையைக் காட்டிலும் மேலானவர் (8:1-10:18)**
- ☞ **பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களைக் காட்டிலும் மேலானவர் (11:1-12:3)**

# ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுங்கள்

## Exhort One another

Bro. **அர்ஜுனன்**

**நா**ம் ஒருவருக்கொருவர் ஏன், எதற்கு, எப்படி புத்தி சொல்ல வேண்டும் என்ற காரியங்களைக் குறித்து தியானிக்க உள்ளோம்.

**முதலாவது, ஏன் ஒருவருக்கொருவர் புத்திசொல்லவேண்டும்?** கர்த்தருடைய வேதத்தில் படிக்கிறோம் ''உங்களில் ஒருவனாகிலும் பாவத்தின் வஞ்சனையினாலே கடினப்பட்டுப் போகாதபடிக்கு, இன்று என்னப்படுமளவும் நாடோறும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுங்கள்'' [எபி.3:13]. ஒருவனாகிலும் கெட்டுப்போவதை தேவன் விரும்பவில்லை. ஆகையால், ஒருவனாகிலும் பாவத்தின் வஞ்சனையினாலே கடினப்பட்டுப் போகாதபடிக்கு நாம் புத்தி சொல்ல வேண்டியவர்களாயிருக்கிறோம். பாவத்தின் விளைவால் ஆதாமும் ஏவாளும் ஏதேன் தோட்டத்திலிருந்து துரத்தப்பட்டார்கள். அவர்கள் பாவத்தின் வஞ்சனையினால் ஏமாற்றப்பட்டார்கள். அதைப்போல மீண்டும் வஞ்சிக்கப்பட்டு போகாதிருக்க ஒருவருக்கொருவர் புத்தி சொல்லவேண்டியது அவசியம்.

மூடன் தன் தகப்பன் புத்தியை அலட்சியம்பண்ணுகிறான்; கடிந்துகொள்ளுதலைக் கவனித்து நடக்கிறவனோ விவேகி'' [நீதி.15:5]. இன்றைக்கு அநேகர் புத்திமதிகளை ஏற்க மறுக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் மூடர்கள் என காண்கிறோம். ஆனால், புத்திமதிகளை ஏற்று கவனித்து நடக்கிற மனுஷனோ விவேகி என பார்க்கிறோம். நீங்கள் புத்திமதிகளை ஏற்றுக்கொள்ளும் மக்களாக இருக்கிறீர்களா? அல்லது சொல்லுகிறவர்கள் சொல்லிக்கொண்டே இருக்கட்டுமென, செவிட்டு விரியனைப்போல உங்களுடைய காதுகளை அடைத்துக்கொண்டிருக்கிறீர்களா? அன்பானவர்களே, புத்திமதிகளை உங்களுடைய நன்மைக்காகவே சொல்லுவார்கள். சிம்சோன் என்ற ஒரு மனிதன் பழைய ஏற்பாட்டு காலத்திலே வாழ்ந்ததாக நாம் வேதாகமத்தில் படிக்கிறோம். அவன் தாயும் அவன் தகப்பனும் அவனை நோக்கி: நீ போய், விருத்தசேதனமில்லாத பெலிஸ்தரிடத்தில் ஒரு பெண்ணைக் கொள்ளவேண்டியதென்ன? உன் சகோதரரின் குமாரத்திகளிலும், எங்கள் ஜனத்திலும் பெண் இல்லையா என்றார்கள். சிம்சோன் தன் தகப்பனை நோக்கி: அவள் என் கண்ணுக்குப் பிரியமானவள், அவளையே எனக்குக் கொள்ள வேண்டும் என்றான்'' [நியா.14:3]. இன்றைக்கு இருக்கிற அநேக வாலிப பிள்ளைகள்

செய்யக்கூடிய அதே தவறை அவனும் செய்தான். அவனுடைய நிலைமை என்னவானது? பெலிஸ்த ஜனங்களோடேகூட மரித்துப் போனான். தன்னுடைய தாய் தகப்பனுடைய புத்திமதியை அசட்டை பண்ணினான்.

நீங்கள் ஒருவேளை உங்களுடைய தகப்பனுடைய ஆலோசனை யையும், தாயுடைய ஆலோசனையையும் தள்ளி உங்களுடைய கண்களுக்குப் பிரியமானவைகளை செய்வீர்களானால், ஒருவேளை உங்களுடைய முடிவும் இப்படியே போய்விடும். ''முடிவிலே உன் மாம்சமும் உன் சரீரமும் உருவழியும்போது நீ துக்கித்து; ஐயோ, போதகத்தை நான் வெறுத்தேனே, கடிந்துகொள்ளுதலை என் மனம் அலட்சியம் பண்ணினதே! என் போதகரின் சொல்லை நான் கேளாமலும், எனக்கு உபதேசம் பண்ணினவர்களுக்கு என் செவியைச் சாயாமலும் போனேனே! சபைக்குள்ளும் சங்கத்துக்குள்ளும் கொஞ்ச ங்குறைய எல்லாத் தீமைக்குமுள்ளானேனே! என்று முறையிடுவாய்'' [நீதி.5:11-14]. கண்கெட்டபின் சூரிய நமஸ்காரம் என்று சொல்லு வார்கள். நாம் நலமுடன் இருக்கிற காலங்களில் நலமானவைகளை சிந்திக்கவேண்டும், புத்திமதிகளை ஏற்றுக் கொள்ள வேண்டும். இவைகளையெல்லாம் ஏற்று செயல்படுத்த வேண்டிய நாட்களில் செய்யாமல் காலம் கடந்து இவைகளைக்குறித்து புலம்புவோமேயா னால் என்ன பயன்? ஆகையால் புத்திமதிகளை ஏற்று கர்த்தருக்குப் பிரியமாய் வாழவும் வேதாகமத்தின் ஆலோசனைகளை தள்ளாமல் அவைகளை ஏற்று அதன்படி வாழவும் பிரயாசப்படுங்கள்.

**இரண்டாவது எதற்காக ஒருவருக்கொருவர் புத்திசொல்ல வேண்டும்?** வேதம் சொல்லுகிறது; ''அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனித்து; சபை கூடி வருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம்; நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்தி சொல்லவேண்டும். சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ்செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களி னிமித்தம் செலுத்தத்தக்க வேறொருபலி இனியிராமல், நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும்'' [எபி.10:24-27]. சிலர் நாம் நலமாயிருந்தால் போதுமென்று வேண்டிக்கொள்வார்கள். இது

தன்னலத்தை குறிக்கிறது. மற்றவர்களுடைய எந்தக் காரியத்திலும் கலந்துகொள்ளாதிருப்பார்கள். இது சரியல்ல, நாம் சபையாக கூடி வரும்போது நாம் நற்கிரியைகளுக்கு ஏவப்படும்படி ஒருவரை யொருவர் கவனிக்கவேண்டும். அதை கவனிப்பதற்கு போதகர்கள் இருக்கிறார்கள் என்று எண்ணிவிடக்கூடாது. ஒரே சரீரத்தில் இருக்கும் அவயவங்களாக நாம் இருக்கிறபடியால் சரீரத்தில் உள்ள மற்ற அவய வங்களையும் பார்க்கவேண்டும். ஆகையால் நாம் புத்திசொல்லும் படியாக ஏவப்படுகிறோம்.

மேலும் சத்தியத்தை அறியும் அறிவை அடைந்த பின்பும் ஒருவன் பாவம் செய்வானேயானால் அவன் பாவத்தினிமித்தம் செலுத்த வேறொருபலி இல்லை என்பதை அவனுக்கு உணர்த்தவேண்டும்.

ஆகையால் அவன் பாவம் செய்யாமல் பாதுகாத்துக் கொள்ளும் படியாக அவனுக்கு புத்திமதிகளைச் சொல்லவேண்டியவர்களா யிருக்கிறோம். இந்த புத்திமதியான வார்த்தைகளை தள்ளி மேலும் அவன் பாவம் செய்வானேயானால் அவன் தேவனுடைய கோபாக் கினையின் பாத்திரமாயிருப்பான். அப்படிப்பட்டவர்கள் நியாயத் தீர்ப்புக்கு தப்பிக் கொள்ளமுடியாது. ஆகையால் ''புத்திமதியை உறுதியாய்ப் பற்றிக் கொள், அதை விட்டு விடாதே; அதைக் காத்துக் கொள், அதுவே உனக்கு ஜீவன்'' என நீதி.4:13-ல் வாசிக்கி றோம். புத்திமதிகளை அலட்சியம் செய்தவர்கள் பாதாளத்திலே வேதனைப் படுவார்கள். அவ்விதமாக வேதனைப்படக்கூடிய ஐசுவரிய வானைப்பற்றி படிக்கிறோம். அவன் நாவறண்டு ஆபிரகாமை நோக்கி கதறினான். அங்கே அக்கினி அவியாமலும், புழு சாவாமலும் இருக்கும். அப்படியானால், அந்த நரகத்தின் வேதனை எப்படிப்பட்டது என்பதை அறிந்துகொள்ளுங்கள். ஆலோசனை ஒரு மனிதனுக்கு மிகவும் அவசியம். எனக்கு ஒருவரும் ஆலோசனை சொல்ல வேண்டிய அவசியமில்லை என்று சொல்லுகிறவர்களே, கவனியுங்கள். நீங்கள் ஒன்றாம் வகுப்பு படிக்கவில்லையா? நீங்கள் படிக்காமலே பாஸ் பண்ணிவிட்டீர்களா? யாரோ ஒருவர் உங்களுக்கு கற்றுக்கொடுத்திருக்கிறார். ஆகையால், இந்த அளவு நீங்கள் வளர்ச்சி யடைந்து நல்ல நிலைமையில் இருக்கிறீர்கள் என்பதை மறந்து போகா திருங்கள். அநேகருடைய பயிற்சியினால் நீங்கள் ஒரு நல்ல நிலை மையை வந்தடைய முடியும். ''ஆலோசனையில்லாமையால் எண்ண ங்கள் சித்தியாமற்போம்; ஆலோசனைக்காரர் அநேகர் இருந்தால் அவைகள் உறுதிப்படும்'' என திருமறையில் படிக்கிறோம் [நீதி.15:22].

**மூன்றாவதாக எப்படி ஒருவருக்கொருவர் புத்திசொல்ல வேண்டும்?** புத்திசொல்வதில் பல வழிகள் உண்டு. ஆனால் வேதாகமம் சொல்லுகிற ஆலோசனையைப் பார்ப்போம். ''ஆகையால், ஏற்றகாலத்தில் தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள். அவர் உங்களை விசாரிக்கிற வரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்து விடுங்கள். தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகை தேடிச் சுற்றித் திரிகிறான். விசுவாசத்தில் உறுதியாயிருந்து, அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள்; உலகத்திலுள்ள உங்கள் சகோதரரிடத்திலே அப்படிப் பட்ட பாடுகள் நிறைவேறிவருகிறதென்று அறிந்திருக்கிறீர்களே'' [1பேது.5:6-9].

நாம் சொல்லுகிற புத்திமதியானது; மண்பானையை எடுத்து மெதுவாக அங்கே வை என்பதைப்போன்றது. இன்னும் சொல்லப் போனால், ஒரு நேயாளிக்கு சொல்லும் ஆலோசனையைப்போன்றது. மிக கோபமாக சொல்லிவிடக்கூடாது. மிக கோபமாக செயல்பட்டு விட வும் கூடாது. அப்படி செய்வோமானால் அவர்கள் அந்த புத்திமதிகளை ஏற்றுக் கொள்ளாமல் போவதற்கான வாய்ப்புகள் ஏற்படும். ஆகையால் அப்போஸ்தலனாகிய பேதுரு தமது நிருபத்தில் முதலாம் அதிகாரத்தில் மிகத் தெளிவான புத்திமதிகளை கொடுக்கிறார். ஏற்றகாலத்தில் தேவன் உங்களை உயர்த்தும்படி அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள். ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காலமுண்டு. இதை அநேகர் மறந்துவிடுகின்றனர். உடனே எல்லாம் நடைபெற வேண்டும் என எதிர்பார்ப்பார்கள். இல்லையென்றால் விசுவாசத்தில் தளர்ந்துபோய்விடுவார்கள். வாழ்க்கையில் புத்திமதிகளை ஏற்றுக் கொள்ளுவதற்கு நாம் முதலாவது தெளிவானவர்களாக, தெளிந்த புத்தியுள்ளவர்களாக இருக்கவேண்டும். நாம் தெளிவானவர்களாக இல்லையென்றால்; ''புத்தியுள்ள மறு உத்தரவு சொல்லத்தகும் ஏழு பேரைப்பார்க்கிலும் சோம்பேறி தன் பார்வைக்கு அதிக ஞானமுள்ள வன்'' என வேதம் நீதி.26:16-ல் சொல்லுகிறபடி, நீங்கள் ஒரு சோம் பேறியாகவும் தனக்குத் தானே ஞானியாகவும் இருப்பீர்கள். மற்றவர் களுடைய புத்திமதியான வார்த்தைகளை அசட்டை செய்யும் போது.

''புத்திமதிகளைக் காத்துக்கொள்ளுகிறவன் ஜீவவழியில் இருக்கிறான்; தண்டனையை வெறுக்கிறவனோ மோசம்போகிறான்'' (நீதி.10:17). நீங்கள் எந்த வழியில் இருக்கிறீர்கள்? வேதாகமம் ஜீவவழியைக் குறித்து போதிக்கிறது. இயேசு சொல்கிறார் நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் என்கிறார். அவருடைய வழி ஜீவவழியாகவும் சத்தியமாகவும் இருக்கிறது. இன்றைக்கு அநேகர் தாங்கள் போகும்வழி செம்மையான வழியா என்பதை உறுதிசெய்யாமல் அவ்வழியே சென்று கொண்டிருக்கின்றனர். முடிவிலே ஐயோ! தவறான வழியிலே வந்துவிட்டோமே என்று எண்ணும்போதும் தாங்கள் வந்த வழியின் தூரத்தையும் காலத்தையும் நேரத்தையும் எண்ணிப்பார்க்கும்போதும் அவர்களுக்கு அது வியப்பாக இருக்கும், நம்பிக்கையற்ற சூழ்நிலையை உருவாக்கும்.

**புத்தியை சம்பாதிக்கிற மனஷன் பாக்கியவானா?**

ஆம், உலகத்தில் எதை எதையோ சம்பாதிக்கிறார்கள். ஆனால் சம் பாதிக்கவேண்டிய புத்தியை சம்பாதிக்காமற் போய்விடுகிறார்கள். வேதம் சொல்லுகிறது; ''ஞானத்தைக் கண்டடைகிற மனுஷனும், புத்தியைச் சம்பாதிக்கிற மனுஷனும் பாக்கியவான்கள்'' (நீதி. 3:13). நீங்கள் உங்களுக்கு என்னத்தை சம்பாதித்து வைத்திருக்கிறீர்கள்? உலக சம்பத்துக்களையா? உங்களுக்கு வேண்டியவைகளை தேவன் ஆதியிலே கொடுத்துவிட்டார் என்பதை நீங்கள் அறிவீர்களா? அவர் உங்களுக்கு கொடுத்தவற்றை நீங்கள் பூமியில் இருக்கும்வரை அவைகளை அனுபவிக்க முடியும். அதை உங்களுடையதாக்கிக் கொள்ளவோ, அல்லது அவைகளை நீங்கள் வேறுபகுதிக்கு எடுத்துக்கொண்டு போகவோ முடியாது என்பதை அறிவீர்களா?

இப்படியிருக்கிறபடியால் நீங்கள் செய்யவேண்டியது என்ன? தேவனுடைய கற்பனைகளுக்குப் பயந்து, அவரை நீங்கள் ஸ்தோத்தரித்து, கர்த்தருடைய நாமத்திற்கு மகிமையாக வாழ்ந்து வேதாகமத்தின் புத்திமதியான வார்த்தைகளை ஏற்றுக்கொண்டு அதை நீங்கள் கைக்கொண்டும், உங்களுடைய பிள்ளைகளுக்கு அவை களைக்குறித்து கருத்தாய் போதித்தும், அவர்கள் நடக்க வேண்டிய வழியில் அவர்களை நடத்தி உங்களுடைய குடும்பத்தை நடத்திச் செல்வீர்களானால் நீங்கள் எந்நாளும் ஆசீர்வதிக்கப்பட்ட குடும்பமாக இருப்பீர்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம். ✝

# தளர்ந்துபோகாதிருந்தால் ஏற்றகாலத்தில் அறுப்போம்

Bro. பென்னி மார்ட்டின்

**தே**வனுடைய பிள்ளைகளாகிய நாம் நன்மை செய்யும்படியாக நற்பிதாவினால் கட்டளையிடப்பட்டிருக்கிறோம். ஒவ்வொரு நாளும் பிரயாசப்பட்டு பலருக்கு நன்மைகள் செய்தாலும் பிரதிபலன் உடனே கிடைக்காத காரணத்தால் சோர்ந்து போகிறோம். உறவுகளுக்கும், உளமார நண்பர்களுக்கும் உபகாரங்கள் பல செய்து அதற்கு கைம்மாறாக அவர்கள் உபத்திரவங்களை நமக்கு செய்து விடுகிற படியால் உண்மையாகவே உருக்குலைந்து, சோர்வடைந்து விடுகிறோம். இவ்வுலகில் பல சந்தர்ப்பங்களில் சோர்வு எனும் உணர்வு மனித இனத்தின் மகிழ்ச்சியை மங்கச் செய்து விடுகிறது. இன்முகத்தோடு இன்பச் சுற்றுலா செல்பவர்கள் கூட இயற்கை காட்சிகளை பார்த்து பரவசம் அடைந்தாலும் காலப்போக்கில் சோர்வடைந்து விடுகிறார்கள். வெள்ளை மனம் கொண்ட பிள்ளைகளுக்கு பொம்மைகள் மீதும் விளையாட்டுச் சாமான்கள் மீது கொள்ளைப் பிரியம் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். இருந்த போதிலும் கூட, இவைகளின் மீது இவர்களுக்கு ஆரம்பத்திலிருந்த அதே ஆர்வமும், ஆரவாரமும் கடைசிவரை இருப்பதில்லை, காரணம் சோர்வு. பணப்பசி நிறைந்த உலகில் உயிரை பணையம் வைத்து பயணங்கள் பல மேற்கொண்டு கோட்டைகளில் கோலோச்சிய கோடீஸ்வரர்களும் அதே பணத்தினால் சோர்வடைந்து விடுகிறார்கள். அதேபோல் கிறிஸ்தவர்களும் அவர்கள் கிறிஸ்துவுக்குள்ளாக வந்தபோது அந்த ஆரம்ப நாட்களில் இருந்த அதே ஆனந்தமும் ஆவிக்குரிய ஆவலும் காலப்போக்கில் காணாமல் போய்விடுகிறதை நம்மால் காணமுடிகிறது.

நானிலத்தில் நாகரிகமானவர்களிடம் நற்கிரியைகளை அதிகமாகச் செய்யும் மார்க்கம் எதுவென்று கேட்டால் அவர்கள் நாணயமாக கிறிஸ்தவ மார்க்கம் என்று தான் சொல்வார்கள். **திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும் உலகத்தால் கறைபடாதபடிக்கு தன்னை காத்துக் கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாய் இருக்கிறது (யாக்கோபு1:27).** இவ்வுலகில் நாங்களும் நற்கிரியைகள் செய்யும் மார்க்கம் தான் என்று மாயமாலமாய் மார்தட்டிக் கொள்ளும் மாண்பற்ற மத கூட ஏகத்துவமாக ஏற்றுக்கொள்ளும் காரியம் கிறிஸ்தவர்கள் நலிவடைந்தவர்களுக்கு நற்கிரியைகள்

செய்வதில் சிறந்தவர்கள் என்பது தான். கிறிஸ்தவம் தொன்றுதொட்டு தொலைநோக்குப் பார்வையில் தொய்வின்றி நற்கிரியைகளில் ஈடுபட்டபடியால் தான் மார்க்கப் பிரகாரமாக புதிய உயரங்களை தொட்டது மட்டுமல்லாமல், மானிடப் பிரகாரமாக பலருடைய இதயங் களையும் தொட்டிருக்கிறது. இத்தகைய ஸ்திதியில்தான் கிறிஸ்தவர்கள் நன்மை செய்வதில் சோபித்து விடக்கூடாது என்று சோதனைக்காரன் சோர்வு என்னும் விதையை விதைத்து சோம்பேறிகளாக பலரை மாற்றிவிட்டான். பிரியமானவர்களே, நம் தேவனைப் பிரியப்படுத்த அவரை ஆராதிக்கிறோம், உபதேச சம்பந்தமான காரியங்களுக்காக பலரை கடுமையாக கடிந்து கொள்கிறோம். ஆனால் நாம் நன்மை செய்வதில் நற்பெயர் பெற்று இருக்கிறோமா? இது இன்றைய காலத்தின் அவசியமாகவும், அவசரமாகவும் இருக்கிறது. அன்றியும் நன்மை செய்யவும், தானதர்மம் பண்ணவும் மறவாதிருங்கள் (எபிரெயர் 13:16). நாம் நன்மை செய்கிறதில் சோர்ந்து போகாமல் இருக்க வேண்டுமென்றால் குறைந்தது மூன்று காரியங்களை செய்ய வேண்டும்.

### I **பொறுமை**

பரவசமும், பரபரப்பும் நிறைந்த இவ்வுலகில் பொக்கிஷமாக பொதிந்து வைக்கப்பட வேண்டிய பொறுமையும் நற்பண்பும் நகைச்சுவையாக மாறிவிட்டது. ஏதாவது ஒன்றைப் பெற்றுக் கொள்ள நாம் பொறுமையோடு காத்திருந்தால் என்ன இந்தக் காலத்தில் இவ்வளவு பொறுமையோடு காத்திருக்கிறீர்கள், உங்களுக்கு ரொம்ப தான் பொறுமை என்று பரிவே இல்லாமல் பரிகாசம் செய்வதை நாம் பார்த்திருப்போம். அதையெல்லாம் நாம் பொருட்படுத்தாமல் பொறுமையோடு இருந்தால் நம்மை வேற்று கிரகவாசிகளை போல் வேறுவிதமாக வேடிக்கை பார்ப்பார்கள். இன்றைய இயந்திரமயமான உலகில் முகர்ந்து பார்ப்பதையெல்லாம் நுகர்ந்து விட வேண்டும் எனும் நூதன கலாச்சாரம் களைகட்டியிருக்கிறது. பொறுமையின் பெருமை யும், அருமையும் தெரியாதவர்கள் அதில் சிக்கிக் கொள்ளலாம். ஆனால், பொறுமையின் உறைவிடமாகிய இயேசு கிறிஸ்துவை பின்பற்றுகிறோம் என்று சொல்லிக்கொள்ளும் நாம் பொறுமை எனும் நற்பண்பை எந்த அளவிற்கு பெற்றிருக்கிறோம்? இதைப் பற்றி வேதாகமம் என்ன சொல்கிறது என்று பார்ப்போம். அப்போஸ்தலனாகிய பேதுரு (II பேதுரு 1:5 – 7) வசனங்களில் கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவரும் பெற்றுக் கொள்ள வேண்டிய அல்லது கூட்டி வழங்கவேண்டிய பண்புகளை பட்டியலிடுகிறார். இதில் பொறுமை எனும் பண்பும் பட்டியலிடப்பட்டிருக்கிறது. அதுமாத்திரமல்ல, பொறுமை நம்

கிறிஸ்தவ ஜீவியத்தில் இல்லை என்றால் நாம் கனி கொடுக்காதவர் களாகவும், கண் சொருகிப் போன குருடர்களாக இருப்பதாகவும் 8,9 வசனங்களில் குறிப்பிடுகிறார்.

யாக்கோபு ஆசிரியர் யோபுவின் பொறுமையைக்குறித்து கேள்விப்பட்டிருக்கிறீர்கள் என்று சொல்கிறார் [யாக்கோபு 5:11]. பழங்கால பக்திமானாகிய யோபுவின் செல்வச் செழிப்பு அனைவராலும் அறியப்பட்ட ஒன்றாக இருந்தாலும் கூட காலங்களை கடந்து நம் கண்களுக்கு முன்பாக காட்சியளிப்பது அவருடைய பொறுமைதான். பிரியமானவர்களே, கிறிஸ்தவ வாழ்க்கை வேதவாக்கியங்களில் ஓர் ஓட்டப்பந்தயமாக விவரிக்கப்பட்டிருக்கிறது. நாம் எல்லாருமே அந்த ஓட்டப் பந்தயத்தில் ஓடிக் கொண்டுதான் இருக்கிறோம். ஆனால் பந்தயப் பொருளாகிய நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ளத்தக்கதாக ஓடவேண்டும். இந்தத் தொடர் ஓட்டப் பந்தயத்தில் தொலை விலுள்ள தொடுகோட்டைத் தொட்டு பரிசை தட்டிச்செல்ல தவிர்க்க முடியாத தாகிவிட்டது. பொறுமை; இதை உணர்ந்தவராகத்தான் எபிரேய ஆசிரியர் **ஆகையால், மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசு வாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிற வருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம் என்று ஓங்கி ஒலிக்கிறார் (எபிரெயர் 12:1).**

II **நம்மை நாம் விவசாயிகளாக பார்க்க வேண்டும்**

விவசாயம் நம் நாட்டின் முதுகெலும்பு என்பதை விவரம் தெரிந்த வர்கள் விநயமாக ஏற்றுக்கொள்வார்கள். நாம் சிட்டுக்குருவிகள் போல சுதந்திரமாக சுற்றித் திரிந்த சிறுவயது முதல் இந்த நாள் வரை நம்மில் பலர் விவசாயம் எப்படி என்பதை பார்த்துக் கொண்டுதான் வருகிறோம். ஒரு விவசாயி விதை விதைத்த அடுத்த நாளே விளைச்சலை காணமுடியாது. விதை முளைத்துச் செடியாகி கொடியாகி பூ விட்டு, காயாகி காய் கனிவதற்குள் காலமும் கனிந்து விடுகிறது. இதற்கு இடைப்பட்ட காலத்தில் பயிரை பராமரிக்க நீர் பாய்ச்சி உரமிட்டு, பூச்சிக்கொல்லி மருந்து அடித்து வறட்சி வெள்ளமென எல்லையில்லா தொல்லைகளைப் பொறுமையோடு சகித்து தான் விரும்பிய விளைச்சலை காண்கின்றார். இங்கே விவசாயிடம் இருந்து நாம் பொறுமையை கற்றுக்கொள்ள வேண்டியது அவசியமா யிருக்கிறது. ஒரு விவசாயி நான் தினமும் பயிர்களை பராமரிக்கிறேன், நீர் பாய்ச்சுகிறேன், உரமிடுகிறேன். ஆனால், இந்த நன்றி இல்லாத பயிர்கள் இன்னும் விளைச்சலை எனக்குத் தரவில்லை என்று அறுவடை நாளுக்கு முன்பாகவே பயிர்கள் மீது கோபப்படுவதை சற்று கற்பனை செய்து பாருங்கள். அது எவ்வளவு முட்டாள்த்

தனமாக இருக்கும். பல கிறிஸ்தவர்கள் நாங்கள் கர்த்தருக்காக அதை செய்கிறோம், இதைச் செய்கிறோம் எவ்வளவு காணிக்கை கொடுத்து இருக்கிறோம். இன்னும் அதற்கான பிரதி பலன் கிடைக்கவில்லையே என்று அங்கலாய்க்கிறார்கள். மனிதர்கள் பெரும்பாலும் மற்றவர்கள் செய்யும் உபகாரத்தை மறக்கும் மனப்பான்மை கொண்டவர்களாக இருக்கின்றனர். பலர் நன்றி இல்லாதவர்களாக இருக்கின்றனர். வேறு விதமாகச் சொன்னால், மனிதர்கள் அநியாயமாக நடந்து கொள் கிறார்கள். ஆனால், தேவன் உங்கள் கிரியையையும் நீங்கள் பரிசுத்த வான்களுக்கு ஊழியம் செய்ததினாலும் செய்து வருகிறதினாலும் தமது நாமத்திற்காக காண்பித்த அன்புள்ள பிரயாசத்தையும் மறந்து விடுவதற்கு தேவன் அநீதியுள்ளவரல்லவே (எபிரெயர் 6:10).

### III **நாம் தொலை நோக்குப் பார்வை கொண்டிருக்க வேண்டும்.**

பிரியமானவர்களே! நீதியின் பலனாகிய தேவனுடைய ஆசீர் வாதங்களை குறித்து வானுலகின் வாரிசுகள் என்று வாயார வாழ்த்தி கொள்ளும் நமக்கு தொலைநோக்குப் பார்வை இருக்கிறதா அல்லது குறுகிய பார்வை உடையவர்களாக இருக்கிறோமா? குறுகிய காலத்தில் நம்முடைய தீர்ப்பு அளவு கோலின்படி நன்மை பயக்காது அல்லது பலனளிக்காது. அதற்காக நாம் சோர்ந்து போகாமல் தொடர்ந்து நன்மை செய்துகொண்டே இருப்போம். பலவேளைகளில் கிறிஸ் தவர்கள் தேவனே உம்முடைய வழியில் காரியங்களை செய்து பார்த்தும் எந்த பலனும் இல்லை. மாறாக, பிரச்சனைகள் தான் அதிக மாய் இருக்கிறது, இன்னும் சொல்லப்போனால் பிரச்சனைகள் முன்பை விட பல மடங்கு அதிகமாக இருக்கிறது என்று புலம்புவதை நாம் கேட்கிறோம். ஒரு சம்பவத்தின் முடிவுரை பார்ப்பதற்கு நமக்கு பொறுமை இல்லை என்றால் தேவன் மீது அரைகுறை குற்றச்சாட்டு களை வைக்க வேண்டாம். மாறாக, தேவனுடைய கிருபையிலும், உண்மைத்தன்மையிலும் விசுவாசத்தை வளர்த்துக்கொள்ளப் பழக வேண்டும்.

நாம் எதற்காக இப்பூமியிலே தேவனை சேவிக்கிறோம்? தற்காலிக ஆசீர்வாதங்களுக்காகவா அல்லது நிரந்தரமான நித்திய ஜீவனுக்காக வா? ஒரு வேளை சாத்தான் இவ்வுலகில் நமக்கு உண்டான எல்லா உடமைகளையும், உயிரையும் பறித்துப் போட்டாலும் தேவன் நிச்சயமாக நம்முடைய நற்கிரியைகளுக்கு பலனளிப்பார் எனும் நம்பிக்கையை மட்டும் இழந்துவிட வேண்டாம். பிறருக்கு நன்மை செய்வதினால் உங்களுக்கு தீமைதானே ஏற்படுகிறது, இனியும் நன்மை செய்து கொண்டிருக்கலாமா? என்று பிசாசு நம்மை சோர்வடையச் செய்வான். ஆனால், தேவன் நமக்கு நிச்சயமாக இவ்வுலகத்தில் இல்லையென்றாலும் கூட வருகின்ற உலகத்தில் பலனளிப்பார் என்னும் நம்பிக்கையோடு நன்மை செய்து நாட்களை நகர்த்துவோம். ✝

## தேவன் இல்லை என்று சொல்லும்போது

When God Says No

**Jim Poland**

"இல்லை" எனும் வார்த்தை நம்மெல்லோருக்கும் இனிமையற்றதாகவே இருக்கும். அதோடுகூட அது முற்றுப்புள்ளி வைக்கும் வார்த்தையாகவும் இருக்கும். நாம் விரும்பும் ஒன்றை யாரிடமாவது கேட்கும்போது, இல்லை என்று பதில் வந்தால் அதை நாம் யாரும் விரும்பமாட்டோம். அதனால் நம் விண்ணப்பங்களுக்குப் பதிலாக இல்லை என்று தேவனிடமிருந்து வந்தால் நிலைகுலைந்து போய் விடுவோம்.

சிலவேளைகளில் தேவன் நம் விண்ணப்பங்களுக்கு" இல்லை" என்று பதில் கொடுக்கிறார். அதன்பொருள் அவர் நம்மீது அக்கறையற்றவர், அன்பற்றவர் என்பதல்ல. தேவன் நம் மீதான தமது அன்பை பலவிதங்களில் நிரூபித்திருக்கிறார். அன்றியும் நாம் பெலனற்றவர்களாயிருக்கும்போதே, குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார். நீதிமானுக்காக ஒருவர் மரிக்கிறது அரிது. நல்லவனுக்காக ஒருவன் மரிக்கத் துணிவான். நாம் பாவிகளா யிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே தேவன் நம் மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்(ரோமர் 5:6-8)

நம் தேவன் தம்முடைய மிகப்பெரிய தேவதாசர்களுக்குக்கூட இல்லை என்று பதில் அளித்திருக்கிறார். சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்காக எல்லாவற்றையும் விட்டு வந்த அப்போஸ் தலனாகிய பவுலுக்குக்கூட **இல்லை** என்று பதிலளித்திருக்கிறார். பவுலுக்கு மாம்சத்திலே கொடுக்கப்பட்டிருந்த முள் நீங்கும்படி அதே கர்த்தரிடம் விண்ணப்பம் பண்ணினார். அதற்கு அவர் என் கிருபை உனக்குப்போதும், பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்று பதிலளித்தார்(II கொரிந்தியர் 12:7-10).

நம் பிதாவாகிய தேவன் தம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவுக்குக்கூட **இல்லை** என்று பதிலளித்திருக்கிறார். இயேசு கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரணத்தை எதிர்கொண்ட போது அவர் மூன்று முறை ஜெபித்தார். என் பிதாவே இந்தப்பாத்திரம் என்னை விட்டு நீங்கக்கூடுமானல் நீங்கும்படி செய்யும். ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம் பண்ணினார் (மத்தேயு 26:36-46) இந்த விண்ணப்பத் திற்கான பதில் இல்லை என்பதை நாம் அறிந்திருக்கிறோம் நம்முடைய பாவங்களுக்காக சிலுவை மரணத்தை இயேசு கிறிஸ்து ருசி பார்த்தார்.

தேவன் ஒரு காரியத்திற்கு இல்லை என்று சொல்லும்போது அதற்கு காரணம் இருக்கும். அந்த காரணங்கள் மனிதனுடைய காரணங்களைவிட மேலானது. **என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல. உங்கள் வழிகள் என் வழிகளும் அல்ல வென்று கர்த்தர் சொல்கிறார். பூமியைப்பார்க்கிலும் வானங்கள் எப்பஜ உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப் பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது** (ஏசாயா 55:8-9).

✝

---

**ஒருவர் ஜெபிக்கும் போது...**

- **அவர் தன்னுடைய பரமப்பிதவோடு பேசுகிறார் (மத்தேயு 6:9)**
- **அவர் தன்னுடைய விண்ணப்பத்திற்கு தேவனால் பதில ளிக்க முடியுமென்ற விசுவாசத்தை வெளிப்படுத்து கிறார். (யாக்கோபு 1:5,6).**
- **அவர் தனக்காக செயல்படும்தபடியாக தன் மத்தியஸ்தராக செயல்படும்படியாக இயேசு கிறிஸ்துவை அனுமதிக் கிறார் (I தீமோத்தேயு 2:5)**
- **அவர் ஜெபிக்கும் போது தேவனை சந்தோஷப் படுத்துகிறார் (நீதிமொழிகள் 15:8)**
- **அவர் சரியான மனநிலையை வெளிப்படுத்துகிறார் (Iகொரிந்தியர் 14:15)**

# தேவன்
# துணிச்சல், அன்பு மற்றும் தியாகம்
## The Risk, the love and the Sacrifice
Charles R.Rose

**மி**கப் பழமையான காலகட்டத்தில் அக்காலத்தைக் குறித்து நமக்கு எந்த அறிவும் இல்லாத நித்தியத்தின் ஒரு பகுதியில், குழந்தை இயேசு இப்பூமியில் பிறக்காத அக்காலக்கட்டத்தில் பிதாவும், குமாரனும் இவ்வுலக வரலாற்றில் நடைபெறப் போகிற மிகப்பெரிய நிகழ்வுக்கு அஸ்திபாரத்தைப்போட திட்டங்களைத் தீட்டிக் கொண்டிருந்தார்கள். அந்த நிகழ்வானது வேதாகமத்தின் முதல் பக்கத்தில் முதல் வசனத்தில் வெளிபடுத்தப்பட்டிருக்கிறது. **ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார் (ஆதியாகமம் 1:1).**

தேவத்துவத்தில் உள்ள மூவரும் தங்கள் சாயலில் மனிதனை சிருஷ்டிக்க திட்டம் தீட்டிக் கொண்டிருந்தார்கள் (ஆதியாகமம் 1:26) மனிதனை நன்மை தீமை அறியும் திறனுடன் உருவாக்க தீர்மானித்துக் கொண்டிருந்தார்கள் (ஆதியாகமம் 3:5,22). இழந்து போகும் மனித இனத்தை தேவனிடத்தில் திரும்பக் கொண்டு வர இயேசு கிறிஸ்துவை மனித அவதாரம் எடுக்கச் செய்யும் தீர்மானமும் தான் எடுக்கப்பட்டிருக்க வேண்டும். **அவர் உலகத் தோற்றத்திற்கு முன்னே குறிக்கப்பட்டவராயிருந்து தமது மூலமாய்த் தேவன்மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்காக இந்த கடைசிக் காலங்களில் வெளிப்பட்டார் (I பேதுரு 1:20).**

### துணிச்சல்

இயேசு கிறிஸ்து மாம்சத்தில் வெளிப்பட்டபடியால் மனித வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டங்களையும் கடந்துவர வேண்டியதாயிருந்தது. இது அவருடைய பிறப்பு (மத்தேயு 1:18-23). லூக்கா 2:1-7). வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் வளர்தல் (அறிவுப் பூர்வமாக, சரீரப்பிரகாரமாக, ஆவிக்குரிய பிரகாரமாக, சமூக ரீதியாக) (லூக்கா 2:52) கீழ்ப்படிந்திருக்க கற்றுக்கொள்ளுதல் (எபிரெயர் 5:9) போன்றவைகள் உள்ளடக்கம். பிதாவின் கட்டளைகளுக்கு இயேசு கிறிஸ்து இயந்திரத்தனமாக அல்ல, எல்லா மனிதர்களைப் போலவும் கீழ்ப்படிதலை கற்றுக்கொள்ள வேண்டியதாயிருந்தது.

தேவனுடைய ஒரே பேறான குமாரனுடைய ஜீவன் மற்றும் மரணத்தை ஆழ்ந்து சிந்திக்கும்போது **அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதை கொள்ளையாடின பொருளாக எண்ணாமல் தம்மைத்தாமே**

**வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து மனுஷர் சாயலானார்** எனும் இவ்வசனங்களை எண்ணிப்பார்த்தால் [பிலிப்பியர் 2:6,7] அவர் எவ்வளவு துணிச்சலாக மனித சாயலை எடுத்தார் என்பது நமக்குப் புரியும். இத்தீர்மானத்தை எடுப்பதற்கு முன்பாக இன்னும் சொல்லப் போனால் உலகத்தோற்றத்திற்கு முன்பாகவே பிசாசின் பெலத்தையும் அவனால் வரும் சோதனையையும் அறிந்திருந்தார். இயேசு பரலோகத்திலிருந்தபோது அவர் தேவனுடைய குமாரனாயிருந்தபடியால் அங்கே பரமசேனையின் திரள் அவருக்கு உதவ ஆயத்தமாயிருந்தது. இப்பூமியில் இயேசு மற்ற எல்லா மனுஷரைப்போலவும் பிசாசின் தந்திரங்களோடும் எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவராயிருக்க வேண்டியதாயிருந்தது [எபேசியர் 6:11]

நம் கர்த்தர் ஒருமுறை சாத்தானின் சோதனைக்கு அடிபணிந்திருந்தால் என்னவாயிருந்திருக்கும்? அதன் விளைவுகள் மிகப் பயங்கரமாயிருந்திருக்கும். மனித இனம் ஆதாமிலிருந்து இன்றைய தலைமுறை வரை இன்னும் இதற்கு பின் வரும் தலைமுறை வரைக்கும் நரகத்திலே தள்ளப்படும்படி குறிக்கப்படுவார்கள். ஏனென்றால், கிறிஸ்துவின் பலி மட்டுமே நமக்கு ஏதாவது நம்பிக்கையைத் தர முடியும். கிறிஸ்தவர் ஒரு பாவத்தினால் தம்மைக் கறைபடுத்தியிருந்தாலும் கூட நன்மை தீமை அறியும் வயதை அடைந்த ஒட்டு மொத்த மனித இனமும் இரட்சிக்கப்படுவதற்கான நம்பிக்கையை முற்றிலுமாக இழந்திருக்கும் [உபாகமம் 1:39 ; ஏசாயா 7:16].

## அன்பு

குமாரனாகிய தேவன் துணிச்சலாக மனித சாயலாக எடுத்தத் தீர்மானம் மனித இனத்தின் மீது அவர் காட்டிய அன்பின் ஆழத்தைக் காட்டுகிறது. மூன்று குழந்தைகளின் தகப்பன் என்னும் நிலையில் என் பிள்ளைகளுக்கு ஆபத்து நேரிடும் இடத்திற்கு அவர்களை அனுப்ப என்னால் இயலாது. ஆனால், பிதாவாகிய தேவன் தம்முடைய சாயலில் உண்டாக்கிய மனித இனத்தின் மீது கொண்ட அன்பின் நிமித்தமாக தம்முடைய ஒரே பேறான குமாரனை இப்பூமிக்கு அனுப்பினார். **தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்** [யோவான் 3:16].

பிதாவாகிய தேவன் தம்மால் சிருஷ்டிக்கப்பட்ட மனித இனம் இழந்து போனதைக் குறித்து எவ்வளவு மன வேதனை அடைந்திருப்பார்! தங்களைத்தாமே இரட்சித்துக் கொள்ளத் திராணியில்லாதவர்களைப் பார்த்து அவர் எவ்வளவாய்

பரிதபித்திருப்பார் [எரேமியா 10:23]. இங்கே அற்புதமான அன்பு பிதாவினிடத்திலிருந்து மட்டுமல்ல, குமாரனிடத்திலிருந்தும் வெளிப்பட்டது. தம்முடைய ஒரே பேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்குத் தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது. நாம் தேவனிடத்தில் அன்பு கூர்ந்ததினால் அல்ல அவர் நம்மிடத்தில் அன்பு கூர்ந்து நம் முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதார பலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது [I யோவான் 4:910]. **நியாயத் தீர்ப்பு நாளிலே நமக்குத் தைரியமுண்டாயிருக்கத்தக்கதாக அன்பு நம்மிடத்தில் பூரணப்படுகிறது. ஏனென்றால், அவர் இருக்கிற பிரகாரமாக நாமும் இவ்வுலகத்தில் இருக்கிறோம்** [I யோவான் 4:17].

ஆம், தேவனுடைய கட்டளைகளை கைக்கொண்டபடியால் நியாயத்தீர்ப்பில் அவருக்கு முன்பாக எவ்வித பயமுமின்றி நிற்க முடியும் [I யோவான் 3:21-24].

## தியாகம் அல்லது பலி

நாம் கிறிஸ்துவின் அன்பை அறிந்து அவருடைய பலியின் முக்கியத்துவத்தைப் புரிந்திருக்கிறபடியால் நமக்கு இந்த நம்பிக்கையும் தைரியமுமிருக்கிறது. ஆகையால், அவர் உலகத்தில் பிரவேசிக்கும்போது பலியையும் காணிக்கையையும் நீர் விரும்ப வில்லை. ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம் பண்ணினீர் என்றீர் அப்பொழுது நான் தேவனே உம்முடைய சித்தத்தின் படி செய்ய இதோ வருகிறேன். புத்தகச்சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது. [எபிரெயர் 10:5,7]. இவரே பாவங்களுக்காக ஒரே பலியைச் செலுத்தி என்றென்றைக்கும் தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்து இனித் தம்முடைய சத்துருக்களைத் தமது பாதபடியாக்கிப் போடும் வரைக்கும் காத்துக் கொண்டிருக்கிறார். ஏனெனில், பரிசுத்த மாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே இவர் என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார் [எபிரெயர் 10:12-14]. ஆகையால், சகோதரரே, நாம் பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுவானவர் மாம்சமாகிய திரையின் வழியாய்ப் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டு பண்ணினபடியால், அந்த மார்க்கத்தின் வழியாய்ப் பிரவேசிப்பதற்கு அவருடைய இரத்தத்தினாலேயே நமக்கு தைரியம் உண்டாயிருக்கிறபடியினாலும், தேவனுடைய வீட்டின் மேல் அதிகாரியான மகா ஆசாரியர் நமக்கு ஒருவர் இருக்கிற படியினாலும் துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதய முள்ளவர்களாயும், சுத்த ஜலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும்

உண்மையுள்ள இரத்தத்தோடும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம். அல்லாமலும், நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம். வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே. மேலும், அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனித்து சபை கூடிவருதலை சிலர் விட்டு விடுகிறது போல நாமும் விட்டுவிடாமல் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக்கடவோம்; நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய் பார்க்கிறீகளோ அவ்வளவாய்ப் புத்தி சொல்ல வேண்டும். சத்தியத்தை அறியும் அறிவை அடைந்த பின்பு நாம் மனப்பூர்வமாய் பாவஞ் செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனியிராமல் நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும் விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும் [எபிரெயர் 10:19-27]

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நமக்காக துணிச்சலாக தீர்மானம் எடுத்து அவருடைய அன்பை வெளிப்படுத்தி, தம்மைத்தாமே பலியாக ஒப்புக்கொடுத்தார். ஆகையால், எனக்குப் பிரியமான சகோதரரே கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து நீங்கள் உறுதிபட்டவர்களாயும், அசையாதவர்களாயும் கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக [I கொரிந்தியர் 15:58].

**தேவனுடைய பிள்ளைகள் இவ்வுலகில் நடந்து கொள்ள வேண்டிய விதம்**

- *நாம் உலகக்கவலையிலிருந்து விடுபட்டிருக்க வேண்டும் (மத்தேயு 13:22; லூக்கா 21, 34-36).*
- *நாம் நம் ஆத்துமாக்களை நஷ்டப்படுத்தி, உலகத்தை ஆதாயப்படுத்தக் கூடாது (மத்தேயு 16:26).*
- *நாம் இப்பிரபஞ்சத்தினின்று விடுவிக்கப்பட்டவர்களைப் போல் வாழ வேண்டும் (கலாத்தியர் 1:4).*
- *நாம் உலகத்திலே சுடர்களைப் போல் பிரகாசிக்கிறவர்களாக இருக்க வேண்டும் (பிலிப்பியர் 2:14)*
- *நாம் இவ்வுலகத்திற்கு ஒத்த வேஷந்தரிக்கக்கூடாது (ரோமர் 12:2).*

## சாட்சியங்கள்

## சிருஷ்டிப்பின் ஆறுநாட்கள் லட்சக்கணக்கான வருடங்களை உள்ளடக்கியவைகளா அல்லது 24 மணிநேர கால அளவை உள்ளடக்கியவைகளா?

Were the Six Days of Creation Geologic Ages of Literal 24 Hour Days

**Kevin L.Moore**

**சி**ருஷ்டிப்பைப் பற்றிய முற்போக்கு சிந்தனையாளர்களாலும், பரிணாமக் கொள்கைக்காரராலும் **நாள் கொள்கை** மக்கள் மத்தியில் பரப்பிவிடப்படுகிறது. இந்த நாள்கொள்கை ஆதியாகமம் ஒன்றாம் அதிகாரத்தில் இடம் பெற்றுள்ள 24 மணிநேரத்தை உள்ளடக்கிய நாட்களைக் குறிக்காது. மாறாக, லட்சக்கணக்கான வருடங்களை உள்ளடக்கிய நாட்களைக் குறிக்கிறது என்று போதிக்கிறது. இந்த தவறான கொள்கையை நிராகரித்து சிருஷ்டிப்பின் விளக்கத்தை சரியாகப் புரிந்து கொள்ள ஆறு காரணங்கள் உண்டு.

- எபிரெய வார்த்தை Yom(நாள்) எனும் வார்த்தைக்கு முன்பாக எண் வரும் போதெல்லாம் அது 24 மணிநேரத்தை உள்ளடக்கிய ஒரு நாளைத்தான் குறிக்கும். ஆதியாகமம் 1:5,8, 13, 19, 23, 31; எண்ணாகமம் 13:25; 14:33,34; யாத்திராகமம் 20:9-11).

- சாயங்காலமும், விடியற்காலமுமாகி முதலாம் நாள் ஆயிற்று எனும் சொற்றொடர் (ஆதியாகமம் 1:5) பழைய ஏற்பாட்டில் நூறு முறைக்கும் மேல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இது எப்போதுமே 24 மணி நேரத்தை உள்ளடக்கிய ஒரு நாளைத்தான் குறிக்கும்.

- சிருஷ்டிப்பின் நாள் கணக்கில் **நாள்** என்பது லட்சக் கணக்கான வருடங்களுக்கு நிற்கிறதாக இருந்தால் லட்சக் கணக்கான வருடங்கள் இருளாகவும், லட்சக்கணக்கான வருடங்கள் வெளிச்சமாகவும் இருந்திருக்கும்.

* ஆதாம், ஆறு மற்றும் ஏழாம் நாட்களிக்கிடையே வாழ்ந்திருக்கிறார். அவர் லட்சக்கணக்கான வருடங்கள் ஒன்றும் வாழவில்லை (ஆதியாகமம் 5:5)

* யூதர்கள் ஆறுநாட்கள் வேலை செய்து ஒவ்வொரு வாரத்தின் ஏழாம் நாளிலே ஓய்ந்திருக்கவேண்டுமென்று கட்டளையிடப் பட்டார்கள். ஏனென்றால், ஆதியாகமத்தில் சிருஷ்டிப்பின் மாதிரி இவ்விதமாகத்தான் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. (யாத்திராகமம் 20:8–11)

* தேவன் சிருஷ்டிப்பின் நாள் என்பது 24 மணி நேரத்தை உள்ளடக்கியது என்பதைத் தெளிவாக ஆதியாகமம் புத்தகத்தில் விவரித்திருக்கிறார். இதை விட தெளிவாக எப்படி விவரிப்பது?

✝

---

## கிறிஸ்துவோடு வயதாகும் போது

- **உங்களுக்கு வயதாகிவிட்டது என்கிற உண்மையை நினைத்துப் புலம்பாதீர்கள். உங்களுக்கு வயதாகியிருக்க வில்லையென்றால் நல்ல அனுபவங்கள் கிடைத் திருக்காது**

- **உங்களால் முடிந்தவரை உங்கள் தோற்றத்தைப் பராமரியுங்கள். நன்றாக பாதுகாக்கப்பட்ட புராதானப் பொருட்கள் அழகானவைகளாகவே இருக்கின்றன.**

- **தன்னிறைவு அடைய கற்றுக்கொள்ளுங்கள். ஏனென்றால், நீங்கள் தன்னந்தனியாக விடப்படும் நேரம் ஒருவேளை வரலாம்.**

- **கடந்த காலத்தை நினைத்து வாழாதீர்கள்**

- **கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தில் வாழ கற்றுக் கொள்ளுங்கள். நீங்களும் தேவனும் சேர்ந்து சமாளிக்க முடியாத சூழ்நிலை எதுவுமில்லை.**

சாட்சியங்கள்

## ஏன் நான் தேவனில் விசுவாசம் வைக்கிறேன்?

## Why I Believe In God?

Michael Hooper

**கா**ரணமும், அதன் விளைவும் இருக்கிறபடியால் நான் தேவனில் விசுவாசம் வைக்கிறேன். ஒரு விளைவுக்குப் பின்னால் காரணம் இல்லையென்றால், விளைவு என்பதற்கு சாத்தியமே இல்லை. இன்று உலகில் பல உயிருள்ள பொருள்கள் உள்ளன. இவைகள் தான் விளைவுகள். உயிரற்ற பொருள்களிலிருந்து தான் உயிருள்ள பொருட்கள் தோன்றின என்று சொல்வது தத்துவஞான ரீதியாக அர்த்தமற்றதாகும். ஓர் உயிருள்ள விளைவு என்பதன் உட்பொருள், ஓர் உயிருள்ள காரணம் என்பதாயிருக்கிறது. ஜீவனுள்ள தேவனிடத்தில் கொள்ளும் விசுவாசம் இவ்வுலகில் உள்ள உயிருள்ள பொருள்களினால் உண்டான உத்வேகந்தான் என்பதில் எந்த சந்தேகமுமில்லை.

> எப்படியென்றால், காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள், உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே, உலகமுண்டானது முதற்கொண்டு, தெளிவாய்க் காணப்படும். ஆதலால், அவர்கள் போக்குச் சொல்ல இடமில்லை (ரோமர் 1:20)

✳ **நான் தேவனிடத்தில் விசுவாசம் வைக்கிறேன். ஏனென்றால், வடிவமைப்பு இருக்கிறது.**

இயற்கையானது அறிவுப்பூர்வமாக வடிவமைக்கப்பட்டிருக்கிறது. மீன்கள் தண்ணீரில் நீந்தும்படி வடிவமைக்கப்பட்டிருக்கிறது. பறவைகள் ஆகாயத்தில் பறக்கும்படியாக வடிவமைக்கப்பட்டிருக்கிறது. ஒரு வடிவம் இருந்தால் வடிவமைப்பாளர் என்று ஒருவர் இருந்தே ஆக வேண்டும். ஆகையால், பூமி என்றழைக்கப்படும் இந்த மாபெரும் வடிவத்தை அமைத்தவர் ஜீவனுள்ள தேவன் என்று அவர் பேரில் விசுவாசம் வைப்பது நியாயமானதுதான். அதேபோல் ஒரு வடிவம் வெளிப்படையாகத் தெரியும்போது அதன் வடிவமைப்பாளர்கள் இல்லை என்று சொல்வது நியாயமற்றதாகும்.

✳ **நான் தேவனிடத்தில் விசுவாசம் வைக்கிறேன். ஏனென்றால் சரியானதும், தவறானதும் இருக்கிறது.**

நாம் ஒரு நிமிடத்திற்கு தேவன் இல்லையென்று யூகித்துக் கொள்வோம். அப்படியென்றால் எது சரி, எது தவறு என்பது எப்படி தீர்மானிக்கப்படுகிறது? எது சரி, எது தவறு என்பது

மனிதர்கள் எப்போதும் ஒரு விதமாக சிந்திக்காதபடியால் சரி, தவறு என்பது உணர்வுகளின் அடிப்படையில் தான் அமையும். பல்வேறுப்பட்ட சமுதாயங்களில் உணர்வுகளின் அடிப்படையில் எது சரியானது, எது தவறானது என்பதைக் குறித்து ஓர் அளவுகோலை வைத்திருப்பார்கள். ஹிட்லரின் தலைமையிலான நாசிச கொள்கைகாரர்கள் லட்சக்கணக்கான யூதர்களை அழிப்பது சரியானது என்று நினைத்தார்கள்.

எது சரி, எது தவறு என்பதைத் தீர்மானிப்பதற்கு மனித மனம் அல்லது சமுதாயத்தை விட உன்னதமான ஓர் அளவுகோல் இல்லையென்றால், நாசி சமுதாயத்தினர் குற்றவாளியாக தீர்க்கப்பட மாட்டார்கள். அவர்கள் குற்றவாளிகள் என்று நம்மால் நினைக்கத்தான் முடியும். மற்றபடி நம்மால் அதை நிரூபிக்க முடியாது.

நாம் உணர்வுகளின் அடிப்படையிலான மனித சமுதாயத்தை விட உன்னதமான சக்தியால் பொறுப்புள்ள ஓர் இனமாக உண்டாக்கப் பட்டிருக்கிறோம். ஆகவே, நாம் அந்த சக்திக்கு அல்லது ஆதாரத்திற்கு பதிலளிக்க வேண்டியதாயிருக்கிறது. இந்த ஒட்டு மொத்த சூழ் நிலையும் நம்மை உண்டாக்கிய ஜீவனுள்ள தேவன் இருக்கிறார் என்பதற்கு உத்தரவாதம் அளிக்கிறது. எனவே, நாம் எடுக்கும் தீர்மானங்களுக்கு அவருக்கு நாம் கணக்கொப்புவிக்க வேண்டும். தேவன் தம்முடைய வார்த்தை அல்லது சத்தியத்தினாலே எது சரியானது என்பதை மனித மனச்சாட்சிக்கு வெளிப்படுத்தி யிருக்கிறார். அதை அடிப்படையாக வைத்துப் பார்த்தால் அறியப்படும். எனவே தான், தேவன் இருக்கிறார் என்பதை விசுவாசிப்பது நியாயமானதே.

✳ **நான் தேவனிடத்தில் விசுவாசம் வைக்கிறேன். ஏனென்றால், அறிவு வியாபித்திருக்கிறது.**

என்னுடைய அறிவு மக்கிய குப்பை, பாறை அல்லது வாயு போன்றவைகளால் விளைந்த ஒன்றாக இருக்க முடியாது. அதே நேரத்தில் ஒன்றுமில்லாமையிலிருந்து என்னுடைய அறிவு உருவாயிருக்கவும் முடியாது. ஏனென்றால், ஒன்றுமில்லாமை யிலிருந்து ஒன்றுமே உருவாக முடியாது. எப்போதுமே ஒன்றை உருவாக்க மற்றொன்று தேவைப்படுகிறது. எந்த ஒரு கால கட்டத்திலும் அறிவு பயன்படுத்தப்படவில்லையென்றால், அறிவுக்கு அவசியமே இருந்திருக்காது. ஆகவேதான், நித்தியமான ஞானமான தேவன் ஒருவர் இருக்கிறார் என்று விசுவாசிப்பது நியாயமான ஒன்றாகவே இருக்கிறது.

**நான் இயேசுவின் மூலமாக தேவனிடத்தில் விசுவாசம் வைக்கிறேன்:**

உண்மைகளை அடிப்படையாக வைத்து செயல்படும் எந்த ஒரு வரலாற்று ஆசிரியரும் இயேசு இவ்வுலகில் வாழ்ந்ததை மறுக்க மாட்டார்கள். வேதாகமம் அல்லாத பிற புத்தகங்களில் இயேசுவைப் பற்றி வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இயேசுவின் வாழ்க்கையைப் பற்றியும் அவருடைய ஊழியத்தைப் பற்றியும் அவர்கள் குறிப்பிட்டு, தங்கள் உயிரை விட்டு அவரைப்பற்றி சாட்சி பகிர்ந்திருக்கிறார்கள். ஆகவேதான், அவர்களுடைய செய்தியின் நம்பகத்தன்மையையும், உண்மைத் தன்மையையும் நம்மால் மறுக்கவோ நிராகரிக்கவோ முடியாது. அவர்களுடைய தகவல்களின் படி இயேசு நாம் செய்த அற்புத அடையாளங்களினால் தாம் தேவனுடைய குமாரன் என்பதை நிரூபித்தார். இவைகளெல்லாம் தேவன் இருப்பதை நமக்கு நிரூபிக்கின்றன.

**கிறிஸ்துவின் மகாப் பெரிய ஊழியத்தின் மூலமான நன்மைகள்**

- ✓ *கிறிஸ்து நம்முடைய சகோதரர் (எபி 2:918)*
- ✓ *கிறிஸ்து நம் பிரதான ஆசாரியர் (எபி. 4:14)*
- ✓ *கிறிஸ்து நம் பிணையாளி (எபி. 7:22)*
- ✓ *கிறிஸ்து நம் வழி (எபி. 10:21)*
- ✓ *கிறிஸ்து நம்மைப் பூரணப்படுத்துகிறவர் (எபி. 12:2)*
- ✓ *கிறிஸ்து நம் மத்தியஸ்தர் (எபி.12:24)*
- ✓ *கிறிஸ்து நம்மைப் பரிசுத்தப்படுத்துகிறவர் (எபி. 13:12)*

# கிறிஸ்துவின் சபை
## The Church of Christ
## Wes Mcadams

சில வேளைகளில் நாம் புதிய ஏற்பாட்டு சபையாக இருப்பது பற்றி பேசுகிறோம் அல்லது முதல் நூற்றாண்டு சபையைப் போல் இருக்க வேண்டியது பற்றி பேசுகிறோம். இப்படிப் பேசும் போது, நாம் கொரிந்து சபையில் நடப்பிக்கப்பட்ட பாவங்களை திரும்பச் செய்வதையோ அல்லது கலாத்தியர் நாட்டு சபைகளில் சில சபைகள் தவறான சுவிசேஷத்தை ஏற்றுக் கொண்டதையோ குறிப்பிடவில்லை. முதல் நூற்றாண்டு சபைகள் பூரணமாயிருக்கவில்லை.

நாம் முதல் நூற்றாண்டு சபையைப் போலிருக்க வேண்டுமென்று பேசும் போது, கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக அந்நிய தெய்வங்களை வணங்குதல், கத்தோலிக்க மதம், மார்க்கப் பிரிவினைக் கூட்டம் என்று எண்ணற்ற காரியங்கள் கிறிஸ்தவர்களின் மீது தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறபடியால், இன்றைய கிறிஸ்தவத்தில் முதல் நூற்றாண்டு சபையில் நடைமுறைப்படுத்தப்பட்ட அல்லது செயல்படுத்தப்பட்ட காரியங்களைக் காணமுடிவதில்லை. நாம் முதல் நூற்றாண்டு சபையைப் போலிருக்க வேண்டுமென்று சொல்லும் போது, நாம் புதிய ஏற்பாட்டிற்கு திரும்பிப் போய் கிறிஸ்தவர்கள் எதைச் செய்ய வேண்டும், எதை விசுவாசிக்க வேண்டுமென்பதைக் கண்டுபிடிப்பது பற்றித் தான் சொல்கிறோம்.

இருந்தபோதிலும், புதிய ஏற்பாட்டு சபை உண்மையாகவே நாம் வைத்திருப்பதைப் போல புதிய ஏற்பாட்டை வைத்திருக்கவில்லை. உதாரணமாக, கொரிந்து சபை. பவுல் அவர்களுக்கு வைத்திருந்த கடிதங்களை போல மேலும், பிரதிகள் எடுக்கப்பட்ட வேறு சில நிருபங்களைக் கூட அவர்கள் வைத்திருந்திருக்கலாம். ஆனால், முதல் நூற்றாண்டில் நாம் இப்போது 27 புத்தகங்கள் அடங்கிய புதிய ஏற்பாட்டை வைத்திருக்கிறோம் அல்லவா அதுபோன்ற ஒருபுத்தகம் இல்லை.

எனவே, நம்முடைய அதிகாரம் புதிய ஏற்பாட்டிலிருந்து வருகிறபடியால் அவர்களுடைய அதிகாரம் எங்கேயிருந்து வந்தது? அவர்கள் தாங்கள் என்ன செய்ய வேண்டுமென்பதை எப்படித் தீர்மானித்தார்கள்?

**அப்போஸ்தலர்களும், தீர்க்கதரிசிகளும்**

சபையின் ஆரம்பத்திலிருந்தே கிறிஸ்தவர்கள் தாங்கள் கிறிஸ்துவின் சித்தத்தை விரும்பினால் அப்போஸ்தலருடைய

உபதேசத்தில் தரித்திருக்க வேண்டுமென்பதைப் புரிந்திருந்தார்கள் (அப்போஸ்தலர் 2:42). அப்போஸ்தலர்கள் இயேசுவின் அதிகாரப்பூர்வ பிரதிநிதிகளாயிருந்தார்கள். அவர்கள் சகல சத்தியத்திற்குள்ளும் பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்பட்டார்கள் ( யோவான் 16:13). இயேசு எவைகளையெல்லாம் அவர்களுக்குப் போதித்தாரோ அவைகளையெல்லாம் பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்கு நினைப்பூட்டினார் (யோவான் 14:26) அவர்கள் கிறிஸ்துவின் மனதை உடையவர்களாயிருந்தார்கள். (I கொரிந்தியர் 2:10). நாம் முதல் நூற்றாண்டு புதிய ஏற்பாட்டு சபையைப் போலிருக்க வேண்டு மென்று சொல்லும் போது நாம் அப்போஸ்தலருடைய உபதேசத்தில் தரித்திருக்க வேண்டுமென்று தான் சொல்கிறோம்.

பவுல் எபேசியர் 4:11,12 வசனங்களில் அவர் (இயேசு) சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார் என்று சொல்கிறார். பரிசுத்த ஆவியானவரால் அற்புத மாக வழி நடத்தப்பட்ட அப்போஸ்தலர்கள் மாத்திரமல்ல, இங்கே சில தீர்க்கதரிசிகளும் இருந்திருக்கிறார்கள். அவர்கள் மூலமாகவும் கர்த்தர் பேசியிருக்கிறார். இருந்த போதிலும் அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து சபையாரை அந்த அற்புத அடையாளங்களெல்லாம் ஒழிந்து போம் என்று எச்சரிக்கிறார். அன்பு ஒருக்காலும் ஒழியாது, தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்துபோம். அந்நியப்பாஷைகளானாலும் ஓய்ந்துபோம். அறிவானாலும், ஒழிந்துபோம். என்று எச்சரிக்கிறார் (I கொரிந்தியர் 13:8). இந்த அற்புதவரங்களெல்லாம் தேவனுடைய ஒட்டுமொத்த சித்தமும் அப்போஸ்தலர்கள் மூலமாக வெளிப்படுத்தப்பட்ட போது ஒழிந்து போனது என்று நான் நம்புகிறேன். ஆயினும், இந்த வரங்கள் நடைமுறையில் இருந்த போது முதல் நூற்றாண்டு சபையானது கர்த்தரிடமிருந்து தீர்க்கதரிசன செய்திகளை கேட்க முடிந்திருக்கிறது.

**சுவிசேஷகர்கள் மேய்ப்பார்கள் மற்றும் போதகர்கள்**

முதல் நூற்றாண்டு சபை என்ன செய்ய வேண்டும் எதை விசுவாசிக்க வேண்டுமென்று அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள் மாத்திரம் போதிக்கவில்லை. அப்போஸ்தலர்கள் தீமோத்தேயு மற்றும் தீத்து போன்றோரை பயிற்றுவித்தார்கள். இந்த சுவிசேஷர்கள் சபைகளுக்கு போதிக்கும் படியாக அனுப்பப்பட்டார்கள்.

இந்த சுவிசேஷகர்கள் சபையில் கண்டனம் பண்ணி கடிந்து கொண்டு, புத்தி சொல்ல வேண்டியதாயிருந்தது (II தீமோத்தேயு 4:2). இவர்கள் ஒவ்வொரு சபையிலும் மூப்பர்களை ஏற்படுத்த வேண்டியதாயிருந்தது (தீத்து 1:5), இவர்கள் அப்போஸ்தலர்களிடமிருந்து எதைக் கேட்டார்களோ அதை மற்றவர்களுக்கு போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவிக்க வேண்டியதாயிருந்தது (II தீமோத்தேயு 2:2)

அப்போஸ்தலருடைய உபதேசத்தைக் கற்றுக்கொள்வதில் அதிகநேரம் செலவழிக்கும் இன்றைய சுவிசேஷகர்கள், இந்த முதல் நூற்றாண்டு சுவிசேஷகர்களின் அடிச்சுவடுகளைத் தான் பின்பற்ற வேண்டியதாயிருக்கிறது. இன்று நம்மிடம் அப்போஸ்தலர்கள் இல்லை. ஆனால், அவர்களுடைய போதனைகள் புதிய ஏற்பாட்டின் பக்கங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. எனவே, கிறிஸ்துவின் செய்தியை மற்றவர்களிடத்தில் பகிர்ந்து கொள்ள நமக்கு இன்றும் சுவிசேஷகர்கள் தேவை.

எனவே, முதல் நூற்றாண்டு சபை அப்போஸ்தலர்களுடைய உபதேசத்தைப் போதித்த சுவிசேஷகர்களை மேய்ப்பராகவும், போதகராகவும் ஊழியம் செய்ய முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவர்களையும் கொண்டிருந்தது. இந்த மேய்ப்பருக்கு சபையை மேற்பார்வை, செய்யும் பொறுப்பு, சபையாரின் ஆவிக்குரிய நலனை குறித்து விசாரிக்கும் பொறுப்பும் கொடுக்கப்பட்டிருந்தது.

முதல் நூற்றாண்டு சபையானது அதன் மேய்ப்பருக்கு செவி கொடுக்க வேண்டியதாயிருந்தது. எபிரெயரின் ஆசிரியர் இவ்விதமாக எழுதினார். உங்களை நடத்துகிறவர்கள், உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம் பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களானபடியால் அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச் செய்யும்படி, அவர்களுக்கு கீழ்ப்படிந்து அடங்குங்கள். அவர்கள் துக்கத்தோடே அப்படிச் செய்தால் அது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கமாட்டாதே (எபிரெயர் 13:17).

சுவிசேஷகர்களும், மேய்ப்பரும் சபையில் இன்றும் முக்கியப் பங்கு வகிக்கிறார்கள். ஆனால், புதிய ஏற்பாடு உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கும் காலக் கட்டத்தில் மிக முக்கியப்பங்கு வகித்தார்கள். நம் எல்லோரிடத்திலும் ஒரு புதிய ஏற்பாட்டு பிரதி இருக்கிறது என்பதற்காக சபையின் ஆளுகை அமைப்பிற்காக தேவனால் நியமிக்கப்பட்ட ஆதாரத்தை நிராகரிக்கும் உரிமை நம் ஒவ்வொருவருக்கும் தரப்படவில்லை என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

**பழைய ஏற்பாட்டு வாக்கியங்கள்**

முதல் நூற்றாண்டு சபையானது முற்றிலுமாக வேதவாக்கியங்கள் இல்லாமல் இல்லை என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. அவர்களிடத்தில் பழைய ஏற்பாட்டு வசனங்கள் இருந்தன. அவர்கள் கூடி வரும் போது பழைய ஏற்பாட்டிலிருந்து அவர்கள் பிரசங்கிப்பார்கள் போதிப்பார்கள். அவர்கள் கிறிஸ்தவர்களுக்கு இயேசு எப்படிப் பிரதான ஆசாரியராயிருந்தார், எப்படி அவர் தங்கள் பாவங்களுக்கு பாவ நிவாரண பலியாக செலுத்தப்பட்டார். சபை எப்படி புதிய எருசலேமாக இருந்தது, அவர்கள் எப்படி நோவா ஆபிரகாம், மோசே, தானியேல்

போன்றோரின் மாதிரியைப் பின்பற்ற வேண்டும் [எபிரெயர் 11] என்றெல்லாம் போதிக்கப்பட்டது.

இந்த வேதவாக்கியங்கள் சம்மந்தமாகத்தான் அப்போஸ்தலனாகிய பவுல் தேவ வசனத்தினால் உண்டாகும் பெறுமையினாலும், ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும்படிக்கு முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்கு போதனைகளாக எழுதியிருக்கிறது [ரோமர் 15:4] என்றார்.

**புதிய எற்பாட்டு வாக்கியங்கள்**

கடைசியாக, சபை புதிய ஏற்பாட்டு வாக்கியங்களையும் கொண்டிருந்தது. அவர்களிடம் முழு புதிய ஏற்பாடு இல்லாமல் இருந்திருக்கலாம். ஆனால், அவர்கள் பயன்படுத்தத்தக்க அவர்களிடம் இருந்தவைகளில் ஒன்று அல்லது இரண்டு புத்தகங்கள் இருந்தாலே அது பெரிய ஆசீர்வாதமாக இருந்திருக்கும். பவுலின் நிருபத்தைப் பெற்றுக் கொண்ட எபேசு பட்டணத்து சபையை நான் கற்பனை செய்து பார்க்கிறேன். அந்த நிருபம் பல பிரதிகள் எடுக்கப்பட்டு, பல சபைகளுக்கு அனுப்பப்பட்டது. சபைகள் அந்த நிபத்தை திரும்பத் திரும்ப விருப்பத்துடன் வாசித்தன. அப்போஸ் தலனாகிய பேதுரு கிறிஸ்தவர்களை பவுலின் நிருபங்களை கவனிக்கும்படி உற்சாகப் படுத்தியிருக்கிறார்.

மேலும், நம்முடைய கர்த்தரின் நீடிய பொறுமையை இரட்சிப் பென்று எண்ணுங்கள். நமக்குப் பிரியமான சகோதரனாகிய பவுலும் தனக்கு அருளப்பட்ட ஞானத்தினாலே இப்படியே உங்களுக்கு எழுதியிருக்கிறான். எல்லா நிருபங்களிலும் இவைகளைக் குறித்துப் பேசியிருக்கிறான்; அவன் சொன்னவைகளில் சில காரியங்கள் அறிகிறதற்கு அரிதாயிருக்கிறது. கல்லாதவர்களும் உறுதி யில்லாதவர்களும் மற்ற வேத வாக்கியங்களைப் புரட்டுகிறது போல தங்களுக்கு கேடுவரத்தக்கதாக இவைகளையும் புரட்டுகிறார்கள் [II பேதுரு 3:15,10].

இன்று நாம் புதிய ஏற்பாட்டின் 27 புத்தகங்களையும் ஒட்டு மொத்தமாக பெற்றிருப்பதால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். நாம் இயேசுவைச் சேர்ந்த சபையாக இருக்க வேண்டுமென்றால், முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் பெந்தேகொஸ்தே நாளுக்குப் பிறகு செய்த காரியங்களை நாமும் செய்ய வேண்டும். அதாவது, அப்போஸ்த லருடைய உபதேசத்தில் தரித்திருக்க வேண்டும். ✞

## தேவனுடைய வார்த்தை

# புத்தக மக்கள்

## Book People

Dan. R.Owen

**மோ**சேயின் காலத்திலிருந்தே தேவன் தம்முடைய ஜனங்களிடம் எழுதபட்ட வெளிப்பாட்டின் மூலமாக உறுதியாக பேசியிருக்கிறார். அவைகளை முழுமையாகப் பின்பற்றவேண்டுமென்று எதிர்பார்க்கிறார். தேவனுடைய ஜனங்களாயிருப்பது என்பதின் பொருள் புத்தக மக்களாயிருப்பது.

கி.மு.622–ல் யூதாஜனங்கள் புத்தக ஜனங்களாகத்தான் இருந்திருக்கிறார்கள். ஆனால், அவர்கள் வேற்று கலாச்சாரத்தைப் தழுவினபடியால் அவர்கள் தங்கள் சிந்தனைகளிலும், செயல்களிலும் கெட்டுப்போயிருந்தார்கள். அவர்கள் உண்மை மார்க்கத்தின் சில சிதைவுகளை அந்நிய தேவர்களை வழிபட்டதுபோல் வழிபட்டார்கள். **தேவனுடைய புத்தகம்** நீண்ட நாட்களுக்கு மறக்கடிக்கப்பட்டது.

ஒரு நாளில் ஆசாரியன் ஒருவர் தேவாலயத்தில் நியாயப்பிரமாண புத்தகத்தை கண்டுபிடித்ததால், இக்கண்டுபிடிப்பு ஒட்டு மொத்த தேசத்தின் மீதும் வரவிருந்த அழிவை சில காலத்திற்கு தடுத்தது. **நீங்கள் வீட்டில் தேவனுடைய புத்தகத்தை கண்டுபிடித்துவிட்டீர்களா?**

அக்கண்டுடிப்புக்குப் பிறகு யூதாவின் சில ஜனங்கள் உண்மையாகவே நியாயப்பிரமாண புத்தகத்தை வாசித்து மிக ஆழமாக குத்தப்பட்டு அதன் முக்கியதுவத்தை உணர்ந்தார்கள். வேதாகமத்தை வெறுமனே வாசிப்பது பரிகாசத்திற்குரியது. அதை ஆழமாக வாசிக்கும் போது மட்டுமே அதன் முக்கியக் கருத்துக்களையும் வாழ்க்கை முறையை அது நமக்குத் தெளிவாக்குவதையும் அறிந்து கொள்ள முடியும்.

யூதாவின் ராஜா நியாயப்பிரமாணப் புத்தகத்தை வாசித்த போது தன் வஸ்திரங்களைக் கிழித்தான். ராஜா நியாயப்பிரமாணத்தை ஏனோ தானோவென்றோ, பாடங்களைப்படிப்பது போன்றோ படிக்கவில்லை அவர் நியாயப்பிரமாண புத்தகத்தின் வார்த்தைகளில் தேவன் தன்னிடமும் ஜனங்களிடமும் பேசுவதைக் கேட்டான்; மேலும், ராஜா தானும் தன்னுடைய ஜனங்களும் புத்தகத்தின் பிரமாணங்களை மீறிவிட்டதை உணர்ந்தான். ராஜா மிகுந்த துக்கத்துடனும் குற்ற உணர்வுடனும் தன் வஸ்திரங்களை கிழித்தான். வேத வாக்கியங்களை வாசிப்பது உங்கள் வஸ்திரங்களை கிழிக்கத் தூண்டுகிறதா? வேத வாக்கியங்களை உணர்வுடன் வாசித்து அவைகளை மனதில் பதிக்கிறீர்களா?

கடைசியாக, யோசியா ராஜாவும், சக தலைவர்களும் வேதாகமத்திற்குக் கீழ்ப்படிந்தார்கள். அவர்கள் நியாயப்பிரமாணத்தை வாசித்ததினால் சில காரியங்களை செய்தார்கள். அவர்கள் முறைப்படி

அந்நிய தேவர்களை தங்கள் தேசத்திலிருந்து அகற்றினார்கள். வேத நடைமுறைகளை மீண்டும் கொண்டுவந்தார்கள். அது மட்டுமல்ல வேதாகமம் எவைகளைச் செய்ய வேண்டுமென்று கட்டளையிட்டதோ அதன்படிச் செய்தார்கள். யோசியா ராஜாவின் கீழ்ப்படிதலை நாம் அப்படியே பின்பற்ற வேண்டும். அப்படிச் செய்யும் போது தேவன் நம்மை ஆசீர்வதிப்பார்.

**அப்பொழுது பிரதான ஆசாரியனாகிய இல்க்கியா சம்பிரதியாகிய சாப்பானை நோக்கி:**

நான் கர்த்தரின் ஆலயத்திலே நியாயப்பிரமாண புத்தகத்தைக் கண்டு பிடித்தேன் என்று சொல்லி அந்தப் புத்தகத்தைச் சாப்பானிடத்தில் கொடுத்தான். அவன் அதை வாசித்தான். அப்பொழுது சம்பிரதியாகிய சாப்பான் ராஜாவினிடத்தில் வந்து ராஜாவுக்கும் உத்தரவு சொல்ல ஆலயத்திலே தொகையிட்டுக் கண்ட பணத்தை உமது அடியார் சேர்த்துக்கட்டி அதைக் கர்த்தருடைய ஆலயத்தின் வேலையை விசாரிக்கிறவர்கள் கையிலே கொடுத்தார்கள் என்று சொன்னான். சம்பிரதியாகிய சாப்பான் பிள்ளையும் ராஜாவை நோக்கி ஆசாரியனாகிய இலக்கியா என்னிடத்தில் ஒரு புத்தகத்தை கொடுத்தான் என்று அறிவித்து அதை ராஜாவுக்கு முன்பாக வாசித்தான். ராஜா நியாயப்பிரமாண புத்தகத்தின் வார்த்தைகளை கேட்டபோது தன் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டான் (II ராஜாக்கள் 22:8-11). ✝

## இரு துடுப்புகளையும் பயன்படுத்துதல் :

ஸ்காட்லாந்து நாட்டைச் சேர்ந்த வயதான ஒரு படகோட்டி பயணிகளை அக்கரைக்கு எடுத்துச் செல்லும் வேலையைச் செய்து வந்தார். ஒரு நாள் பயணிகளில் ஒருவர் படகில் இருந்த இரு துடுப்புகளில், ஒரு துடுப்பில் **விசுவாசம்** மற்றொரு துடுப்பில் **கிரியைகள்** எனும் வார்த்தைகள் பொறிக்கப்பட்டதை கண்டார். இதில் ஆர்வம் கொண்ட பயணிஅதன் பொருள் என்ன? என்று கேட்டார். அதற்கு அந்த வயதானவர் நான் காட்டுகிறேன் என்று சொல்லி, விசுவாசம் என்று பொறிக்கப்பட்டிருந்த துடுப்பை கீழே போட்டு விட்டு, **கிரியைகள்** என்று பொறிக்கப்பட்டிருந்த துடுப்பை பிரயோகித்தார். அப்போது அந்தப்படகு சுற்றிச் சுற்றிப் போனது. பின்பு துடுப்பபை கீழே போட்டுவிட்டு **விசுவாசம்** என்று பொறிக்கப்பட்டிருந்த துடுப்பைப் பிரயோசித்தார். அப்போது அந்தப்படகு எதிர்த் திசையில் சுற்றி சுற்றிப்போனது. அப்படிப் பரிசோதனை செய்து காட்டி விட்டு படகோட்டி இரு துடுப்புகளையும் எடுத்து படகோட்டினார். அப்போது படகு மிக லகுவாகவும், வேகமாகவும், சென்றது.

ஆகவே வாழ்க்கைப் பயணத்தில் விசுவாசமும் கிரியைகளும் சேர்ந்திருந்தால் பாதுகாப்பும் முன்னேற்றமும். ஆசீர்வாதமும் நிச்சயம் (யாக்கோபு (2:14.26).

## தேவனுடைய வார்த்தை

# தியானம்


# Meditation

Edward Anderson

**அ**ப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவிடம் **நான் வருமளவும் வாசிக்கிறத்திலும், புத்தி சொல்லுகிறதிலும், உபதேசிக்கிறதிலும் ஜாக்கிரதையாயிரு** என்று அறிவுறுத்தினார். [I தீமோத்தேயு 4:13]. இரண்டு வசனங்களுக்குப் பிறகு பவுல் நீ தேறுகிறது யாவருக்கும் விளங்கும்படி இவைகளையே சிந்தித்துக் கொண்டு இவைகளிலே நிலைத்திரு என்று புத்தி சொன்னார் [வசனம் 15] நாம் தேவனுடைய சித்தத்தை தீர்மானித்து அதற்கு நம்மை முழுமையாக அர்ப்பணிக்கும் போது நாம் ஆவிக்குரிய ரீதியாக வளர்ச்சியடைந்து தேவனுக்கு சிறந்த சேவகர்களாகிறோம்.

நீங்கள் தியானம் செய்கிறீர்களா? புதுமைகளைப் புகுத்தும் மதங்களால் தியானம் மிகக் கடினமான பாதைகளைக் கடந்துவர வேண்டியதாயிருக்கிறது. தியானம் பண்ணுவது என்பது ஆழமாக சிந்திப்பது என்று பொருள்படும். இங்கே பயன்படுத்தப்படும் கிரேக்க பதம் அக்கறைப்படுவது அல்லது ஆழ்ந்து சிந்திப்பது எனும் அர்த்தங் களைக் கொடுக்கிறது. உங்கள் படுக்கையிலே உங்கள் இருதயத்தில் பேசிக்கொண்டு அமர்ந்திருங்கள் [சங்கீதம்4:4]. இந்த அவசரமான உலகத்தில் இது உண்மையாகவே சவாலாக இருக்கிறது.

தாவீது தேவனுடைய இருதயத்துக்கு ஏற்ற தாசனாக இருந்தார் 1: அவர் தொடர்ச்சியாக தேவனுடைய கிரியைகளை சிந்தித்தார் **பூர்வ நாட்களை நினைக்கிறேன் உமது செய்கைகளையெல்லாம் தியானிக்கிறேன்,** உமது கரத்தின் கிரியைகளை யோசிக்கிறேன் [சங்கீதம் 143:5] 2 : அவர் தியானித்திற்குத் தன்னை அர்ப்பணித்திருத்திருந்தார். கர்த்தருடைய செயல்களை நினைவு கூருவேன்; உம்முடைய பூர்வகாலத்து அதிசயங்களையே நினைவு கூருவேன் உம்முடைய கிரியைகளையெல்லாம் தியானித்து, உம் முடைய செயல்களை யோசிப்பேன் [சங்கீதம் 77:11.12]3. தாவீது, தியானம் தனக்குள் நேர்மறையான எண்ணங்களை ஏற்படுத்தினதாகக் கூறுகிறார். நான் அவரைத் தியானிக்கும் தியானம் இனிதாயிருக்கும்; நான் கர்த்தருக்குள் மகிழுவேன் [சங்கீதம் 104:34].4 அவர் தேவனுடைய வசனத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன், நாள் முழுவதும் அது என் தியானம் [ சங்கீதம் 119:97]. தேவனைப்பற்றி சிந்திப்பது தாவீதுக்கு அருமையானவைகள்; அவைகளின் தொகை



எவ்வளவு அதிகம் (சங்கீதம்139:17) தேவனுடைய இருதயத்துக்கு ஏற்ற தாசனாக தாவீது இருந்ததில் ஆச்சரியம் எதுவுமில்லை!

நாம் தேவனுடைய வார்த்தைகளை அதிகமாக தியானிக்க வேண்டும் ! தாவீது நீதிமானைப்பற்றி அதிகமாக எழுதியிருக்கிறார். கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவு பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான் (சங்கீதம் 1:8) தேவனுடைய ஜனங்களை வழி நடத்து கிறவர்கள் தியானிக்கிறவர்களாக இருக்க வேண்டும். தேவன் யோசுவாவுக்கு இவ்விதமாக அறிவுறுத்தினார். இந்த நியாயப்பிரமாண புத்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக. இதில் எழுயிருக் கிறவைகளின்படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி இரவும் பகலும் அதைத் தியானித்துச் கொண்டிருப்பாயாக (யோசுவா 1:2).

நாம் தேவனுடைய வார்த்தையை தியானிக்க வேண்டும். ஏனென்றால், அது நம்முடைய பிரியமாயிருக்கிறது (சங்கீதம் 1:2) அப்போது தான் நம் வழிகளை தேவன் வாய்க்கப்பண்ணுவார் (யோசுவா 1:8) அது ஞானத்தை கொண்டுவருகிறது (சங்கீதம் 49:3); அது நம்மை மகிழ்விக்கிறது (சங்கீதம் 104:34); அது நாம் பாவம்செய்யாமல் தடுக் கிறது. சங்கீதம் 119 :11. அது நம்முடைய பிரியமாயிருக்கிறது (சங்கீதம் 119:97) அது தரும் யோசனைகள் அருமையானவைகள் (சங்கீதம் 139:17) அது ஆவிக்குரிய முன்னேற்றத்தை கொண்டு வருகிறது. (II தீமோத்தேயு 4:15). என் கன்மலையும் என் மீட்பாருமாகிய கர்த்தாவே என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் தியானமும் உமது சமூகத்தில் பிரீதியாயிருப்பதாக (சங்கீதம்19:14).

கிறிஸ்துவுடனே சிலுவையிலறையப்பட்டேன் ஆயினும் பிழைத்திருகிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத் திருக்கிறார். நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத் திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காக தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே பிழைத் திருக்கிறேன் (கலாத்தியர் 2:20) நீங்கள் இந்த வசனத்தின்படி செய்வதாக சொல்லிக்கொள்ளலாம். ஆனால், கிறிஸ்துவின் பிரமாணங்களைப் பின் பற்றவில்லையென்றால் உங்கள் வார்த்தைகள் வெற்றுவார்த்தைகளாகத்தான் இருக்கும். இதை ஏன் செய்யக் கூடாது? அவருடைய கட்டளைகளுள் ஒன்று மாற்கு 16:16 ல் இடம் பெற்றிருக்கிறது. ✝

# I கொரிந்தியர் 9 : 1 - 18

- ☑ பவுல் தனிப்பட்ட முறையில் இயேசு கிறிஸ்துவை தரிசித்தாரா? வசனம் 1

- ☑ பவுலின் அப்போஸ்தலத்துவத்தின் முத்திரை எதுவாக இருந்தது? வசனம் 2

- ☑ பவுலின் கூற்றுப்படி மனைவியை கூட்டிக்கொண்டு திரிய யாருக்கெல்லாம் அதிகாரம் இருந்தது? (வசனம் 5)

- ☑ பவுல் தானும் பர்னபாவும் சபை மூலமாக உதவியை பெற்றிட தங்களுக்கு அதிகாரம் இருக்கிறது என்பதை நிரூபிப்பதற்கு பவுல் என்ன உதாரணங்களைக் கொடுத்தார்? வசனம் 6

- ☑ உழுகிறவன் ............ உழவும், போரடிக்கிறவன் தான் நம்புகிறதில் பங்கடைவேன் என்கிற நம்பிக்கையோடே .......... வேண்டியதே, ஆகையால் அது நமக்காகவே ......... வசனம் 11

- ☑ சபையிலிருந்து உதவிபெறுவதற்கு பவுலால் மேற்கோள் காட்டப்படும் பழைய ஏற்பாட்டு வசனம் என்ன?

- ☑ நாங்கள் உங்களுக்கு ............ விதைத்திருக்க, உங்கள் ............ அறுத்தால் அது பெரிய காரியமா?

- ☑ பவுல் சபையிலிருந்து ஏன் உதவி பெறவில்லை?

- ☑ பலிபீடத்தை அடுத்துப் பணிவிடை செய்பவர்களுக்கு எவைகளில் பங்கு உண்டு?

- ☑ பவுலின் கூற்றுப்படி சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்கு எதினால் பிழைப்பு உண்டாக வேண்டும்? (வசனம் 14)

- ☑ சுவிசேஷத்தைத் தான் பிரசங்கித்து வந்தும், மேன்மை பாராட்ட தனக்கு இடமில்லை என்று பவுல் ஏன் சொன்னார்? (வசனம் 16)

- ☑ பவுலினிடத்தில் எது ஒப்புவிக்கப்பட்டிருந்தது? (வசனம் 17)

# நான் மரணம்

நான் மரணம் .............

நான் ஒட்டுமொத்த மனித இனத்தையும் இரையாக்குகிறேன் ;

நான் மனிதர்கள் அறியாத அவர்களுடைய இருண்டவேளையிலே வருகிறேன்;

நான் இதயத்துடிப்பை நிறுத்தி, ஜீவ இரத்தத்தின் ஓட்டத்தை நிறுத்துகிறேன்;

நான் மனிதர்களுடைய அழகை தூசியும், குப்பையுமாக மாற்றுகிறேன்;

நான் உயிருள்ள மனிதர்களைப் பிடித்து, கல்லறைகளில் வைக்கிறேன்;

நான் மனிதனை வேறொரு உலகில் நித்தியத்தை எதிர்கொள்ள அனுப்புகிறேன்;

என் இரகசிய அழைப்பை உங்களால் தடுக்க முடியாது. ஏனென்றால், நான் நிச்சயமாக வருவேன்;

என்னை சந்திக்க ஆயத்தமாகுங்கள்;


நான் மரணம்

# வேதாகம சித்திரங்கள்

அன்பின் சித்திரம்
யோவான் 3:16–17

பரலோகத்தின் சித்திரம்,
வெளிப்படுத்தின விசேஷம் 21

பாடுகளின் சித்திரம்
மத்தேயு 27




ஆராதனையின் சித்திரம்
அப்போஸ்தலர் 20:1

வெற்றியின் சித்திரம்
யோவான் 14:19

மாய்மாலத்தின் சித்திரம்
மத்தேயு 6: 1–8

கீழ்ப்படிதலின் சித்திரம்
அப்போஸ்தலர் 8:26–39

உண்மையற்ற நிலையின் சித்திரம்
II தீமோத்தேயு 4:10

பேராசையின் சித்திரம்
அப்போஸ்தலர் 5:1–11

மனந்திரும்புதலின் சித்திரம்
லூக்கா 4:10

பெருமையின் சித்திரம்
லூக்கா 18:1–14

இரட்சிப்பு

## நான் எழுந்திருப்பதற்கு முன்பாக மரிக்க வேண்டியிருந்தால்

# If I Shall Die Before I Wake

**Steve Higginbotham**

**நா**ன் குழந்தையாயிருந்தபோது, என் பெற்றோர்கள் பின்வரும் ஜெபத்தை ஜெபிப்பதற்கு கற்றுக் கொடுத்தார்கள். உங்கள் ஜெபமும் இதேவிதமாக இருக்கிறதா? குழந்தைகளால் பெரும்பாலும் மனப்பாடம் செய்யப்படும் ஜெபம் இப்படியாக இருக்கிறது.

இப்போது நான் தூங்கும்படி படுத்துக்கொள்கிறேன்.
கர்த்தாவே என் ஆத்துமாவை காத்துக் கொள்ளும்படி ஜெபிக்கிறேன்
நான் எழுந்திருப்பதற்கு முன்பாக மரிக்க வேண்டியிருந்தால்
என் ஆத்துமாவை சேர்த்துக்கொள்ளும்படி ஜெபிக்கிறேன்.

நாம் எழுந்திருப்பதற்கு முன்பாக மரிக்கும் வாய்ப்பு பல உட்பொருட்களை கொண்டுள்ளது. அப்படித்தானே? ஆயினும், முக்கியமான கருத்து என்னவென்றால், அத்தகைய முடிவு நேரிட்டால் அதற்காக ஆயத்தமாகி விட்டீர்களா? நீங்கள் மரிக்கத் தயாராகி விட்டீர்களா? உங்கள் நித்தியம் பாதுகாப்பாக இருக்கிறதா? இவைகள் எல்லாம் நல்ல கேள்விகள் தான். அதிலும் குறிப்பாக, தேவனுக்கு முன்பாக எப்பணி அந்த நியாயத்தீர்ப்பின் நாளிலே நிற்க வேண்டும் என்பதைக்குறித்து நாம் ஆழமாக சிந்தித்து கேள்விகளை எழுப வேண்டும். நீங்கள் எழுந்திருப்பதற்கு முன்பாக மரித்தால் எப்படியிருக்கும்? எல்லாம் நன்றாக இருக்குமா? அநேகமாக இதே கேள்வியை நமக்குள்ளே ஒவ்வொருவரும் கேட்க விரும்புவோம், ஆனால், அதே கேள்வி மீது உங்கள் சிந்தையை இவ்வேளையில் செலுத்தும்படி நான் விரும்பவில்லை.

மாறாக, இவ்வேளையில் நீங்கள் எழுந்திருக்கும் போது சாகாமல் இருந்தால் வாழ்வதற்கான ஆயத்தப்பணிகளை செய்துவிட்டீர்களா? கிறிஸ்துவுக்குள் மரிக்கத் தயாராவது என்பது ஒரு காரியம். கிறிஸ்துவுக்காக வாழத் தயாராவது என்பது மற்றுமொரு காரியம். நீங்கள் காலையில் எழும்போது மரிக்கவில்லையென்றால் அதற்காக என்ன ஆயத்தம் செய்திருக்கிறீர்கள்? உங்கள் நேரத்தையும், தாலந்துகளையும், ஆற்றலையும் தேவனுடைய சேவையில் எப்படி செலவழிக்க வேண்டுமென்று திட்டமிட்டுவிட்டீர்களா? தீர்மானித்து விட்டீர்களா?

நீங்கள் மரிப்பதற்கு முன்பாக விழித்துக்கொண்டால், நாளைய தினத்தை நீங்கள் எப்படி பயன்படுத்துவீர்கள்? அதைக்குறித்து என்னத் திட்டங்களைத் தீட்டியிருக்கிறீர்கள்? உங்கள் திட்டங்கள் தேவனுடைய ராஜ்யத்தை ஈடுபடுத்துகிறதா?

ஒருவரால் உங்கள் திட்டங்களை ஆராய்ந்து நீங்கள் இயேசுவின் சீஷர்கள் என்பதை தீர்மானிக்க முடியுமா?

நீங்கள் மரிப்பதற்கு முன்பாக விழித்துக்கொண்டால், மற்றொரு நாளால் நீங்கள் வரவேற்கப்பட்டால், உங்கள் நேரத்தோடு என்ன செய்வீர்கள்? சுவிசேஷத்தை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ள உங்களிடம் சிறப்புத் திட்டம் ஏதாவது உண்டா? தேவையில் இருக்கும் ஏதோ ஒருவருக்கு இயேசுவின் நாமத்தில் சேவை செய்ய சிறப்பு திட்டங்கள் ஏதேனும் உண்டா? நீங்கள் ஜெபித்துக் கொண்டிருக்கும் அல்லது சந்திக்க நினைக்கும் ஒருவரைக் குறித்த மனக் கண்ணோட்டம் எப்படியாக உள்ளது? உங்கள் பிராந்திய சபையை பெலப்படுத்தவும், சிறந்த முறையில் அங்கே சேவை செய்யவும் எப்போதாவது சிந்தித்ததுண்டா?



ஒருவர் கிறிஸ்துவுக்குள் வாழ தயாராகும்வரை ஒருவரால் கிறிஸ்துவுக்குள் மரிக்க தயாராக முடியுமென்று என்னால் உண்மையாக நினைக்க முடியவில்லை. உண்மையில் ஒருவர் கிறிஸ்துவுக்குள் மரிக்க தயாராவதற்கு. அவர் கிறிஸ்துவுக்குள் வாழ்ந்திருக்க வேண்டும்.

மறுபடியும் கேள்விக்கு திரும்புவோம். நீங்கள் விழிப்பதற்கு முன்பாக மரித்துவிட்டால் உங்களுக்கு என்ன நடக்கும்? அதற்குச் சமமான முக்கியத்துவம் வாய்ந்த கேள்வி மரிப்பதற்கு முன்பாக நீங்கள் விழித்துக் கொண்டால் என்ன நடக்கும்? ✝

நீங்கள் எழுந்திருப்பதற்கு முன்பாக மரிக்க வேண்டியிருந்தால் உங்கள் ஆத்துமா எடுத்துக்கொள்ளும்படி ஜெபிக்கிறேன் ஆனால், நீங்கள் மரிப்பதற்குமுன்பாக விழித்துக் கொண்டால் பின்பு என்ன நடக்கும்?

## உங்களுக்கு வேறன்னவெல்லாம் வேண்டும்?

கவர்ந்திழுக்கும், கதாநாயக உருவம்
வல்லமையுள்ள வார்த்தைகள், பழங்கால ஞானம்
அடையாள உணர்வு
தோழமை உணர்வு
தெளிவாக வரையறுக்கப்பட்ட ஊழியம்
இருப்பதற்கான விரிவான விளக்கம்
மனதை உருவாக்கும் சம்பவம்
அர்த்தமுள்ள செயல்பாடு
தொடர்ச்சியான ஊக்கம்
வெற்றிக்கான வலிமை

மேற்சொல்லப்பட்ட எல்லாவற்றையும் கிறிஸ்துவின் வழி பெற்றிருக்கிறது. கிறிஸ்து எல்லாமுமாக இருக்கிறார் (கொலோ.3:11).

✝

**எண்ணிப்பார்ப்போம்**

*தேவன் நமக்கு எத்தனையோ ஆசீர்வாதங்களைத் தந்திருக்கிறார். தேவனிடத்திலிருந்து நான் ஒரு ஆசீர்வாதத்தைக் கூட பெறவில்லை என்று ஒருவர்கூட சொல்ல முடியாது. ஆனாலும், பல வேளைகளில் தேவன் எங்களுக்கு ஒரு நன்மையும் செய்யவில்லை என்று சிலர் முறு முறுப்பதை, முணுமுணுப்பதை நாம் பார்க்க முடியும். உண்மையாகவே, தேவன் நமக்குப் கொடுத்த ஆசீர்வாதங்களை எண்ணிப்பார்க்க நாம் அதிக நேரத்தை எடுத்துக் கொண்டால், நாம் கவலைப்படுவதற்கு நமக்கு நேரமே இருக்காது.*

## ஆசையாக ஞானஸ்நானம்?

# Buptism By Desire?

### E. Claude Gandnet

ஒரு தொலைக்காட்சி பிரபலம் ஒரு முறை ஞானஸ்நானத்திற்கு மாற்றாக அல்லது பதிலியாக இருப்பது **ஆசையோடு ஞானஸ்நானம்** என்று சொன்னார். ஒருவர் ஞானஸ்நானம் பெறத் தவறிவிட்டால் அவருடைய நல்வாழ்க்கை மற்றும் குணாதிசயம் ஆசையாக ஞானஸ்நானம் பெறுவதற்கு இணையான ஒன்றாகிவிடும் என்று சொன்னார். இது ஒரு புதுமையான, முரண்பட்ட போதனையாகும். தேவனுடைய வெளிப்படையான கட்டளையை நிராகரிக்கும் தவறான உபதேசங்களில் இதுவும் ஒன்று.

மரியாதைக்குரிய Marshall Keeble என்பவர் **வேதாகமம் மிகச் சரியானது. ஞானஸ்நானத்தைப் பற்றி பார்க்கும் போது இது உண்மையாக இருக்கிறது** என்று சொல்வதை வழக்கமாக கொண்டிருந்தார். ஞானஸ்நானத்தைப் பற்றிய உண்மைகள் இதோ.

**இது பாவத்திலிருந்து இரட்சிக்கிறது.** விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானப் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் [மாற்கு 16:16].

**இது கட்டளையிடப்பட்டிருக்கிறது.** பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் [அப்போஸ்தலர் 2:38]. கர்த்தருடைய நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கும்படி கட்டளையிட்டான் [அப்போஸ்தலர் 10:48].

**இது பாவமன்னிப்புக்கானது.** இப்பொழுது நீ தாமதிக்கிற தென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு என்றான் [அப்போஸ்தலர் 22:16]

**தேவனைப்பற்றும் நல் மனசாட்சியின் உடன்படிக்கை யாயிருந்து நம்மையும் இரட்சிக்கிறது.** அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல் தேவனைப்பற்றும் நல்மனச் சாட்சியின் உடன்படிக்கையாயிருந்து. இப்பொழுது நம்மையும் இயேசு கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது [I பேதுரு 3:21]

இது ஒருவரை சபையிலே சேர்க்கிறது. இரட்சிக்கப் படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார் (அப்போஸ்தலர் 2:47)

**இது அடக்கமாயிருக்கிறது. ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றோம்.** கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும், பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப் பட்டோம் (ரோமர் 6:3,4)

**இது புதிய பிறப்புக்கு அவசியமாயிருக்கிறது.** இயேசு பிரதியுத்த மாக: ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் (யோவான் 3:5).

**இது ஒருவரை ஞானஸ்நானத்திற்குப் பிறகு மகிழ்ச்சியடையச் செய்கிறது.** அவர்கள் தண்ணீரிலிருந்து கரையேறின பொழுது, கர்த்தருடைய ஆவியானவர் பிலிப்பை கொண்டு போய்விட்டார். மந்திரி அப்புறம் அவனைக் காணாமல், சந்தோஷத்தோடே தன் வழியே போனான் (அப்போஸ்தலர் 8:39).



**இது ஒருவரை இரட்சகராகிய கிறிஸ்துவுக்குள் கொண்டு வருகிறது.** நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ, அத்தனை பேரும் கிறிஸ்து வைத்தரித்துக் கொண்டீர்களே (கலாத்தியர் 3: 26,27).

தெளிவாகவே, ஞானஸ்நானத்திற்கு வெறுமனே ஆசை மட்டும் போதாது. அதற்கு மேலே ஒன்று அவசியப்படுகிறது. ஞானஸ்நானத்தை யாரும் நிராகரிக்கவும் முடியாது. ஞானஸ்நானத்திற்கு மாற்றாக பாவிகளின் ஜெபமோ, விசுவாசம் மாத்திரம் போதும் போன்ற உபதேசங்களோ இருக்க முடியாது. நல்லொழுக்கம் இருப்பதால் ஞானஸ்நானம் பெறாமல் இருக்க முடியாது. நீங்கள் எதற்காக காத்து கொண்டிருக்கிறீர்கள்? ✝

இரட்சிப்பு

# பரலோகம் : அங்கேதான் இளைப்பாறுதல் இருக்கிறது

# Heaven : The Rest Which Remains

**Charles Box**

பரலோகம் என்பது அன்பு சந்தோஷம் மற்றும் நித்திய சமாதானத்தின் இடமாயிருக்கிறது. இதைப்பற்றி பக்தனாகிய யோபு **துன்மார்க்கருடைய தொந்தரவு அங்கே ஓய்ந்திருக்கிறது. பெலனற்று விடாய்த்துப் போனவர்கள் அங்கே இளைப் பாறுகிறார்கள்** என்று சொல்கிறார். யோபு 3:17]. தேவன் பரலோகத்தில் இருக்கிறார் [மத்தேயு 5:16]. தேவன் தம்முடைய ஜனங்களுக்கு இளைப்பாறும் இடமாக பரலோகத்தைக் கொடுக்கிறார் [எபிரெயர் 4:9–1]. இப்போது நாம் பரலோகத்தைப் பற்றி இன்னும் ஆழமாக வேத வாக்கியங்களியிருந்து கற்றுக்கொள்வோம்.

## இயேசு பரலோகத்திலிருந்து வந்தவர்

என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்திறங்கி வந்தேன் என்று நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சொன்னார் [யோவான் 6:38]. காலம் நிறைவேறின போது, அதாவது தேவனுடைய சரியான நேரத்தில் இயேசு மரியாள் என்னும் பெயர் கொண்ட ஒரு கன்னியினிடத்தில் பிறந்தார் [கலாத்தியர் 4:4] பரலோகம் நம் நிரந்தர வீடாயிருக்கும்படி இயேசு கிறிஸ்து நம் பாவங்களை அவருடைய சரீரத்தில் சுமந்தார் [I பேதுரு 1:18–20]. நாம் பரலோகம் போகும்படி இயேசு கிறிஸ்து இப்பூமிக்கு வந்தார்.

## பரலோகத்தில் என் பெயர் எழுதப்பட்டிருக்கிறது

நீங்களோ சீயோன் மலையினிடத்திற்கும் ஜீவனுள்ள தேவனு டைய நகரமாகிய பரம எருசலேமினிடத்திற்கும், ஆயிரம் பதினா யிரமான தேவதூதர்களினிடத்திற்கும் பரலோகத்தில் பேரெழுதி யிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபையினிடத் திற்கும், யாவருக்கும் நியாயதிபதியாகிய தேவனிடத்திற்கும், பூரண மாக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகளிடத்திற்கும் வந்து சேர்ந்தீர்கள் என்றார். [எபிரெயர் 12:22–23]. உங்கள் பெயர்கள் பல இடங்களில் இருக்கும். அநேகமாக திருமண பதிவேட்டில், சொத்து பட்டாவில், காசோலைகளில், பாஸ் போர்ட்களில், ரசீதுகளில் இன்னும், பல இடங்களில் இருக்கலாம். நீங்கள் ஞானஸ்நானத்தில் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டு, அவருடைய சபையில் உண்மையாக அங்கம் வகித்தால், உங்கள் பெயர்கள் பரலோகத்தில் எழுதப்பட்டிருந்தால் இயேசு கிறிஸ்து

பரலோகத்திலிருந்து திரும்பி வந்து உண்மையுள்ளவர்களை தம்மோடு என்றென்றும் இருப்பதற்காகச் சேர்த்துக்கொள்வார் [I தெசலோனிக்கேயர் 4:16,17].

**பரலோகம் ஆத்துமாவுக்கான நித்திய வீடாயிருக்கிறது.**

உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால் நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன் [யோவான் 14:13]. சரீரம் மரிக்கும். ஆதலால், கைகளால் செய்யப்படாத நித்தியவீடு பரலோகத்தில் நமக்காக காத்து கொண்டிருக்கிறது. [II கொரிந்தியர் 4:16 –5:8. பரலோகத்தில் நமக்கு மகிமையான சரீரமும் கொடுக்கப்படும். அதேபோல் ஒரு மாளிகையும் ஆயத்தமாயிக்கும்.

**பரலோகம் நம் இலக்காகவும், நம் பலனாகவும் இருக்கிறது**

**சந்தோஷப்பட்டு, களிகூருங்கள் : பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்** [மத்தேயு 5:12]. பரலோகமே மனிதனுடைய மிகப்பெரிய லாபமாக அல்லது ஆதாயமாக இருகிறது. ஒருவர் பரலோகம் போக தேவனுடைய வார்த்தையை கேட்க வேண்டும். [ரோமர் 10:17], அதை விசுவாசிக்க வேண்டும் [யோவான் 8:24], பாவங்களிலிருந்து மனந்திரும்ப வேண்டும் [லூக்கா 13:3], இயேசுவை ஆண்டவரென்றும், கிறிஸ்துவென்றும் அறிக்கையிட வேண்டும் [ரோமர் 10:9–10] ஞானஸ்நானம் பெற வேண்டும். [அப்போஸ்தலர் 22:6] மரணபரியந்தம் உண்மையாயிருக்க வேண்டும் [வெளிப்படுத்தின விசேஷம் 2:16]. இயேசு கிறிஸ்து தம்மைப் பின்பற்றுபவர்கள் எல்லோருமே பரலோகத்தில் இருக்க வேண்டுமென்று விரும்புகிறார். பிதாவே உலகத்தோற்றத்துக்கு முன் நீர் என்னில் அன்பாயிருந்த படியினால், நீர் எனக்குத்தந்த என்னுடைய மகிமையை நீர் எனக்குத் தந்தவர்கள் காணும்படியாக, நான் எங்கே இருக்கிறோனோ அங்கே அவர்களும் என்னுடனே கூட இருக்க விரும்புகிறேன் [யோவான்17:24].

பரலோகம் என்பது ஒவ்வொரு உண்மையுள்ள கிறிஸ்தவனுக்காகவும் ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற இடமாயிருக்கிறது. ✝

சபை

## கிறிஸ்தவம் – தேவனோடு மகிழ்ச்சியான ஒரு நடை

# Christianity - a Joyful Walk With God!

**Thomas R.Dohling**



பூமியின் குடிகளே, எல்லாரும் கர்த்தரைக் கெம்பீரமாய்ப் பாடுங்கள். மகிழ்ச்சியோடே கர்த்தருக்கு ஆராதனை செய்து, ஆனந்த சத்தத்தோடே அவர் சந்நிதி முன் வாருங்கள். கர்த்தரே தேவனென்று அறியுங்கள். நாம் அல்ல அவரே நம்மை உண்டாக்கினார். நாம் அவர் ஜனங்களும் அவர் மேய்ச்சலின் ஆடுகளுமாயிருக்கிறோம். அவர் வாசல்களில் துதியோடும், அவர் பிரகாரங்களில் புகழ்ச்சியோடும் பிரவேசித்து அவரைத்துதித்து அவருடைய நாமத்தை ஸ்தோத்திரியுங்கள். கர்த்தர் நல்லவர் அவருடைய கிருபை என்றென்றைக்கும் அவருடைய உண்மை தலைமுறை தலைமுறைக்கும் உள்ளது. [சங்கீதம் 100].

மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் சங்கீதம் 100 தேவனுடைய ஜனங்கள் மத்தியில் மிகவும் பிரபலமான வசனப்பகுதியாகும். நம்மில் பெரும்பாலனவர்கள் சிறுவயதிலேயே பலமுறை இவ்வசனப்பகுதியை தனிப்பட்ட முறையிலும், குடும்பமாகவும் நாம் வாசித்திருப்போம். தேவனை மகிழ்ச்சியோடு ஆராதனை செய்வதைக் குறித்து மிகத் தெளிவாக இங்கே விவரிக்கப்பட்டுள்ளது.

நாம் பாவத்திலிருந்து இரட்சிக்கப்படும்படியாக நம்மில் அன்பு கூர்ந்து நமக்காக மரித்த நம் ஆண்டவரும் இரட்சகருமாயிருக்கிற இயேசுவைப் பற்றி பேச நான் ஆசையாயிருக்கிறேன். தேவன் நம்மை உன்னதங்களிலே கிறிஸ்துவோடே கூட உட்காரச் செய்திருக்கிறார் [எபேசியர் 2:6].

என் வாழ்க்கைப் பயணம் மிகக் கடுமையாக, கொடுமையாக இருந்தபடியால் என் மனதில் பல சந்தேகங்கள் ஓடிக்கொண்டிருந்தன. ஆனால், என் மேய்ப்பராயிருந்து [என் எல்லாமுமாயிருந்து] நான் அவரை நம்ப கற்றுக்கொடுக்கும் இடத்திற்கு என்னை அழைத்துக்

கொண்டு வந்தபடியால் நான் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். நான் தேவனோடு நடக்கும் போது, அவரோடு பேசும் போது, அனுதினமும் அவருடைய சித்தத்தைத் தேடும்போது அவர் அநேக காரியங்களை கற்றுக் கொடுக்கிறார். இங்கே தேவனை நம்புவது தான் முக்கிய அம்சமாயிருக்கிறது. எரேமியா 17:5–8 லிருந்து கொடுக்கப்பட்டுள்ள கீழ்க்காணும் வசனங்களை ஆழ்ந்து சிந்தியுங்கள்.

கர்த்தரை விட்டு விலகுகிற இருதயமுள்ள மனுஷன் சபிக்கப் பட்டவன் என்று கர்த்தர் சொல்லுகிறார். அவன் அவந்தரவெளியில் கறளையாய்ப்போன செடியைப் போலிருந்து நன்மை வருகிறதைக் காணாமல், வனாந்தரத்தின் வறட்சியான இடங்களிலும், குடியில்லாத உவர் நிலத்திலும் தங்குவான். கர்த்தர் மேல் நம்பிக்கை வைத்து, கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் தண்ணீரண்டையிலே நாட்டப்பட்டதும், கால்வாய் ஓரமாகத் தன் வேர்களை விடுகிறதும், உஷ்ணம் வருகிறதைக் காணாமல் இலை பச்சையாயிருக்கிறதும் மழைத் தாழ்ச்சியான வருஷத்திலும் வருத்தமின்றித் தப்பாமல் கனிகொடுக்கிறதுமான மரத்தைப் போலிருப்பான் [எரேமியா 17:58]

இங்கே வித்தியாசத்தை பாருங்கள்! மனிதனை நம்புகிறவன் தேவனை விட்டு விலகுகிறபடியால் எவ்வளவு சபிக்கப்பட்டவன்! அவன் வாழ்க்கை கனிகொடாததும், எவ்வளவு வெறுமையு மாயிருக்கிறது! ஆனால், தேவனை நம்புகிறவன் எவ்வளவு ஆசீர் வதிக்கப்பட்டவன்! நிரம்புகிறதிலிருந்து நிரம்பி வழியும் ஆசீர் வாதத்தை அவன் பெறுவான்!

நாம் தேவனை நம்பும் போது, நாம் எல்லாவற்றையும் அவரிடம் சொல்வோம். நாம் அவரிடம் நம் பெலவீனங்களை, நம்மைப்பற்றி மோசமான காரியங்களைக்கூட பகிர்ந்துகொண்டு காரியங்கள் நல்லவிதமாய் முடியவேண்டும் என்று அவரை நோக்கிப் பார்ப்போம். தேவன் நமக்கு நன்மை செய்ய ஆவலாக இருக்கிறார். ஏனென்றால், அவர் உண்மையுள்ளவராயிருக்கிறார். அவர் அன்புள்ள வராயிருக்கிறார்.

கிறிஸ்தவம் என்பது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் தேவனோடு நடப்பது என்பதை இப்போது புரிந்திருக்கிறேன். இதை நாம் அனுபவத்திலிருந்து அறிகிறோம். இது அவரை வெறுமனே அறிந்து கொள்வதை விட பரவசமானதும், நிறைவானதுமாயிருக் கிறது. யாரோ ஒருவர் இவ்விதமாகச் சொன்னார். தேவன் இருப்பதற்கான ஆதாரமாக வேதாகமம் இருக்கிறது. தேவன் அன்பாகவே இருக்கிறபடியால் நாம் அன்பில் வேரூன்றப்பட

வேண்டும் (I யோவான் 4:8). வேறு விதமாகச் சொன்னால், தேவனுடைய அன்பின் வெளிப்பாடாகிய இயேசுவை நம் அஸ்திபாரமாகக் கொண்டிருக்க வேண்டும். எபேசு பட்டணத்திலுள்ள கிறிஸ்தவர்களுக்காக பவுலின் ஜெபத்தை ஆழ்ந்து சிந்தியுங்கள்.

நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படவும் விசுவாத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்காவும், நீங்கள் அன்பிலே வேரூன்றி, நிலை பெற்றவர்களாகி சகல பரிசுத்தவான்களோடுங்கூட கிறிஸ்துவின் அன்பின் அகலமும், நீளமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்து கொள்ள வல்லவர்களாகவும், தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும், அவர் தமது மகிமையுள்ள ஐசுவரியத்தின்படியே, உங்களுக்கு அநுக்கிரகம் பண்ணவேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன். நாம் வேண்டிக் கொள்ளுகிறதற்கும் நினைப்பதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின் படியே நமக்குச் செய்ய வல்லவராகிய அவருக்கு, சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும் சதா காலங்களிலும் மகிமை உண்டாவதாக ஆமென். (எபே.3:16-21)

நாம் ஒவ்வொரு நாளும் உணர்வோடு தேவனுடன் நடந்து அவருடைய சித்தம் நம் வாழ்வில் நிறைவேற அனுமதிக்கும் போது, அவரை அனுபவத்தால் இன்னும் அதிகமாக அறிந்து கொள்கிறோம். இறையியல் என்பது தேவனைப்பற்றிய கோட்பாடுகளையும் அனுமானங்களையும் உள்ளடக்கியதாகும். நாம் கோட்பாடுகளிலும் அனுமானங்களிலும் சஞ்சரிப்பவர்கள் அல்ல. தேவன் யார் என்பதை காட்டுகிறார். **என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல. உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார். பூமியைப் பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்தி ருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப் பார்க்கிலும் என் வழிகளும், உங்கள்** நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது (ஏசாயா 55:8,9).

அனுதினமும் அவரோடு நடந்து, அவரோடு உரையாடி உங்களுக்கு சிறந்ததைச் செய்ய அனுமதிக்கும் போது அவர் யார் என்பதை அறிந்து கொள்வீர்கள். தேவன் நம்மை தம்முடைய சாயலில் உருவாக்கி அவரை நாம் பலவிதங்களில் அறிந்து கொள்ளும் திறமையைத் தந்திருக்கிறார். நம்முடைய உள்ளான மனிதனில்

ஆத்துமாவின் ஆழத்தில், அவரை அறிந்து கொள்வது ஓர் அலாதியான அனுபவம். தேவனுடைய வார்த்தைகளை வாசித்துத் தியானிக்க மறக்க வேண்டாம். ஏனென்றால், தேவனைப்பற்றி சாட்சி கொடுப்பவைகள் அவைகள்தானே. இப்படிச்செய்வதன் மூலமாக இப்பூமியில் தேவனோடு நடந்து, அவரோடு என்றென்றும் வாசம் செய்யும் பரலோகத்திற்கு அவர் அழைக்கும்வரை அவரோடு நெருக்கமாக உறவை வைத்துக் கொள்ளலாம்.

ஒரு தகப்பனாக நம் தேவன் நம்மை ஆச்சரியப்படுத்த அதிகமாக விரும்புவார்! அன்பின் உருவமாக அவர் இருந்து கொண்டு, நம்முடைய நலனில் அக்கறைக்கொண்டு அவரோடு நாம் நடந்து அவருடைய சித்தத்தை நாடும் போது அவர் நம்மை மகிழ்ச்சியாகக் காண விரும்புகிறார். இவ்விதமாக நாம் அவரோடு அன்றாடம் நடக்கும் போது சில துயரங்களையும், பாடுகளையும் நாம் எதிர்கொள்ள நேரிடும். அத்தகைய கடினமான சூழ்நிலைகளிலும் அவர் நமக்கு ஆறுதலாகவும், ஆதரவாகவும், கன்மலையாகவும் இருப்பார். ஆனால், பரலோகத்தில் நம் பிதாவின் வீட்டில் காரியங்கள் வித்தியாசமாக இருக்கும். அங்கே துக்கம், கண்ணீர் போன்ற எதுவும் இராது. நாம் அவரை அவருடைய மகிமையில் கண்டு துதித்து, களிகூர்ந்து ஆராதிப்போம். பரலோகத்தில் எப்போதும் சந்தோஷமும், மகிழ்ச்சியும் இருக்கும். நாம் எவ்வளவு அருமையான தேவனைப் பெற்றிருக்கிறோம். அவருக்கே கிறிஸ்து இயேசுவுக்குள் இன்றும், என்றும் சதாகாலங் களிலும் மகிமை உண்டாவதாக! ஆமென்!! ✝

---

## மெய்யான ஜெபம்

*நாம் பெரும்பாலும் ஜெபங்களைச் சொல்கிறோம்*
*ஆனால், நாம் எப்போதாவது ஜெபிக்கிறோமா?*
*நாம் சொல்லும் வார்த்தைகளோடு நம் இருதய நிலை ஒத்துப்போகிறதா?*

*இருதயத்திலிருந்து வார்த்தைகள் வரவில்லையென்றால்*
*கர்த்தர் ஒரு போதும் நம் ஜெபத்தைக் கேட்பதில்லை*
*உதட்டளவிலான ஜெபம் உயரே போவதில்லை.*

## செயலில் கிறிஸ்தவம்
## உங்கள் வெளிச்சம் சமுதாயத்தில் பிரகாசிக்கக்கடவது
# Let Your Light Shine In The Community
### Martha Lynn Rushmore



**கி**றிஸ்தவர்களாக நாம் சமுதாயத்தில் நம்முடைய வெளிச்சத்தை எப்படி பிரகாசிக்கச் செய்யலாம்? நம் வாழ்க்கையின் வெளிச்சமாக கிறிஸ்துவை தரித்துக் கொண்டிருக்கிறோமோ? முதலில் நாம் சரியாக கிறிஸ்தவர்களாகவில்லையென்றால் சமுதாயத்தில் நாம் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தவே முடியாது. ஆகவே, நாம் சரியாக தேவனுடைய பிள்ளைகளாக மாறி தேவனுடைய வார்த்தையைப் பின்பற்ற வேண்டும்.

முதலாவது, ஒருவர் ரோமர் 10:17 ல் பதிவு செய்யப்பட்டிருக்கிறபடி தேனுடைய வார்த்தையைக் கேள்விப்பட வேண்டும். **ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும் கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்.**

இரண்டாவது, ஒருவர் மாற்கு 16:16 ல் குறிப்பிடப்பட்டிருக்கிறபடி தேவனுடைய வார்த்தையை விசுவாசிக்க வேண்டும். **விசுவாச முள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைகுள்ளாகத் தீர்க்கப்படுவான்**

மூன்றாவது, ஒருவர் தன்னுடைய பாவங்களிலிருந்து மனந் திரும்புவது அவசியமாயிருக்கிறது. மனதிலும் மாற்றம் இருக்க வேண்டும். நீங்கள் மனந்திரும்பாமற்போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள் என்று இயேசு கிறிஸ்து சொன்னார் (லூக்கா 13:13). ✝

# செயலில் கிறிஸ்தவம்

# இன்றைய கலாச்சாரத்திற்கு பிரசங்கத்தல்

## Preaching To Today's Culture

Andy Rodison

**ப**ல இடங்களில் நான் இன்றைய கலாச்சாரத்திற்கு பிரசங்கம் எனும் தலைப்பின் கீழ் பிரசங்கித்திருக்கிறேன். ஆனால், இப்போது அவைகளை எழுத்து வடிவில் கொண்டு வர நேரம் வந்து விட்டது என்று நினைக்கிறேன். நிச்சயமாகவே **2021 என்பது 1955** அல்ல என்பதை நாம் யாவரும் ஒத்துக்கொண்டு தான் ஆக வேண்டும். 1955 ல் அமெரிக்க கலாச்சாரம் என்பது இன்று இருப்பதை விட வெகு வித்தியாசமாக இருந்தது. அக்காலக்கட்டத்தில் பெரும்பாலானோர் சபைக்குப் போகிறவர்களாயிருந்தார்கள். பெரும்பாலன மக்கள் கிறிஸ்துவோடு தங்களுக்கு ஏதோ, ஒரு விதமான உறவு இருப்பதாக சொல்லி கொள்வார்கள். எனவே, கர்த்தருடைய சபையின் முக்கியப்பணி மார்க்கப் பிரிவினையின் மாயையிலிருந்து ஜனங்களை மாற்றுவதாய் இருந்தது. அப்பேதைய இலக்கு விசுவாசிகளை புதிய ஏற்பாட்டு கிறிஸ்வத்தின் சத்தியத்தில் இணைப்பதாக இருந்தது. அதே போராட்டம் இன்றும் தொடருகிறது! அதை நாம் மறுக்க முடியாது! இருந்தபோதிலும், தற்போதைய கலாச்சரம் வெகுவாக வித்தியாசப் படுகிறது.

இன்றைய அமெரிக்காவில் மிகக்குறைவான மக்களே ஏதோ ஒரு சபைக்கு போகிறவர்களாயிருக்கிறார்கள். அதாவது, பொதுவாகவே சபைக்கு செல்கிறவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருக் கிறது. இன்றைய நாட்களில் முன்னெப்போதையும் விட அதிகமான மக்கள் தங்களை நாத்திகர்கள் என்று சொல்லிக் கொள்கிறார்கள். பல குடும்பங்களில் குழந்தைகள் எந்த ஒரு ஆலயத்திலும் கால்வைத்ததே இல்லை. கிறிஸ்தவரல்லாதவர்களுடைய எண்ணிக்கை அதிகமாகிக் கொண்ட இருக்கிறது. அமெரிக்காவின் உள்புறங்களிலும் இது ஊடுருவிக் கொண்டிருக்கிறது. வெளிப்படையான ஒழுக்கக்கேடு தனிப்பட்ட ரீதியிலும் கூட்டாகவும் தலைவிரித்தாடுகிறது. மார்க்கப் பிரிவினைக் கூட்டத்தின் எல்லா சபை கட்டிடங்களும் காலியாக இருக்கின்றன அல்லது மெதுவாக காலியாகிக் கொண்டிருக்கிறது.

இது சுவிசேஷ ஊழியத்திற்கு என்ன பொருளைக் கொடுக்கிறது? இந்த தலைமுறைக்கு நாம் **சுவிஷேசத்தை** சற்று மாற்றுவதைக் குறிக்காது. உண்மையில் சுவிசேஷத்தின் **சத்தியத்தை மாற்றவே முடியாது.** நித்திய விளைவுகளை எதிர்கொள்ளத் துணிந்து அதை சிலரால் புரட்டத்தான் முடியும் (கலாத்தியர்1:6 – 9) ஒழுக்கம்

இரட்சிப்பு, சபை, தன்னாட்சி, ஐக்கியம், அன்பு, திருமணம், வாழ்க்கை போன்றவைகளைப்பற்றி தேவனுடைய உபதேசம் இன்றும் அதே மாதிரியாகத் தான் இருக்கிறது [மத்தேயு 28:20; யூதா 3] இருந்த போதிலும், கலாச்சார மாற்றம் போதனைக்கான நம் அணுகுமுறையில் தாக்கத்தை ஏற்படுத்தத்தான் செய்கிறது.

அப்போஸ்தலனாகிய பவுல் பல கலாச்சாரங்களைப் பின்பற்றிய வர்களுக்கு பிரசங்கித்திருக்கிறார். அதிலும் குறிப்பாக, அந்தியோகியாவிலுள்ள யூதர்களிடம் பிரசங்கித்த போது இஸ்ரவேலரே, தேவனுக்கு பயந்து நடக்கிற சகல ஜனங்களே கேளுங்கள். இஸ்ரவேலராகிய இந்த ஜனத்தினுடைய தேவன் நம்முடைய பிதாக்களைத் தெரிந்து கொண்டு... [அப்போஸ்தலர் 13:16,17]. பவுல் இஸ்ரவேலர்களின் சரித்திரத்தைப் பற்றி ஒரு சிறிய பிரசங்கத்தை செய்துவிட்டு கிறிஸ்துவைப்பற்றி பிரசங்கிக்க ஆரம்பித்தார். நான் பவுல் பயன்படுத்தின வார்த்தைகளைப் போல் என் பிரசங்கத்தில் பயன்படுத்தவில்லை. ஏனென்றால், பிரதானமாக நான் யூத கலாச்ரரத்திற்கு பிரசங்கித்ததில்லை. பவுல் அத்தனேப் பட்டணத்தில் பிரசங்கித்த போது அங்கே யூதர்கள் யாருமில்லை. ஆனால், விக்கிரகங்கள் வியாபித்திருந்தது, தத்துவஞானிகள் புதுமையான காரியங்களைக் குறித்து விவாதித்தார்கள். யூதரல்லாத அவர்களிடத்தில் பிரசங்கிக்கும் போது இஸ்ரவேலரே தேவனுக்கு பயந்து நடக்கிற சகல ஜனங்களே கேளுங்கள் என்று பிரசங்கத்திருந்தால் விருப்பமில்லாத பார்வையாளர்களை தான் அவர் எதிர் கொண்டிருப்பார். மாறாக, அவர் அத்தேனரே, எந்த விஷயத்திலும் நீங்கள் மிகுந்த தேவ பக்தியுள்ளவர்களென்று காண்கிறேன், நான் சுற்றித்திரிந்து, உங்கள் ஆராதனைக்குரியவைகளைக் கவனித்துப் பார்த்த பொழுது, அறியப்படாத தேவனுக்கு என்று எழுதியிருக்கிற ஒரு பலிபீடத்தைக் கண்டேன். நீங்கள் அறியாமல் ஆராதிக்கிற அவரையே அறிவிக்கிறேன். இவ்விதமாக பவுல் அவர்களுடைய கவனத்தை ஈர்த்தார் [அப்போஸ்தலர் 17:21,23].

பவுல் அந்த அத்தனே பட்டணத்தாரிடம் சகலவற்றையும் சிருஷ்டித்த மெய்த்தேவனைப்பற்றி அவர்களிடம் உறுதிபடுத்திக் கொண்டார். வேத பாடத்திற்கு செல்வதற்கு முன்பாக அங்கே இருந்த தத்துவ ஞானிகளோடு காரணகாரியங்களை அலசினார். இருந்த போதிலும் அவர் கடைசியாக முழு சுவிசேஷத்தையும் அவர்களுக்குப் பிரசங்கித்தார். மனந்திரும்புதலுக்கு அழைப்பு விடுத்து, நியாயத்தீர்ப்புக்கு ஆயத்தப்படுத்தினார் [அப்போஸ்தலர் 17:30,21]. தற்போதைய கலாச்சாரமும் கூட அத்தனே பட்டணத்து கலாச்சாரத்தை விட மிக மோசமான நிலையில் உள்ளது. இன்று பலரிடம் நாம் வேதபாடம் உங்களுக்கு நடத்தலாமா என்று கேட்டால் அவர்களிடம் வேதாகமமே இல்லை. அவர்கள் வேதாகமத்தை விசுவாசிப்பதும் இல்லை. ஏன் தேவனையே அவர்கள் விசுவாசிப்பதில்லை.

கடந்த நாற்பது அல்லது ஐம்பது ஆண்டுகளாக இளம் வயதினர் மாறி வரும் கலாச்சாரத்தில் சிக்கியுள்ளார்கள். சபைக்கு போவதைக் குறித்து நன்றாக போதிக்கப்பட்டு பெற்றோருடைய முன்மாதிரியை கண்ட வர்கள் எப்படி கலாச்சார வலையில் சிக்கிக் கொண்டார்கள்? அநேகமாக, மார்க்கப்பிரிவினை நண்பர்களுக்கு எப்படி பதில் அளிப்பது என்கின்ற கோணத்தில் பல பிரசங்கங்களை செய்து இளையதலை முறையினரை தவறவிட்டுவிட்டோமா? பல சந்தர்ப்பங்களில் நாம் பார்க்கும் போது இளையதலைமுறை, பரிணாம நாத்தீகர்கள் இயற்கையை வணங்குபவர்கள், பல கடவுள்களை வணங்குபவர் களோடு போராடுகிறார்கள் என்பதை நாம் மறந்து விட்டோமா? ஆவிக்குரிய போராட்டத்தில் இளம் வயதினரும், பெரியவர்களும் எப்படி சவால்களை எதிர் கொள்ளவேண்டுமென்பதைக்குறித்து நன்றாக போதிக்கப்பட வேண்டும்.

சில வருடங்களில் மாற்றங்கள் மிக சீக்கிரமாக ஏற்பட்டுவிட்டது. அத்தனே கலாச்சாரத்திற்கு ஒப்பாக அல்லது அல்லது அதைவிட மோசமாகவும் வேகமாகவும் இன்றைய நாட்களில் கலாச்சாரமும் மாறிவருவதால் நாம் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். ஒருமுறை எனக்கு மிகவும் வேதனையான அனுபவம் ஏற்பட்டது. அதென்னவென்றால், ஒரு புதிய ஆத்துமாவை பரிணாம கொள்கைக்கு இழந்து விட்டேன். இந்த மாயையான உபதேசத்தி லிருந்து முழு சபையையும் காப்பாற்ற நினைத்து கிறிஸ்தவ சாட்சியங்கள் சம்மந்தமாக பல பிரசங்கங்களை செய்தேன். உதார ணமாக, தேவன் இருக்கிறார் என்பதை நாம் ஏன் விசுவாசிக்க வேண்டும்? போன்ற பிரசங்கங்களை செய்தேன். நான் பிரசங்கித்து முடித்த உடனே மூப்பர் ஒருவர் பிரசங்கத்திற்காக நன்றி. ஆனால் நாங்கள் ஏற்கனவே தேவன் இருப்பதை விசுவாசிக்கிறோமே என்று சொன்னார்.

சுவிசேஷத்தின் முழுமை எல்லா சவால்களுக்குமான பதில் களைப் பெற்றிருக்கிறது. உலகின் சில மூலைகளில் பிரங்கியார்கள் மூதாதையர் ஆராதனைக்கு விரோதமாக பிரசங்கத்தை தொடங்கு வார்கள். எனக்கு அப்படிச் செய்ய வேண்டிய அவசியம் வந்ததில்லை. சுவிசேஷம் எப்போதுமே சம்மந்தம் உடையதாயிருக்கிறது. சுவிசேஷத்தை நன்றாகப் படித்து கலாச்சாரத்தையும் நன்றாகப்படித்து முழுமையான தகவல்களை பிரசங்கத்தில் சேர்க்க வேண்டும். சுவிசேஷத்திற்காக நாம் எல்லா நிலைகளிலும் நிற்க வேண்டும். சுவிசேஷத்தின் உள்ளடக்க வல்லமையை மாற்றாமல் அதை எல்லா வயதினருக்கும் ஏற்றதாக கொண்டு போய் சேர்ப்போமா? இது மிகவும் அவசியமாயிருக்கிறது. ✞

# 4

**வாழ்வதற்கான உபதேசம்**

**கேள்விகள்**

## Questions

### Dong Greenway and David A.Sargent

**Dong Greenway** என்பவர் நான்கு நாட்களாக மருத்துவமனையில் பணிபுரியும் செவிலியர்களால் அவருடைய நிலைமையை மதிப்பீடு செய்ய தொடர்ச்சியாக கேள்விகள் கேட்கப்பட்டார். அவர் இவ்விதமாக எழுதுகிறார்.

எனக்கு டிசம்பர் 11 ஆம் தேதி மூளை அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. நான் தீவிர சிகிச்சைப் பிரிவில் நான்கு நாட்கள் இருந்தேன். ஒவ்வொரு 30 நிமிடங்களுக்கு ஒருமுறை செவிலியர்களுள் ஒருவர் வந்து சில கேள்விகளை கேட்பார். அவைகளெல்லாம் எனக்கு முட்டாள்தனமான கேள்விகளாக தெரிந்தது. எனக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டதால் இரத்த அழுத்தப் பிரச்சனைகள் இருந்தது. அவர்களுக்குத் தெரியும். இருந்த போதிலும், என் மனநலன் குன்றிப் போய்விட்டதா அல்லது நான் நன்றாகத் தான் இருக்கிறேனா என்பதை சோதித்தறிய அவர்கள் விரும்பினார்கள்.

**இதோ அந்த நான்கு கேள்விகள்:**

- **உங்கள் பெயரை சொல்ல முடியுமா?**
- **நீங்கள் எங்கே இருக்கிறீர்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா?**
- **நீங்கள் ஏன் இங்கே இருக்கிறீர்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா?**
- **உங்கள் ஒப்புதலைத் தெரிவிக்க உங்கள் கட்டை விரலை தூக்கி காட்ட முடியுமா?**

இந்த அடிப்படைக் கேள்விகளில் மறைந்திருக்கும் சில ஆவிக்குரிய பயன்பாடுகளை ஆழ்ந்து சிந்தியுங்கள்

**உங்கள் பெயரை சொல்ல முடியுமா?**

நீங்கள் யார்? உங்கள் பெயரை நினைவுக்குத் கொண்டு வரும் திறன் உங்கள் ஆரோக்கியத்திற்கு அடையாளமாக இருக்கிறது. ஆனால், அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப் படவும் இல்லை [அப்போஸ்தலர் 4:12]. **அந்தப் பெயர் இயேசு கிறிஸ்து** என்பதாகும். நாம் இயேசு கிறிஸ்துவால் மாத்திரமே இரட்சிக்கப்பட முடியும் [யோவான் 14:6].

**நீங்கள் எங்கே இருக்கிறீர்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா?**

நீங்கள் கிறிஸ்துவுக்குள் இருக்கிறீர்களா அல்லது கிறிஸ்துவுக்கு வெளியே இருக்கிறீர்களா? கிறிஸ்துவுக்குள் சகல ஆசீர்வாதங்களும் இருக்கின்றன [எபேசியர் 1:3]. கிறிஸ்துவுக்கு வெளியே எந்த நம்பிக்கையும், இல்லை [எபேசியர் 2:12]. மனந்திரும்பிய விசுவாசிகள் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறுகிறார்கள் [அப்போஸ்தலர் 2:38; கலாத்தியர் 3:26,27]. நீங்கள் கிறிஸ்துவுக்குள் இருக்கிறீர்களா? நீங்கள் அவரை உண்மையாக பின்பற்றுகிறீர்களா?

**நீங்கள் இங்கே ஏன் இருக்கிறீர்கள் என்று தெரியுமா?**

இக்கேள்விக்கான பதிலை மக்கள் உலகம் தோன்றினது முதல் எண்ணற்ற வழிகளில் பதிலளித்து வருகிறார்கள். இக்கேள்விக்கான சரியான பதில் நம்மை உண்டாக்கிய தேவனை மகிமைப்படுத்தும் படியாக நாம் இங்கே இருக்கிறோம். ஆகையால், நீங்கள் புசித்தாலும் குடித்தாலும், எதைச்செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள் [I கொரிந்தியர் 10:31]. நாம் கிறிஸ்தவர்களாக இருந்து தேவனை மகிமைப்படுத்துகிறோம்,. கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களாக இருந்தும் மகிமைப் படுத்துகிறோம் [I பேதுரு 4:16].

**உங்கள் ஒப்புதலைத் தெரிவிக்க உங்ககள் கட்டைவிரலை தூக்கி காட்ட முடியுமா?**

நீங்கள் தேவனுடைய காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து நன்றாய் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்களா? அப்போஸ்தலனாகிய பவுல் தன் வாழ்க்கையின் முடிவில் தன்னுடைய ஒப்புதலை இவ்விதமாகத் தெரிவித்தார். ஏனென்றால், நான் இப்பொழுதே பானபலியாக வார்க்கப்பட்டுப் போகிறேன். நான் தேகத்தை விட்டுப்பிரியும் காலம் வந்தது. நல்ல போராட்டத்தைப் போராடினேன் ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தை காத்துக்கொண்டேன். இது முதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது. நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார். எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார் [II தீமோத்தேயு 4:6–8].

இக்கேள்விக்கான சரியான பதில் கிறிஸ்து தான். தேவன் நம்முடைய பாவங்களுக்காக தம்முடைய ஒரே பேறான குமாரனையே சிலுவையில்ஒப்புக்கொடுத்ததினால் நம்மில் அன்பு கூர்ந்தார் (யோவான் 3:16). இயேசு கிறிஸ்து என்னும் ஈவின் மூலமாகத்தான் வாழ்க்கை என்பது என்னவென்றும், அவர் மூலமாக நித்திய ஜீவனை எப்படி பெற்றுக் கொள்வதென்பதைப் பற்றியும் புரிந்து கொள்கிறோம்.

இயேசு கிறிஸ்துவை யாரெல்லாம் விசுவாசிக்கிறார்களோ அவர்களை தேவன் இரட்சித்து நித்திய ஜீவனக் கொடுப்பார் (அப்போஸ்தலர் 16: 30 – 31). அதே போல் தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி (அப்போஸ்தலர் 17:30–31), மனுஷர் முன்பாக கிறிஸ்துவை அறிக்கையிட்டு (ரோமர் 10:9,10 ) பாவமன்னிப்புக்காக கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெறுகிறவர்களையும் (அப்போஸ்தலர் 2:38). தேவன் இரட்சித்து, அவர்களுக்கு நித்திய ஜீவனைக் கொடுப்பார். தேவனுடைய வார்த்தை எனும் ஒளியில் தொடர்ந்து நடக்கிறவர்கள் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப் பார்கள். அவர் ஒளியிலிருக்கிறது போல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடெருவர் ஐக்கியப்பட்டிருப்போம். அவருடைய குமார னாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும் (I யோவான் 1:7).

எனவே, இந்த நான்கு கேள்விகளையும் உங்களுக்குள்ளே கேட்டுக் கொள்ளுங்கள். இதற்கான பதில்களை கீழ்ப்படிதலுடன் இயேசு கிறிஸ்துவிடம் ஆம் என்று சொல்லுங்கள். இந்த அவசியமான கேள்விகளுக்கு பதில் அளிக்க மாட்டீர்களா?

---

**கிரீடங்கள்**

| | |
|---|---|
| **நீதியின் கிரீடம்** | (II **தீமோத்தேயு 4:8)** |
| **ஜீவ கிரீடம்** | **(யாக்கோபு 1:12; வெளி 2:10)** |
| **மகிழ்ச்சியின் கிரீடம்** | (I **தெசலோனிக்கேயர் 2:19)** |
| **அழிவில்லாத கிரீடம்** | (I **கொரிந்தியர் 9:25)** |

## வாழ்வதற்கான உபதேசம்
## கர்த்தாவே, என்னை கதவண்டை கொண்டு போங்கள்
# Take me to the Door Lord
Patick Morrison

**அ**நேகமாக பரிசுத்த எழுத்துக்களில் பதிவு செய்யப்பட்டிருக்கிற கட்டளைகளிலேயே மிகவும் வினோதமான கட்டளைகளுள் ஒன்று யாத்திராகமம் 21:4–6 வசனங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. பழைய பிரமாணத்தின்படி இஸ்ரவேலர்கள் எபிரெய அடிமைகளை 6 வருட அடிமை சேவகத்திலிருந்து விடுதலை செய்யும்படியாக கட்டளைகள் பெற்றிருந்தார்கள். பெரும்பாலான எபிரெய அடிமைகள் ஏதோ அவசியத்தினால் இவ்விதமாக அடிமைகளானார்கள். இவர்கள் தங்கள் மேல் விழுந்த கடனை தீர்க்க தங்களைத் தாமே விருப்பத்துடன் அடிமைகளாக்கிக் கொண்டார்கள். ஆறு ஆண்டு கால சேவகதிற்குப் பிறகு கடன் முழுமையாக தீர்க்கப்படாவிட்டாலும் கூட அடிமைகள் சுதந்திரமாக வெளியேற அனுமதிக்கப்பட்டி ருந்தார்கள். இந்த எபிரெய அடிமைகள் அடிமைக்காலம் முடிந்த பிறகு தங்கள் எஜமானைவிட்டு வெளியேறி புதிய வாழ்க்கையை புதிய பிரஜைகளாக தொடங்கலாம் அல்லது தங்கள் வாழ்நாள் முழுவதும் தங்கள் எஜமான்களோடு கழிக்கும் உரிமையும் இருந்தது.

ஓர் அடிமை சுதந்திரமாக வெளியேறுவதைவிட்டு எதற்காக எஜமானோடு இருக்க வேண்டும் என்று உங்களுக்குள்ளே ஒரு கேள்வி எழும்பலாம். ஓர் அடிமை தன் எஜமானை நேசித்தால் தன் வாழ்நாள் முழுவதும் எஜமானோடு இருந்து கொள்ளலாம். எஜமானோடு இருக்கும்படியான தன் ஆசையை தெரிவித்ததும் அந்த அடிமை ஒரு கதவின் அருகே அல்லது கதவுநிலையின் அருகே கொண்டு செல்லப்படுவான். அங்கே அவன் எஜமான் அவன் காதைக் கம்பியினாலே குத்தி கூடியிருக்கும் எல்லோருக்கும் இவன் என் அடிமை என்று அறிவிப்பான்.

இன்றும் உலகெங்கும் அடிமைத்தனம் இருக்கத்தான் செய்கிறது. ஒவ்வொருவரும் உணர்கிறார்களோ இல்லையோ இவ்வுலகிலுள்ள எல்லோரும் அடிமைகள்தான். ஒருவர் தன்னை தேவனுக்கு சேவை செய்ய அடிமைப்படுத்திக் கொண்டாலும் சரி அல்லது பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்தாலும் சரி ஏதோ ஒரு அடிமைத்தனத்தில் இருக்கிறார். இடைப்பட்ட நிலை என்று எதுவுமில்லை (மத்தேயு 6:24). பாவத்திற்கு ஒருவர் அடிமையாயிருப்பது சில விடுதலைகளை உள்ளடக்கியது – தேவனிடமிருந்து விடுதலை (ஏசாயா 59:1,2). கிறிஸ்துவில் இருக்கும் ஆசீர்வாதங்களிடமிருந்து விடுதலை (எபேசியர் 1:3), இரட்சிப்பிலிருந்து விடுதலை ( ரோமர் 6:23).

அதேபோல் கிறிஸ்துவுக்கு அடிமையாயிருப்பதும் சில விடுதலைகளை உள்ளடக்கியதாகும். பாவத்திலிருந்து விடுதலை [அப்போஸ்தலர் 2:38] சித்ரவதையிலிருந்து விடுதலை [யோவான் 3:16].



நாமெல்லோரும் தேவனுக்கு கடன்பட்டிருக்கிறோம். அந்தக் கடனை நம்மாலே ஆறு வருடங்களிலோ அல்லது அறுபது இலட்சம் வருடங்களிலோ, நம்மாலே தீர்த்துவிட முடியாது. நாமெல்லாரும் தேவனுக்கு கடன்பட்டிருக்கிறபடியால் தேவனோடு இருந்து ஆசீர்வாதங்களை சுதந்தரிப்பதா அல்லது பாவ வழியில் நடந்து பாவத்தின் பயங்கரமான விளைவுகளை எதிர் கொள்வதா? என்று தெரிந்தெடுக்கும் உரிமை நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. தேவன் நிச்சயமாக நம் விருப்பத்திற்கு எதிராக முட்டுக்கட்டை போடமாட்டார். ஆனால், பிசாசு தன் கட்டுப்பாட்டில் நம்மை வைத்துக் கொள்ள முயற்சிப்பான். அது மட்டுமல்ல, சாத்தான் தன் அடிமைகள் எப்படி நடத்தப்படுகிறார்கள் என்பதைக் குறித்து அக்கறைப்படுவதில்லை. ஆனால், தேவன் தம்மை சேவிக்கிறவர்களை அடிமைகளாக அல்ல மாறாக குமாரர்களாக, குமாரத்திகளாக எண்ணுகிறார் [லூக்கா 5]. தேவனை சேவிக்கிறவர்கள் தேவன் உண்மையாகவே இரக்கமும், அன்புள்ள எஜமான் எனும் உண்மையை உறுதியாய் உணர்ந்து கொள்வார்கள்.

நீங்கள் கர்த்தரை நேசிக்கிறீர்களா? நாம் உண்மையாகவே அவரை நேசித்தால் அவர் தம்முடைய வார்த்தையில் நம்மை என்னசெய்ய கேட்டுக்கொண்டிருக்கிறாரோ அதைச் செய்வோம் [ யோவான் 14:15]. நாம் இப்பூமியில் வாழும் வரை கர்த்தரை சேவிக்கும் முடிவை எடுப்போம். நம் எஜமானோடு என்றென்றும் வாழ்வதற்கான முடிவை நாமெல்லோரும் எடுத்திருக்கிறோம் என்பதை முழு உலகமும் காண வேண்டும். நம்முடைய எஜமான விசுவாசத்தை யாருக்குக் காட்டுகிறோம் என்பதை தேவனோடு இருப்பதைத் தெரிந்து கொண்டவர்கள் ஒரு போதும் மறக்கக் கூடாது. நீங்கள் தேவனுக்கு சேவை செய்வதைத் தெரிந்து கொண்டு தேவனுடைய ராஜ்யத்தில் சுதந்தரமான பிரஜையாக இருப்பதை தெரிந்து கொள்வீர்களா? கர்த்தர் கதவருகே காத்துக் கொண்டிருக்கிறார். நம் வாழ்க்கை கர்த்தரிடம் இந்த நாளில். கர்த்தாவே, என்னைக் கதவினிடத்தில் கொண்டு செல்லும் என்று பேசப்பட வேண்டும்.

**துக்கத்தைக்குறித்து எத்தனையோ மேற்கோள்களைக் பார்த்தாலும் கூட உண்மையாகவே ஒன்று கூட ஆறுதல் அளிப்பதில்லை. வேதாகமத்தின் வார்த்தைகளை வேறு எந்த மேற்கோளோடும் ஒப்பிடவே முடியாது.**
**ஆதலால், இக்காலத்துப்பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று எண்ணுகிறேன். (ரோமர் 8:18).** ✝

## வாழ்வதற்கான உபதேசம்
## திருமுழுக்குப் பெறும்போது புதிய வாழ்க்கை
# New Life When Baptized
**Owen D. Olbricht**

ஒருவர் என்னிடம் வந்து ஞானஸ்நானம் பெற்றவர்கள் கிறிஸ்தவ வாழ்க்கையை வாழாதபடியினால் இரட்சிக்கப்பட ஞானஸ்நானம் அவசியமில்லை என்று சொன்னார். சிலர் ஞானஸ்நானத்திற்குப் பிறகு புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளாதபடியினால் ஞானஸ்நானம் அவசியமில்லை எனும் அவருடைய மதிப்பீடு ஞானஸ்நானம் சம்மந்தமாக வேதாகமத்தின் போதனையோடு ஒத்துப்போகாமல் முரண்படுகிறது.



ஞானஸ்நானம் என்பது தண்ணீரில் மூழ்குவதும் (ரோமர் :4) எழுந்திருப்பதும் தானா? (கொலோ 2:12) அல்லது இவைகள் மட்டும் தான் ஞானஸ்நானத்திற்கு அவசியமா? அப்போஸ்தலனாகிய பவுல் ரோமர் 4 மற்றும் 5 ஆம் அதிகாரங்களில் என்ன எழுதியிருந்தாரோ அதைக் குறித்து தவறான புரிந்து கொள்ளுதல் ஏற்பட்டது. அதை, தெளிவுபடுத்தும்படியாக ஆறாம் அதிகாரத்தில் காரியங்களை விளக்குகிறார். மேலும், ரோமர் 4:24,25 வசனங்களில், நம்முடைய கர்த்தராகிய இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவரை விசுவாசிக்கிற நமக்கும் அப்படியே எண்ணப்படும். அவர் நம்முடைய பாவங்களுக்காக ஒப்புகொடுக்கப்பட்டும். நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக எழுப்பப்பட்டும் இருக்கிறார் என்று விளக்குகிறார். ஆனால், நான்காம் அதிகாரத்தின் இறுதி வசனங்களோடு பவுலின் எண்ண ஓட்டம் முடிவடையவில்லை. ஐந்தாம் அதிகாரத்திலும் அவர் தொடருகிறார். இவ்விதமாக நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து

மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம் [ரோமர் 5:1]. மேலும், பவுல் ரோமர் 5:20 ல் பாவம் பெருகின இடத்தில் கிருபை அதிகமாய்ப் பெருகிற்று என்று சொல்கிறார். இங்கே பவுல் இயேசு மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு எழுந்ததினாலே நம் பாவங்களை மூடும் கிருபை சாத்தியமாயிற்று என்று சொல்கிறார்.

அதன் பின்பு பவுல், பலரால் தவறாக எண்ணப்பட்ட உபதேசத்தை பொய்யென சுட்டிக்காட்டினார். அதாவது, நம் பாவங்களை மூட கிருபை போதுமானதாக இருந்தால் கிருபை பெருகும்படிக்கு நாம் அதிகம் பாவம் செய்யலாமே என்பது பலருடைய தவறான புரிந்து கொள்ளுதலாயிருந்தது. இதை பவுல் கிருபை கொடுக்கப்பட்ட தற்கான நோக்கம் நாம் பாவம் செய்வதற்கான முழு சுதந்திரம் கொடுப்பது போன்றதல்ல என்று விளக்குகின்றார். ஏனென்றால், நாம் பாவத்திற்கு மரித்து விட்டோமே [ரோமர் 6:1,2].

நான் கிறிஸ்துவின் மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற தினால் பாவத்திற்கு மரித்திருக்கிறபடியால், புதிதான ஜீவனு ள்ளவர்களாய் நடந்து கொள்ள வேண்டும் [ரோமர் 6:3–4]

சரியாகப் புரிந்து கொள்ளப்பட வேண்டுமென்றால், ஞானஸ்நானம் என்பது நம் வாழ்வில் ஒரு திருப்பு முனையாக இருக்கிறது. அங்கே பழைய பாவங்களுக்கு மரித்து, புதிய ஜீவனுக்குள்ளாக பிரவேசிக்கி றோம். ஞானஸ்நானம் என்பது வெறுமனே தண்ணீருக்குள் மூழ்கி, எழுந்திருக்கும் ஒரு சடங்காச்சாரமல்ல. ஞானஸ்நானம் வெளிப் புறமான செயலை மாத்திரமல்ல, உட்புறமான செயலையும் உள்ள டக்கிய ஒன்றாகும். இது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிவது, பாவ வாழ்க்கையிலிருந்து நமக்கு சுதந்திரம் தருகின்ற ஒன்றாக இருக்க வேண்டும். அதாவது, பாவத்திற்கு மரித்த ஓர் அனுபவத்திற்குள் நாம் கடந்து வர வேண்டும். [ரோமர் 6:11]

ஞானஸ்நானத்தில் நம் ஆவிக்குரிய ஈடுபாட்டை நாம் புரிந்து கொண்டால், அது புதிய பிறப்பு என்பதை நாம் உணர்ந்துகொள்வோம் [யோவான் 3:5]. அதற்குப் பிறகு நாம் பழைய மனிதர்கள் அல்ல, புதிய மனிதர்களாயிருக்கிறோம். ஞானஸ்நானத்திற்கு முன்பு நாம் பாவத்திற்கு மரித்திருந்தோம். ஆனால், தேவனுடைய செயலில் நமக் கிருந்த விசுவாசத்தின் மூலமாக ஞானஸ்நானத்தில் கிறிஸ்து வுடனே எழுந்த போது, நாம் உயிர்ப்பிக்கப்பட்டு நம் அக்கிரமங் ளெல்லாம் மன்னிக்கப்பட்டன [கொலோசெயர் 2:12,13].

அடுத்த அதிகாரத்தில் பவுல் நீங்கள் கிறிஸ்துவுடனே கூட எழுந்ததுண்டனால் கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள் என்று சொல்லுகிறார். நாம் ஞானஸ்நானம் பெறும் போது நம் பழைய வாழ்க்கை முடிவுக்கு வந்து புது வாழ்வு தொடங்குகிறது. இதை நாம் புரிந்து கொள்ளவில்லையென்றால் ஞானஸ்நானத்தில் நாம் இயேசு வோடு அவருடைய மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் பகிர்ந்து கொள்கிறோம் எனும் உபதேசத்தை விட்டுவிடுகிறோம்.

ஞானஸ்நானம் பெறும் ஒரு நபர், தான் பழைய மனிதனுக்கு மரித்து புதிய மனிதனை தரித்துக் கொண்டதை உணரவில்லை யென்றால், ஞானஸ்நானத்தில் அவர் புதிதாகவில்லை. வெறுமனே தண்ணீரில் மூழ்குகிறார். நினைக்கிறார் அவ்வளவு தான். ஞானஸ்நானம் என்பது வெறுமனே ஒரு சரீரப்பிரகாரமான செயல் மட்டுமல்ல. ஒருவர் ஆவியினால் பிறக்கும் ஒரு நிகழ்வு வேண்டும் [யோவான் 3:5].

---

## கிறிஸ்துவின் மனுஷீகம் கீழ்மைக்கான அடையாளமல்ல என்பதற்கான நான்கு காரணங்கள்

1. கிறிஸ்துவின் மனுஷீகம் மனிதன் இழந்து போன ஆளுகையை தவறுக்குத் திரும்பப் பெற்றுத் தந்திருக்கிறது ( 2:5:9)

2. கிறிஸ்துவின் மனுஷூகம் அநேகம் பிள்ளைகளை மகிமையில் கொண்டுவந்து சேர்த்திருக்கிறது (2:10:13)

3. கிறிஸ்துவின் மனுஷீகம் அவருடைய ஜனங்களுக்காகப் பரிதபிக்கும் ஆசாரியராக்கியிருக்கிறது (2:14-16)

## ஆராதனையில் கைகளைத் தட்டுவது பொருத்தமாயிருக்குமோ?

# Is Clapping of Hands Appropriate In Worship?

**T. Pierce Brown**

இக்கேள்வி பிரதானமாக ஞானஸ்நான நிகழ்ச்சியின் போது கைகளைத் தட்டுவதைக் குறித்துத்தான் எழுப்பப்பட்டது. இக்கேள்வியை எழுப்பியவர், இது ஒருவர் ஜெபித்து முடிக்கும் போது ஆமென் சொல்வதற்கு இணையானது என்றும், என்ன நடந்ததோ அதை அங்கீகரிப்பதற்கு இணையாக இருப்பது போன்றதென்றும் குறிப்பிட்டார். அதாவது, செயயப்படுகிற காரியத்தை நாங்கள் ஆமோதிக்கிறோம் என்று பொருள்படுவதாகவும் சொன்னார். ஞானஸ்நானத்தின் போது ஒருவர் கையைத் தூக்கி உங்கள் கீழ்ப்படிதலில் நான் களிகூருகிறேன் என்று சொன்னால், அதில் எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. ஆனால், இது வேறு சில காரியங்களையும் உள்ளடக்கியிருக்கிறது.

முதலாவது, கைகளைத் தட்டுவது என்பது ஒருவர் செய்யும் செயலை நாம் அங்கீகரிப்பது அல்லது ஆமோதிப்பது என்பதன் அடையாளமாயிருக்கிறது. இது ஆமென் என்று சொல்வது போன்றதல்ல. உதாரணமாக, ஒரு நடனக் கலைஞரின் ஆட்டத்தைப் பார்த்து பார்வையாளர்கள் ஆமென் சொல்வது சரியாகுமா? நிச்சயமாக இல்லை. ஏனென்றால், ஆமென் என்பதன் பொருள் அப்படியே ஆகட்டும் என்பதாயிருக்கிறது. வெவ்வேறு சந்தர்ப்பங்களில் அதின் அர்த்தம் வேறுபடும். ஆனால், அடிப்படைப் பொருள் ஒருவருடைய வார்த்தையையோ அல்லது செயலையோ அங்கீகரிப்பதாகும். நம் சமுதாயத்தில் கைகளைத்தட்டுவதன் அடிப்படை நோக்கம் ஒருவருடைய செயலையோ அல்லது திறமையையோ அங்கீகரிப்பதின் அடையாளமாயிருக்கிறது.

ஒருவர் சரியான முறையில் ஞானஸ்நானம் பெறும்போது, தேவனாலும் அவர் படைத்த எல்லோராலும் அங்கீகரிக்கப்படுகிறார். ஒருவர் பொருத்தமாக ஜெபிக்கும் போது கர்த்தருடைய பந்தியில், பாடலில் சரியாக பங்கெடுக்கும் போது இது உண்மையாயிருக்கிறது. இவற்றிற்கெல்லாம் நாம் எல்லா நேரங்களிலும் கைகளைத் தட்டி ஆமோதிக்க வேண்டுமா? அப்படியில்லையென்றால் ஏன் அப்படி செய்யக்கூடாது?

இங்கே இரண்டு அல்லது மூன்று முக்கியமான காரியங்களை கவனியுங்கள். ஒரு சிறந்த பாடகர் மேடையில் பாடல் பாடும் போது பார்வையாளர்கள் கைகளைத் தட்டினால் அக்கலைஞரின் திறமையை பார்வையாளர்கள் பாராட்டுகிறார்கள் என்று பொருள்படும்.

மேடையில் ஒரு கலைஞர் நிகழ்ச்சியை நடத்துகிறாரென்றால் அதில் அவருடைய திறமைதான் கவனத்தை ஈர்க்கிறது. ஆனால், ஞானஸ்நானம் பிரசங்கம், ஜெபம் என்று வரும் போது அந்த செயல்களை அங்கீகரிக்கும் இரட்சகருடைய அன்பும், கிருபையும் தான் நம் கவனத்தை ஈர்க்கிறதாக இருக்க வேண்டும்.

வேதாமத்தில் ஒருவர் பாடலிலோ அல்லது ஜெபத்திலோ வழி நடத்தினால் அல்லது ஆராதனையில் பிரசங்கித்தாலோ அதைப் பாராட்டி கைத்தட்ட வேண்டுமென்று எங்காவது எழுதப்பட்டிருக் கிறதா? ஆராதனையின் ஒழுங்குகளில் பங்கெடுக்கிறவர்கள் கவனத்தின் மையமாக இருக்க வேண்டுமா? அல்லது நம் கவனம் கிறிஸ்துவின் மீதும் அவரை உயர்த்துகின்ற செய்தியின் மீதும் இருக்க வேண்டுமா?

உதாரணமாக, ஒருவர் கர்த்தருடைய பந்தியில் வழிநடத்தும் போது அங்கத்தினர்களால் கரகோஷம் எழுப்பப்பட்டால் அந்த நபர் நன்றாக ஜெபித்ததற்காக கரகோஷம் ஒலித்ததா? அல்லது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக தம்மைதாமே பலியாக ஒப்புக்கொடுத்தாரே அதற்காக கரகோஷம் ஒலித்ததா ? இந்த சந்தர்ப்பத்தில் கர்த்தருடைய பந்திக்காக அவர் ஜெபித்தபோது நீங்கள் ஆமென் சொல்லியதும் அவர் கர்த்தருடைய பந்தியை நேர்த்தியாக நடத்தியதை அங்கீகரிக்கும் வகையில், ஆமோதிக்கும் வகையில் கைகளைத் தட்டுவதும் ஒன்றாகாது.

கைகளை தட்டுகிற காரியத்தில் வேறு சில அம்சங்களும் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறது. ஒரு பாடகரோ அல்லது இசை அமைப் பாளரோ மேடையில் ஒரு நிகழ்ச்சியை நடத்துகிறாரென்றால் அதில் அவருடைய திறமைதான் கவனத்தை ஈர்க்கிறது. எனவே, அந்த பாடகர் அல்லது இசை அமைப்பாளருடைய திறமைக்கு நீங்கள் எந்த அளவு மதிப்புக் கொடுத்தீர்கள் என்பதை பொறுத்துத்தான் நாம் அவர்களுக்கு கைதட்டுவதும் தட்டாமல் இருப்பதும் அமையும். ஆனால் இது ஞானஸ்நானம் பிரசங்கம் ஜெபம் பாடல் அல்லது கர்த்தருடைய பந்தி போன்றவைகளுக்குப் பொருந்தாது. எனவே, ஒருவர் ஞானஸ்நானத்தின் போது கைகளைத் தட்டினால் ஞானஸ்நானம் கொடுப்பவர் எப்படி தான் தண்ணீரில் நனையா மலேயே மற்றொருவருக்கு ஞானஸ்நானம் கொடுக்கும் திறமை களுக்காக அவரை அங்கீகரிக்கும் விதமாக அப்படி செய்திருக்கலாம். ஒருவரை ஒரு பிரசங்கியார் அவருடைய தொண்டையைச் சுற்றிலும் தன் இருகரங்களால் பிடித்துக் கொண்டு பின்நோக்கி சாய்ந்து ஞானஸ்நானம் கொடுத்தார். இங்கே நான் அந்த விசுவாசி தொண்டை நெறிக்கப்படாமல் தண்ணீரிலிருந்து உயிரோடு வெளியே வந்தாரே அதற்காக வேண்டுமென்றால் என் பாராட்டைத் தெரிவிக்கும்படி கைகளை தட்டுவேன். இங்கே நான் வலியுறுத்தும்

கருத்து என்னவென்றால் மேடையில் ஒரு கலைஞர் நிகழ்ச்சியை நடத்துகிறாரென்றால் அதில் அவருடைய திறமைதான் கவனத்தை ஈர்க்கிறது. ஆனால், ஞானஸ்நானம், பிரசங்கம், ஜெபம் என்று வரும் போது இந்த செயல்களை அங்கீகரிக்கும் இரட்சகருடைய அன்பும் கிருபையும் தான் நம் கவனத்தை ஈர்க்கிறதாக இருக்கவேண்டும்.

ஒரு பிரசங்கியார் பிரசங்கிக்கும் போது நான் ஆமென் என்று சொன்னால் அவருடைய செயல் என் கவனத்தை ஈர்த்து நான் ஆமென் சொல்லவில்லை. மாறாக, கிறிஸ்துவை உயர்த்தும் செய்தி என் கவனத்தை ஈர்த்தது, நான் அச்செயலை ஆமோதிக்கும் விதத்தில் ஆமென் சொன்னேன். அதேபோல் ஒருவர் ஜெபிக்கும் போது நான் ஆமென் சொன்னால், ஜெபித்தவருடைய வார்த்தை ஜாலங்களின் அழகினால் ஈர்க்கப்பட்டு நான் ஆமோதிக்கவில்லை. மாறாக, விண்ணப்பத்தின் மதிப்பை உணர்ந்து அதை அங்கீகரிக்கும் விதமாக ஆமேன் சொன்னேன். ஆனால், நான் கைகளைத் தட்டியிருந்தால். அந்த நபருடைய திறமையை நான் பாராட்டுகிறேன் என்று பொருள்பட்டிருக்கும். இது பொருத்தமற்ற செயலாயிருந்திருக்கும், தேவனுடைய சபையில் அதற்கு இடமே இல்லை.

ஒருவர் கர்த்தருடைய கட்டளையான **விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்** என்பதற்கு கீழ்ப்படியும் விதமாக ஞானஸ்நானம் பெறும்போது நம் அங்கீகரிப்பை வெளிப் படுத்தலாம் [மாற்கு 16:16]. அதேபோல் ஞானஸ்நானங் கொடுக்கிறவர் கிறிஸ்துவின் அதிகாரத்தின்படி ஞானஸ்நானங் கொடுத்தல் கிறிஸ்து கட்டளையிட்ட நோக்கத்திற்காக கொடுத்தால் அவருடைய செயல்பாட்டில் நாம் அப்படிச்செய்ததைக் குறித்து நான் மகிழ்ச்சியாயிருக்கிறேன். ஏனென்றால், இச்செயல் தேவனை மகிமைப்படுத்துகிறது எனும் பொருள்கொண்டதாக இருந்தால் அதற்கு நாம் ஆட்சேபணையை தெரிவிக்க வேண்டிய அவசிய மில்லை. இருந்த போதிலும், தேவனுடைய வார்த்தையில் இப்படிச்செய்வதற்கு எந்த ஆதாரமும் இல்லாத காரணத்தினாலும், இப்படிக் கைகளைத்தட்டி நம் அங்கீகாரத்தைத் தெரிவிப்பது தேவனுக்கோ, தேவனால் கட்டளையிடப்பட்ட நோக்கத்திற்கோ எந்த மகிமையையும் கொண்டுவராதபடியாலும், அது ஞானஸ்நானங் கொடுக்கிறவரின் பக்கம் நம் கவனத்தை ஈர்க்க வழிவகுப்பதாலும் கைகளைத் தட்டி நம் அங்கீகாரத்தைத் தெரிவிப்பதற்கு நாம் ஆட்சேபணையை தெரிவிக்க வேண்டும். ✝

## ஆராதனை

### ஆராதிக்க நீங்கள் எவ்வளவு தூரம் போக மனதாயிருக்கிறீர்கள்?

# How far are you willing to go to worship?

**Mark T. Tonkery**

எனக்குத் தெரிந்த ஒரு தம்பதி தேவனை ஆராதிக்க இரண்டரை மணி நேரம் ஒரு வழிப் பயணம் செய்து வந்தார்கள். இந்த தம்பதி அமெரிக்காவின் வடகிழக்குப் பகுதியில் வாழ்ந்து வந்தார்கள். அவர்களுக்கு இரண்டரை மணிநேரம் பயணித்து ஆராதிக்கும் கிறிஸ்துவின் சபைதான் சற்று அருகில் அமைந்த சபைக்கட்டிடம் ஆகும். இக்குடும்பம் கர்த்தரை ஆராதிப்பதற்கு தங்களை அர்ப்பணித்துக் கொண்ட, தீர்மானித்துக்கொண்ட ஒரு குடும்பமாகும். தேவனை ஆராதிப்பதற்கு நீங்கள் எவ்வளவு தூரம் போவீர்கள்?

வேதாகமத்தில் கர்த்தரை ஆராதிப்பதற்கு தன்னை அர்ப்பணித்துக் கொண்ட ஒரு தனி மனிதனைப் பற்றி நாம் வாசிக்கிறோம். அந்த தனிநபர் எத்தியோப்பிய மந்திரி [அப்போஸ்தலர் 8:26-40]. இந்த வசனப்பகுதி எத்தியோப்பிய மந்திரி எருசலேமின் தேவாலயத்தில் தேவனை ஆராதித்துவிட்டு தன் சொந்த நாடான எத்தியோப்பியாவுக்கு திரும்பிக் கொண்டிருந்தார் என்று சொல்கிறது. தேவாலயத்தில் இந்த மந்திரி புறஜாதிகள் நிற்கும் இடத்தில்தான் நின்றிருக்க வேண்டும். ஏனென்றால், இவர் ஓர் அண்ணகர். இது இன்றைய நாட்களில் ஒருவர் பல மணிநேரம் பயணம் செய்து ஒரு சுவிசேஷக் கூட்டத்திற்குப் போய் சபை கட்டிடத்திற்குள் செல்ல முடியாமல் சபை கட்டிடத்திற்கு முன்பாக உள்ள முக மண்டபத்திற்கு முன் சிறிது நேரம் நிற்பது போன்ற தாகத்தான் இருக்கும். இருந்தபோதிலும் அந்த எத்தியோப்பிய மந்திரி எப்படியாவது எருசலேமுக்குச் சென்று தேவனை ஆராதித்துவிட வேண்டுமென்று தன் மனதிலே தீர்மானித்துக் கொண்டார்.

எத்தியோப்பிய மந்திரி எருசலேமில் தேவனை ஆராதித்துவிட்டு திரும்பிக் கொண்டிருந்தபோது வேதாகமத்தை வாசிப்பதன் மூலமாக அதிலும் குறிப்பாக ஏசாயா தீர்க்கதரிசன புத்தகத்தை வாசிப்பதன் மூலமாக தன் விசுவாசத்தில் விருத்தியடைந்தார். தனிப்பட்ட ரீதியில் அவர் வேத பாடத்தில் ஈடுபட்டதன் விளைவாக பிலிப்புடன் உரையாட நேர்ந்தது. மந்திரி தன் விசுவாசத்தை வெளிப்படுத்தி ஞானஸ்நானம் பெற்றார் [அப்போஸ்தலர் 8:35-40]. எத்தியோப்பிய மந்திரி கீழ்க்காணும் வார்த்தைகளை சொல்லியிருந்தால் எப்படி இருக்கும் என்பதை சற்று கற்பனை செய்து பாருங்கள்.

**ஆராதனை இடம் வெகுதூரம். ஆராதனையிலிருந்து எனக்கு எதுவும் கிடைக்கவில்லை, நான் ஏன் ஆராதனைக்குப் போக**



**வேண்டும் நான் ஆவிக்குரிய பிரகாரமாக பலமாக இருக்கிறேன், நான் ஆராதிக்க வேண்டிய அவசியமில்லை. நான் மிகவும் களைத்துப்** போயிருக்கிறேன். அதனால் எனக்கு ஆராதனைக்குப் போக முடியாது. இது போன்று நூற்றுக் கணக்கான சாக்குபோக்குகள் இன்றைய நாட்களில் சாதாரணமாக சொல்லப்படுகின்றன. அவர் முயற்சித்து ஆலயக் காரியங்களில் பங்கெடுத்து, வேத வாக்கியங்களை படிக்கவில்லையென்றால் அவருடைய மனமாற்ற சம்பவம் நமக்கு உதாரணமாக இருந்திருக்கும் என்று நினைக்கிறீர்களா? தேவனுடைய செய்திக்கு அவர் இருதயம் திறக்கவில்லையென்றால் அவர் தன்னுடைய விசுவாசத்தை அறிக்கையிட்டு ஞானஸ்நானம் பெற்றிருப்பார் என்று நினைக்கிறீர்களா?

பல வேளைகளில் ஜனங்கள் ஆராதனைக்கும், வேதபாட வகுப்புக்கும் வராமல் இருப்பதற்கு எத்தனையோ சாக்குபோக்குகளைச் சொல்கிறார்கள். இருந்தபோதிலும், நாம் ஆராதனையை தவற விடும் போது எவைகளை இழந்து போகிறோம் என்று நினைத்ததுண்டோ? முதலாவது, நாம் தேவனை ஆராதிக்கும் வாய்ப்பை இழந்து விடுகிறோம். நாம் அவரை ஆராதிக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார் [யோவான் 4:24]. இரண்டாவது, நாம் ஐக்கியத்தை இழந்து விடுகிறோம். மந்திரி எருசலேமுக்கு சென்றிருக்காவிட்டால் அவரும் பிலிப்பும் ஐக்கியப்பட்டிருக்கவே முடியாது. மூன்றாவது, நாம் கர்த்தரைப் பற்றியும் வேத வாக்கியங்களைக் குறித்தும் கற்றுக் கொள்ளும் வாய்ப்பை இழந்திருப்போம். மந்திரி வேத வாக்கியங்களை வாசித்துக் கொண்டிருந்தார்.

நம் ஆத்துமாக்கள் கேள்விக்குறியாக இருக்கும்போது ஆராதனைக்குப்போக எவ்வளவு தூரம் வெகுதூரம்?

ஞாயிற்றுக்கிழமைகளிலும் புதன்கிழமைகளிலும் ஆராதனையிலும், வேதபாட வகுப்பிலும் பங்கெடுக்க நாம் என்னச் செய்ய வேண்டும்? எத்தியோப்பிய மந்திரி நூற்றுக்கணக்கான மைல்களையும், வெப்பத்தையும், புழுதியும் தூசியும் நிறைந்த பாலை வனச்சாலையையும் பொருட்படுத்தாமல் அவைகள் தேவனை ஆராதிக்கத் தடைகளாக இருக்க அனுமதிக்கவில்லையென்றால் தேவனை ஆராதிக்க நாம் ஏதாவது ஒன்று தடையாக இருக்க ஏன் அனுமதிக்க வேண்டும்? இதைக்குறித்து சிந்தித்துப் பாருங்கள்.

# வழக்கமானது

## Routine

**Derek Broome**

காலையில் எழுந்தவுடன் நீங்கள் செய்யும் முதல் வேலை எது? குளிப்பதா? காலை உணவில் கை வைப்பதா? பல் துலக்குவதா? பெரும்பாலான மக்கள் வார இறுதி நாட்கள் மற்றும் பொது விடுமுறை நாட்களைத் தவிர மற்ற எல்லா நாட்களிலும் பின்பற்ற வழக்கமான வேலைகளை வைத்திருப்பார்கள். சிலருக்கு அவர்கள் வழக்கமாக செய்யும் வேலைகள் ஆரோக்கியமானதாகவும், பலனுள்ளதாகவும் இருக்கிறது. அவர்கள் ஒவ்வொரு நாளும் தங்களைத்தாமே ஊக்கப்படுத்திக் கொள்ளவும், தங்கள் வழக்கமான வேலைகளைக் கொண்டு அதிகப்படியான பலனை அடையவும் சிறந்த வழியைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இருந்தபோதிலும், மற்றவர்களுக்கு அவர்களுடைய வழக்கமான வேலை தீமையானதாகவும், சோம் பேறித்தனமாகவும் இருந்து ஏதோ வாழ்க்கையை ஓட்ட சக்தி அல்லது ஆற்றலைக் கொடுக்கிறது, அவ்வளவுதான். வாழ்க்கையின் இரு வித்தியாசமான அணுகுமுறைகளைப் பார்க்கும் போது நம் சரீரப்பிரகாரமான வாழ்க்கையில் சில மாற்றங்களைச் செய்ய வேண்டு மென்பதைக் கிட்டத்தட்ட எல்லோருமே உணர்ந்துவிட்டோம். அது எங்களுக்குத் தெரியும், நாங்கள் சரி செய்து கொள்வோம் என்று சிலர் சொல்லலாம். ஆனால், நம் ஆவிக்குரிய ஜீவியங்களிலே செய்ய வேண்டிய மாற்றங்களை நாம் அடையாளங் கண்டிருக்கிறோமா?

மத்தேயு 23 ஆம் அதிகாரத்தில் பரிசேயரும், வேதபாகரும் தாங்கள் விரும்பியபடி வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் ஜனங்களை ஒரு விதமாக வாழச் சொல்லி விட்டு அவர்கள் வேறு விதமாக வாழ்ந்தார்கள். அவர்கள் வெளிப்புறமாக நல்ல தோற்றத்தைக் கொடுத்துவிட்டு, உள்புறமாக மிக மோசமான வாழ்க்கையை வாழ்ந்தார்கள். அவர்கள் நியாயப்பிரமாணத்தில் சிலவற்றுக்கு ஆதர வாகவும், சிலவற்றை ஒட்டு மொத்தமாக மறந்த ஒரு வாழ்க்கையை வாழ்ந்தார்கள். மத்தேயு 23:27,28 வசனங்களில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அவர்கள் வாழ்க்கையை ஆராய்ந்து பார்த்து விட்டு, அவர்கள் மாயமாலத்தினாலும், அக்கிரமத்தினாலும் நிறைந்திருந்தார்கள் என்று சொன்னார். நிச்சயமாகவே, அந்த பரிசேயர் மற்றும் வேதபாரகருடைய வாழ்க்கை கர்த்தருக்குப் பிரியமாயிருக்கவில்லை.



நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கை எப்படி இருக்கிறது? நாம் அந்த பரிசேயர் போலவும் வேத பாரகர் போலவும் வாழ்கிறோமோ? நாம் மாயமாலத்தினாலும், அக்கிரம த்தினாலும் நிறைந்திருக்கிறோமா? இன்றைய நாட்களில் பல கிறிஸ் தவர்கள் கிறிஸ்துவுக்காக வாழ்வதே இல்லை. பலருக்கு ஒரு வெற்றி கரமான நாள் என்பது தெரிந்தே எந்த ஒரு தவறையும் செய்யாமல் இருப் பதே ஆகும். நான் அன்றாடமும் எழுந்து நம் வழக்கமான வேலை களைச் செய்து விட்டு யாருக்கும் எந்த தீமையும் செய்யாமல் படுக்கைக்குப் போகிறதே பெரிய சாதனை என்று நினைத்துக் கொள்கிறோம். நாம் வாரந்தோறும் சபையாகக் கூடுகிறோம். வேத பாட வகுப்பில் கலந்து கொள்கிறோம், வழக்கமான இடத்தில் உட்காருகிறோம் பாடல் பாடுகிறோம், ஜெபிக்கிறோம் கர்த்தருடைய பந்தியில் பங்கெடுக்கிறோம். இறுதி யில் நாம் எல்லாவற்றையும் சரியாக செய்துவிட்டதாக நினைக்கி றோம். இருப்பினும், இயேசுவுக்காக உண்மையாக வாழ்வது பற்றி எப்படி?

நம் ஆவிக்குரிய வாழ்வில் எந்தெந்த இடங்களில் மாற்றம் தேவை என்பதை நம்மால் அடையாளங்காண முடியும். ஆனால், நாம் கர்த்தருக்காக மாற்றங்களை செய்வது அவசியமாயிருக்கிறது. நம் வாழ்க்கையின் மையம் கிறிஸ்துவாகத்தான் இருக்க வேண்டும். அவருடைய பரிசுத்த ஜனங்களாக ஒவ்வொரு நாளும் அவருடைய சித்தத்தை செய்ய கிரியை செய்ய வேண்டும். ஆமென்!

**நாம் தேவனுக்குச் சொந்தமானவர்களாக இருந்தால் நம்முடைய மதிப்பும் பிற காரியங்களும், நமக்குச் சொந்தமாகாது. அவருடைய அளவுகோலின் படியாக அவைகள் தீர்மானிக்கப்படுகிறது; அவைகள் நம்முடைய வாழ்க்கையை ஆளுகை செய்கின்றன.**

அனுதின கிறிஸ்தவ ஜீவியம்

## ஜெபம் எனும் சிலாக்கியம்

## The Privilege Of Prayer

**Jack W. Carter**

ஜெபம் என்பது உண்மையாகவே ஒரு சிலாக்கியந்தான். தேவனிடதில் உண்மையாயிருப்பவர்களுக்கு அது ஒரு வாக்குத்தத்த மாயிருக்கிறது. இது தேவன் தம்முடைய பிள்ளைகளை வெறுமனே பார்ப்பது மட்டுமல்லாமல் அவருடைய விண்ணப்பங்களை கவனிக்கிறார் என்பதற்கான நிச்சயமாயிருக்கிறது.

ஜெபம் என்பது எல்லோருக்குமான உறுதி மொழியாயிருக்கிறது. பாவிகள், கலகக்காரர்கள், சோம்பேறிகள் போன்றோரின் ஜெபங்கள் கேட்கப்படுவதில்லை என்பதைக் குறித்து ஏராளமான வசனப்பகுதிகள் பேசுகின்றன. இவர்கள் எப்போதுமே தமக்குப் பிரியமானவர்களல்ல என்றும் தமக்கு அருவருப்பானவர்களென்றும், அவர்களுடைய வாழ்க்கையில் துன்பம் வரும் போது அவருடைய விண்ணப்பங் களுக்கு செவி சாய்ப்பதில்லை என்றும் தேவன் சொல்கிறார்.

பலர் இதைப் புரிந்து கொள்வதற்கு கஷ்டப்படுகிறார்கள். தேவன் அன்புள்ள தேவனாயிருக்கிறார். நாம் அவரை நன்றாக சேவிக்காவிட்டாலும் அவருடைய பிள்ளைகளாயிருக்கிறோம். சரியா? நாம் ஆபத்தில் அவரை நோக்கிக் கூப்பிடும் போது நம்மில் மோசமானவர்களுடைய விண்ணப்பத்திற்கு கூட தம்முடைய செவியை சாய்க்காமல் இருக்கமாட்டார். சரியா?

இக்கேள்விகளுக்கு நமக்காக பதில் அளிக்கும்படியாக நாம் தேவனை அனுமதிப்போம். நான் கூப்பிட்டும் நீங்கள் கேட்க மாட்டோம் என்கிறீர்கள். நான் என் கையை நீட்டியும் கவனிக்கிறவன் ஒருவனும் இல்லை. என் ஆலோசனை களையெல்லாம் நீங்கள் தள்ளி என் கடிந்து கொள்ளுதலை வெறுத்தீர்கள். ஆகையால், நானும் உங்கள் ஆபத்துக் காலத்தில் நகைத்து நீங்கள் பயப்படுங் காரியம் வரும் போது ஆகடியம் பண்ணுவேன். நீங்கள் பயப்படுங்காரியம் புசல்போல் வரும்போதும், ஆபத்து சூறாவளி போல் உங்களுக்கு நேரிடும் போதும், நெருக்கமும், இடுக்கணும் உங்கள் மேல் வரும் போதும், ஆகடியம்


பண்ணுவேன். அவர்கள் என்னை நோக்கிக் கூப்பிடுவார்கள். நான் மறு உத்தரவு கொடுக்க மாட்டேன். அவர்கள் அதிகாலையிலே என்னைத் தேடுவார்கள், என்னைக் காணமாட்டார்கள். அவர்கள் அறிவை வெறுத்தார்கள், கர்த்தருக்குப் பயப்படுதலைத் தெரிந்து கொள்ளாமற் போனார்கள். என் ஆலோசனையை அவர்கள் விரும்பவில்லை; என் கடிந்துகொள்ளுதலையெல்லாம் அசட்டை பண்ணினார்கள். ஆகையால், அவர்கள் தங்கள் வழியின் பலனைப் புசிப்பார்கள்; தங்கள் யோசனைகளினால் திருப்தியடைவார்கள் (நீதிமொழிகள் 1:24–31).

மேற்சொல்லப்பட்ட வார்த்தைகள் அநீதிமான்களுக்கு எச்சரிக்கையாயிருந்தால், இது உண்மையுள்ளவர்களுக்கு தேவனுடைய வாக்குத்தத்தமாயிருக்கிறது. ஆபத்து வரும் போது தேவன் நம் விண்ணப்பங்களுக்கு செவிகொடுப்பார்! தேவன் விண்ணப்பங்களைக் கேட்பது மாத்திரமல்ல அவைகளுக்குச் செவிகொடுக்கிறார்.

மறுபடியும் அது நிரூபிக்கப்படுகிறது. திரும்பத் திரும்ப நீதிமான்கள் நிகழ்வுகளின் போக்கையே தங்கள் ஜெபத்தின் மூலமாக மாற்றி விடுகிறார்கள்.

## இவைகளில் வளர வேண்டும்

- **விசுவாசத்தில் முதிர்ச்சி அடைந்து வளர வேண்டும்.**
- **நம்பிக்கையில் வளர வேண்டும்.**
- **நன்றியாய் இருப்பதில் வளர வேண்டும்.**
- **பிறருக்கு உதவி செய்வதில் வளர வேண்டும்.**
- **போதுமென்கிற மனதில் வளர வேண்டும்.**




**ந**ம் எல்லோருக்கும் நம் அன்றாட வாழ்வில் உற்சாகப்படுத்துதல் தேவையாயிருக்கிறது. இந்த நவீன காலத்தில் நாம் எப்படி சூழ்நிலைகளை எதிர்கொள்கிறோமோ அதேபோல்தான் பழைய ஏற்பாட்டின் நாட்களில் பல வேதாகம தாசர்கள் எதிர் கொண்டார்கள்.

பழைய ஏற்பாட்டில் ஒருவர் மிகப் பெரிய பணியை நிறைவேற்றும் படியாக தேவனால் தெரிந்தெடுக்கப்பட்டார் தாசர்கள். அந்தப்பணி மனித இனம் அறிந்திருக்கிறபடி அநேகமாக மிகப்பெரிய பணியாக இருக்க வேண்டும். மோசே இஸ்ரவேல் ஜனங்களை அடிமைத் தனத்திலிருந்து வெளியேற்றி, அவர்களை ஒரு தேசமாக உருவாக்கி, ஒழுங்குபடுத்தி பாலும், தேனும் ஓடின கானான் தேசத்திற்குள் வழி நடத்த வேண்டியதாயிருந்தது. மோசேக்கு கொடுக்கப்பட்ட பணி மிகவும் கடினமானதாக இருந்தது. ஆனால், அத்தனை பிரச்சனை களுக்கும் மத்தியிலும் தேவன் அவரோடிருந்தார். துரதிஷ்டவசமாக ஜனங்களால் ஏற்படுத்தப்பட்ட அழுத்தத்தில் தன் கட்டுப்பாட்டை ஒரு சமயம் இழந்து விட்டார். அதன் விளைவாக, அவர் எந்த ஜனங்களை வழி நடத்திக் கொண்டு போனாரோ அவர்களோடு வாக்குத்தத்தம் செய்யப்பட்ட பூமிக்குள் பிரவேசிக்க அனுமதி அவருக்கு தேவனால் மறுக்கப்பட்டது. ஒரு தோல்வியினால் வாழ்க்கை முழுவதும் எதற்காக பிரயாசப்படுகிறோமோ அதை இழந்துபோவது எவ்வளவு வேதனை யான ஒன்று! இருந்தபோதிலும், மோசேக்கு அளிக்கப்பட்ட தீர்ப்பு இதுதான்.

அத்தனை பாடுகளின் மத்தியிலும் மோசே தனக்கு தேவன் கொடுத்த பணியை விட்டுவிட்டு ஓடிவிட்டாரா? இல்லை. தேவ சித்தத்தை தொடர்ந்து செய்தால் இவ்வாழ்க்கைக்குப் பிறகு தேவன் நிச்சயமாக சிறந்ததைத் தருவார் என்பதை அறிந்திருந்தார். ஆகவே, மோசே தொடந்து இஸ்ரவேல் ஜனங்களை கானான் தேசத்தை நோக்கி வழிநடத்திக்கொண்டும், திடப்படுத்திக்கொண்டும், உற்சாகப்படுத்திக் கொண்டும் இருந்தார்.

அதிலும் குறிப்பாக, தனக்குப்பின் ஜனங்களை வழிநடத்தப் போகும் யோசுவாவை திடப்படுத்தி அவரை அதிகமாக உற்சாகப் படுத்தினார். தேவ தாசனாகிய மோசே இவ்வுலக வாழ்க்கையை விட்டுப் பிரிவதற்கு முன்பு இஸ்ரவேல் ஜனங்களில் அந்த புதிய தலை முறையினிரிடத்தில் இவ்விதமாகச் சொன்னார். உனக்கு முன்பாக நிற்கிற நூனின் குமாரனாகிய யோசுவா அதில் பிரவேசிப்பான் அவனைத் திடப்படுத்து; அவனே அதை இஸ்ரவேலுக்குச் சுதந்தர மாகப் பங்கிடுவான் (யோசுவா 1:38) என்ன ஓர் அருமையான மனப்பான்மை! மோசே போன்ற ஒரு மாபெரும் தலைவர் வழிகாட்டியாக தன் வாழ்நாளில் கிடைத்ததை குறித்து யோசுவா எவ்வளவு உற்சாக மடைந்திருக்க வேண்டும். தேவதாசனாகிய மோசேக்கு மனித பாணியில் ஈமச்சடங்கு நடைபெறவில்லை, அல்லது அவருடைய சரீரம் மனிதர்களால் புதைக்கப்படவில்லை. தேவனே அவருடைய சரீரத்தை அடக்கம் பண்ணினார் என்று பார்க்கிறோம். அப்படியே கர்த்தரின் தாசனாகிய மோசே மோவாப் தேசமான அவ்விடத்திலே கர்த்தருடைய வார்த்தையின்படியே மரித்தான். அவர் அவனை மோவாப் தேசத்திலுள்ள பெத்பேயோருக்கு எதிரான பள்ளத்தாக்கிலே அடக்கம் பண்ணினார். இந்நாள் வரைக்கும் ஒருவனும் அவன் பிரேதக்குழியை அறியான் (உபாகமம் 34:56)

இது நிச்சயமாகவே நம்மெல்லோருக்கும் உற்சாகத்தை அளிக்க வேண்டும். நாம் ஏதாவது காரியத்தில் தவறினால் கூட இவ் வாழ்க்கைக்கு அப்பால் மேலான காரியங்களுக்காக நாம் பாடுபட்டால் நமக்கு நம்பிக்கை உண்டு. தேவனுடைய வாக்குதத்தங்கள் நிலைத் திருக்கிறது. நாம் இம்மைக்காக மாத்திரம் கிறிஸ்துவின் மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால் எல்லா மனிதரைப் பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்போம் என்னும் வார்த்தைகளால் உற்சாகப்படுத்தப்படுகிறோம் (I கொரிந்தியர் 15:19) மோசேயின் அடக்க நிகழ்வு இதைவிட சிறந்ததாக இருந்திருக்க முடியுமா? தேவன் ஏற்றக் காலத்தில் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வார் என்பதை அறிவது எவ்வளவு அருமையானது.

சில வேளைகளில் நாம் வாழ்வின் பாரங்களால் அழிந்து போகி றோம். இருந்த போதிலும் மற்றவர்களை உற்சாகப்படுத்தும் முயற்சியில் நாம் ஈடுபடும்போது நம்மைக்குறித்து அதிகமாக கவலைப் பட வேண்டாம். சில வேளைகளில் எதிர்பாராத ஆதாரங்களிலிருந்து உற்சாகம் வருவது உண்மையாகவே எத்தனை அருமையானது.

# நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்கள்?

**பி**ரியமானவர்களே, உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக் குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல், கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும் போது நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள். நீங்கள் கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் நிந்திக்கப்பட்டால் பாக்கியவான்கள்; ஏனென்றால் தேவனுடைய ஆவியாகிய மகிமையுள்ள ஆவியானவர் உங்கள் மேல் தங்கியிருக்கிறார். அவர்களாலே தூஷிக்கப் படுகிறார். உங்களாலே மகிமைப்படுகிறார். ஆதலால் உங்களில் ஒருவனும் கொலை பாதகனாயாவது, திருடனா யாவது, பொல்லாங்கு செய்தவனாயாவது, அந்நிய காரியங் களில் தலையிட்டுக் கொண்டவனாயாவது பாடுபடுகிறவனா யிருக்கக்கூடாது. ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக்கடவன். நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே துவக்குகாலமாயிருக்கிறது. முந்தி நம்மிடத்திலே அது துவக்கினால் தேவனுடைய சுவி சேஷத்திற்கு கீழ்ப்படியாதவர் களின் முடிவு என்னமாயிருக்கும்? நீதி மானே இரட்சிக்கப்படுவது அரிதானால், பக்தியில்லாதவனும் பாவியும் எங்கே நிற்பான்? ஆகையால் தேவனுடைய சித்தத்தின்படி பாடநுபவிக்கிறவர்கள் நன்மை செய்கிறவர்களாய்த் தங்கள் ஆத்துமாக்களை உண்மையுள்ள சிருஷ்டி கர்த்தாவாகிய அவருக்கு ஒப்புக் கொடுக்கக்கடவர்கள்.

I பேதுரு 4:12-17

# கிறிஸ்தவ இல்லம்
## சிறந்த வீட்டின் நற்குணங்கள்
## Qualitles of a Great Home
### Jimmy Clark

குணசாலியான ஸ்திரீயை கண்டுபிடிப்பவன் யார்? அவளுடைய விலை முத்துக்களைப் பார்க்கிலும் உயர்ந்தது [நீதிமொழிகள் 31:10]. இவ்வசனப்பகுதி நற்பண்புள்ள ஒரு ஸ்திரீயைப்பற்றி விவரிக்கிறது. இருப்பினும், இங்கே ஸ்திரீயைத் தாண்டி வேறு சிலரைப் பற்றியும் விவரிக்கப்பட்டுள்ளது. ஸ்திரீயின் கணவனைப்பற்றி விவரிக்கப்பட்டிருக்கிறது [நீதிமொழிகள் 31:11,23,28]. ஸ்திரீயின் பிள்ளைகளைப் பற்றி விவரிக்கப்பட்டிருக்கிறது. ஸ்திரீயின் வீட்டிலுள்ள வேலைக்காரரையும் சேர்த்து விவரிக்கிறது [நீதிமொழிகள் 31:15]. இவ்வசனப் பகுதியிலுள்ள பல காரியங்கள் சிறந்த வீடு பற்றிய தகவல்களைத் தருகிறது. அவைகளுள் மூன்று காரியங்கள் குறித்து ஆழமாக சிந்தியுங்கள்.

### நம்பிக்கை

அவள் புருஷனுடைய இருதயம் அவளை நம்பும், அவன் சம்பத்துக் குறையாது. அவன் உயிரோடிருக்கிற நாளெல்லாம் அவனுக்குத் தீமையையல்ல, நன்மையையே செய்கிறாள் [நீதிமொழிகள் 31:11-12] . வெற்றிகரமான திருமணங்கள் மற்றும் வீடுகளின் அடிப்படை விதி நம்பிக்கை எனும் வார்த்தையில் உள்ளது. இருவரும் ஒன்றான நாளிலே, அதாவது விவாக நாளிலே கணவனும் மனைவியும் செய்து கொண்ட வாக்குறுதிகளை நிறைவேற்ற இந்த நம்பிக்கை முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. கணவன் மனைவி ஒருவரை விட்டு மற்றொருவர் தூரமாக இருக்கும்போது ஒருவர் மற்றொருவரிடத்தில் கொள்ளும் பரஸ்பர நம்பிக்கை எல்லோரும் அறிய வேண்டிய சமாதானமாயிருக்கிது. இருப்பினும், சில குடும்பங்களில் கணவன் தன் மனைவியைக் கட்டுப்படுத்தி, மனைவியின் ஒவ்வொரு வார்த்தையையும், நடையையும் சந்தேகப் படுவது வேதனைக்குரியதாகும். அதேபோல் மனைவியும் கணவனின் ஒவ்வொரு செயலையும் துருவித் துருவி விசாரிப்பதும், கணவன் தனக்கு உண்மையாயிருக்கிறானா என்று சந்தேகப்படுவதும் வேதனையான ஒரு காரியமாகும். கணவன் மனைவி இருவரும் ஒருவர் மீது ஒருவர் கொள்ளும் நம்பிக்கை இருவரும் தூரத்தில் இருந்தாலும் மகிழ்ச்சியான, பலன் தருகிற வாழ்க்கைக்காக இருவரும் ஒரே குறிக்கோளுக்காக வேலை செய்கிறார்கள்.

# Hard Work




அவள் சோம்பலின் அப்பத்தைப் புசியாமல், தன் வீட்டுக்காரியம் எப்படி நடக்கிறது என்று கண்ணோக்கமாயிருக்கிறாள் (நீதி மொழிகள் 31:27): இவ்வசனப்பகுதி கடின உழைப்பை விவரிக்கும் வார்த்தைகளால் நிரப்பப்பட்டிருக்கிறது. இங்கே **தேடி** உற்சாகத்தோடே வேலை செய்கிறாள் போன்ற வார்த்தைகளை கவனியுங்கள் (நீதி 31:13). இந்த ஸ்திரீயின் கிரியைகளை நாம் சாதாரணமாகப் பார்த்தால் கூட அவள் சோம்பலாய் இருக்கவில்லை என்பதை புரிந்து கொள்ள முடியும். அவள் நிகழ்கால தேவைக்காகவும், எதிர்காலத்தேவைக்காகவும் வேலை செய்தாள். இவ்வதிகாரத்தின் இறுதி வசனம் அவளைப் புகழ்கிறது (நீதிமொழிகள் 31:31)

**தயை**

தயை இல்லாத எந்த இல்லமும் சிறப்பான இல்லமாக இருக்க முடியாது. இந்த மதிப்பு மிக்க ஸ்திரீயைப் பற்றி இவ்விதமாக சொல்லப்படுகிறது. தன் ஞானம் விளங்க வாயைத் திறக்கிறாள். தயையுள்ள போதகம் அவள் நாவின் மேல் இருக்கிறது. (நீதி 31:26). இந்த ஸ்திரீ தன் வீட்டுக்கு வெளியே இருக்கும் ஏழைகளிடத்தில் இரக்கம் பாராட்டியிருக்கிறாள் (நீதி 31:20). இரக்கம் மற்றும் தயையை மற்றவர்களிடத்தில் காட்டுவது தேவனுடைய பண்புக்கு சமமான பண்பாக இருக்கிறது (தீத்து 3:4–5). பூமிக்குரிய ஐசுவரியங்களை விட அன்பும், தயையும் தான் அதிகமாக நாடப்பட வேண்டும். சாலொமோன் ஓரிடத்தில் இவ்விதமாகச் சொல்கிறார், பகையோடிருக்கும் கொழுத்த எருதின் கறியைப் பார்க்கிலும், சிநேகத்தோடிருக்கும் இலைக்கறியே நல்லது (நீதிமொழிகள் 15:17). சண்டையோடுகூடிய வீடு நிறைந்த கொழுமையான பதார்த்தங்களைக் பார்க்கிலும், அமரிக்கையோடே சாப்பிடும் வெறும் துணிக்கையே நலம் (நீதிமொழிகள் 17:1). தேவன் திருமணத்தில் ஆணையும், பெண்ணையும் இணைத்து (மத்தேயு 19:6) நம்மை சமாதானத்திற்கென்று அழைத்திருக்கிறார் (I கொரிந்தியர் 7:15).

தேவனாகிய கர்த்தர் வீட்டை மனித இனத்துக்கு ஆசீர்வாதமாக இருக்கும்படி படைத்திருக்கிறபடியால், வீட்டுக்கு எது சிறந்தது என்று தேவன் சொல்லுகிறாரோ அதைப் பின்பற்ற வேண்டும். பூமியின் ஒவ்வொரு குடும்பமும் பரலோக சுவையைப் பெற்றதாக இருக்குமா?

## கிறிஸ்தவ இல்லம்

## தரமான தலைமைத்துவத்திற்கான ஆறு பண்புகள்

# Six Qualities of Quality Leadership

**Neal Pollard**

**உ**பாகமம் புத்தகத்தில் தேவதாசனாகிய மோசே நாற்பது அல்லது ஐம்பது வருட நிகழ்வுகளைத் திரும்பிப் பார்க்கிறார். ஜனங்கள் வனாந்திரத்தில் அலைந்து திரிய எது காரணமாக இருந்தது. வனாந்திர யாத்திரையில் நடந்த சம்பவங்கள் என்னென்ன என்பதை திரும்பிப் பார்க்கிறார். இந்த உபாகமம் புத்தகம் முதலாம் அதிகாரம் அதன் மையப்பகுதியில் இஸ்ரவேலர்கள் மத்தியில் ஏற்பட்ட எண்ணற்ற பிரச்சனைகளைத் தீர்க்க தன் மாமனாராகிய எத்திரோவின் திட்டங்களை செயல்படுத்தினவைகளைக் குறித்து பேசினார். மோசே பிரச்சனைகளைத் தீர்க்க நியமித்தவர்களை நியாயாதிபதிகள் என்று அழைத்தார். (மோசேயின் காலத்திற்கு பிறகு, சில நூற்றாண்டுகள் நீதிபதிகள் என்கிற பட்டத்தை வைத்துக் கொண்டு ஜனங்களை நியாயந்தீர்க்கும் நபர்களிடமிருந்து சற்றே வித்தியாசமாக நியாயாதி பதிகள் என்று அழைத்தார்கள். இந்த நியாயாதிபதிகள் நிச்சயமாகவே தேவனால் கொடுக்கப்பட்ட தகுதியம்சங்களைப் பெற்றிருந்தார்கள் (உபாகமம் 1:15-17).

ஆகையால், நான் ஞானமும் அறிவுமுள்ள மனிதராகிய உங்கள் கோத்திரங்களின் வம்சாதிபதிகளைத் தெரிந்துகொண்டு, அவர்கள் உங்களுக்குத் தலைவராயிருக்கும்படி, ஆயிரம் பேருக்கு அதிபதி களாகவும், நூறு பேருக்கு அதிபதிகளாகவும், ஐம்பது பேருக்கு அதிபதி களாகவும், பத்து பேருக்கு அதிபதிகளாகவும் உங்கள் கோத்திரங்களில் அதிகாரிகளாகவும் ஏற்படுத்தி வைத்தேன். அக்காலத்திலே உங்க ளுடைய நியாயதிபதிகளை நான் நோக்கி: நீங்கள் உங்கள் சகோ தரரின் வியாச்சியங்களைக்கேட்டு இருபட்சத்தாராகிய உங்கள் சகோதருக்கும், அவர்களிடத்தில் தங்கும் அந்நியனுக்கும், நீதியின்படி தீர்ப்புச் செய்யுங்கள். நியாயத்திலே முகத்தாட்சிணியம் பாராமல் பெரியவனுக்கு செவி கொடுப்பது போல, சிறியவனுக்கும் செவிக் கொடுப்பீர்கள்; மனிதன் முகத்திற்கு பயப்படீர்களாக. நியாயத்தீர்ப்பு தேவனுடையது; உங்களுக்குக் கடினமாயிருக்கும் காரியத்தை என்னிடத்தில் கொண்டு வாருங்கள்; நான் அதைக்கேட்பேன் என்று சொல்லி, உபாகமம்;1:15-17.

**அவர்கள் ஞானமுள்ளவர்களாய் இருக்க வேண்டும்.**

13-ஆம் வசனத்தில் அறிவும், விவேகமும் உள்ளவர்கள் என்று பார்க்கிறோம். அறிவு என்பது ஞானத்திற்குக் கீழ் இருக்கும் ஒன்றாகும். மேலும், அறிவு என்பது ஞானத்தை நடைமுறையில் பயன்படுத்து வதாகும். பிரச்சனைகளை தீர்ப்பதற்கு ஞானம் அவசியமாயிருக்கிறது.

**அவர்கள் அனுபவமுள்ளவர்களாயிருக்க வேண்டும்.**

அவர்கள் புதியவர்களாக, அனுபவமற்றவர்களாக இருக்கக் கூடாது. அவர்கள் கடினமான சூழ்நிலைகளில் நியாயம் விசாரிக்கும் திறன்களை நிரூபத்திருக்க வேண்டும்.

**அவர்கள் நீதியான தீர்ப்புகளை செய்கிறவர்களாக இருக்க வேண்டும்.**

எல்லோரும் இவர்கள் நீதியுள்ள தீர்ப்புகளை செய்கிறார்கள் என்றும் மற்றவர்கள் பேரில் தான் தவறு என்ற எண்ணத்திற்கு வர வேண்டும். இந்த தலைவர்கள் எப்படித்தீர்ப்பு செய்ய வேண்டும்? சூழ்நிலைகளை தெளிவாகப் பகுத்தறிந்து, அவசரமாக தீர்ப்புகளை செய்யாமல் சரியாக, நியாயமாகத் தீர்ப்புச்சொல்ல வேண்டும்.

**அவர்கள் பட்சபாதமில்லாதவர்களாக இருக்க வேண்டும்.**

பட்சபாதம் காட்டுவதும், ஊழல் செய்வதும் ஒன்றுதான். சச்சரவுகள் முழுமையான நேர்மையுடனும், நியாயத்துடனும் தீர்க்கப்பட வேண்டும்.

**அவர்கள் எந்த மனிதனுக்கும் பயப்படக்கூடாது.**

நியாயாதிபதிகள் அச்சுறுத்தல், பயமுறுத்தல், அடக்குதல், லஞ்சம் கொடுத்தல், விலக்கிவைத்தல் போன்றவைகளுக்கு எளிதாக உட்படுத்தப்படுவார்கள். ஆனால், சூழ்நிலை எவ்வளவு மோசமானதாக அபாயகரமானதாக இருந்தாலும் பயமில்லாமல், துணிச்சலுடன் நிற்கும்படி இவர்களுக்கு தேவ கட்டளை கொடுக்கப்பட்டது.

எகிப்துக்கு வெளியே, வனாந்திர யாத்திரைக்கு முன்பாக நியாயாதிபதி சம்பந்தமாக கொடுக்கப்பட்ட கட்டளை இன்றைய நாட்களில் தலைமைத்துவத்திற்காக தேவனுடைய நேரடியான கட்டளையாக இல்லாமல் இருக்கலாம். இருந்தபோதிலும் இவ்வசனப் பகுதியில் இடம் பெற்றுள்ள விதிகளும், பயன்பாடுகளும் இன்றைய நாட்களில் தரமான தலைவர்களாக இருப்பதற்கான தகுதியம்சங்களை உள்ளடக்கியிருக்கிறது.

## கிறிஸ்துவ இல்லம்

# உங்கள் குடும்பத்தின் ஆவிக்குரிய தன்மையை மேம்படுத்துவது எப்படி?

# How To improve the Spirituality of yout family?

**Ken Tyler**

இந்தப் பரபரப்பான உலகில் நம் கவனத்தை இழப்பது சுலபமானது தான். உதாரணமாக, பெரும்பாலான பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை ஒன்றன்பின் ஒன்றான வெவ்வேறு விளையாட்டுகளில் தங்கள் கவனத்தை செலுத்தியிருக்கிறபடியினால் வேறு காரியங்களில் கவனம் செலுத்த குறைவான நேரமே அவர்களுக்கு உள்ளது. நம் ஆவிக்குரிய தன்மையை தக்கவைத்துக் கொள்வதற்கும் அதை மேம்படுத்தவும் விசேஷித்த முயற்சிகள் தேவைப்படுகிறது. உங்கள் குடும்பத்தின் ஆவிக்குரிய தன்மையை மேம்படுத்த சில எளிய வழிகளை உங்களுக்கு நான் தர விரும்புகிறேன். இது ஆசையுடன் தொடங்குகிறது.

1. உங்கள் குடும்பத்தின் ஆவிக்குரிய தன்மையை மேம்படுத்த வேண்டும் என்ற ஆசை இருக்க வேண்டும்.

2. உணவு வேளையில் சேர்ந்து ஜெபியுங்கள் :

இது நீங்கள் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களெல்லாம் தேவனிடத்திலிருந்து வருகிறது என்பதை நீங்கள் அடையாளங்கண்டு விட்டீர்கள் என்பதற்கான ஒப்புதலாயிருக்கிறது (யாக்கோபு 1:17) நீங்கள் வாகனத்தில் அமர்ந்து சாப்பிட்டாலும் சரி, ஜெபிக்க மறக்க வேண்டாம்.

3. நீங்கள் படுக்கைக்குச் செல்வதற்கு முன்பாக வேதவாசிப்புக்கும், ஜெபத்துக்கும் உங்கள் குடும்பத்தை ஒன்று சேருங்கள் (தீமோத்தேயு 3:15)

இது தேவனோடும் ஒருவருக்கொருவரோடும், நெருக்கத்தை ஏற்படுத்தும். மேலும், இது உங்கள் குடும்பத்துக்குத் தேவையான சமாதானத்தைத் தரும்.

4.குடும்பமாக போய் விசேசித்த தேவையில் இருப்பவர்களை சந்தியுங்கள் (கலாத்தியர் 6:10) ✝

## அக்கறை

*இப்போது நம் பிள்ளைகள் வளர்ந்து விட்டார்கள் அவர்களிடத்தில் மற்றவர்களிடத்தில் அக்கறைக் காட்டும் மனப்பான்மையை பார்க்க முடிகிறது. நம் பிள்ளைகள் வளர்ந்து கொண்டிருந்த போது நாம் மற்றவர்களுடைய பாரத்தை சுமந்ததை அவர்கள் பார்த்து வளர்ந்தபடியால் நம்மிடத்திலிருந்து உதவி செய்யும் மனப்பான்மையை கற்றுக் கொண்டார்கள்.*

# வேதாகமத்தின் மறக்கப்பட்ட மனிதர்கள் : எத்திரோ

# Forgotten men of the Bible : Jethro

Rebecca Rushmose

**நா**ம் பல வேதாகம கதாப்பாத்திரங்களைப் பற்றி அறிந்திருக் கிறோம். இந்த கதாப்பாத்திரங்களைக் குறித்து நாம் அடிக்கடி பல பாடங்களைப் படிக்கிறோம். இவர்களைக் குறித்து பல அதிகாரங்கள் அடங்கிய முழு புத்தகங்கள் வெளியிடப்படுகின்ற இவர்களுக்கென்று பிரத்யேகமாக வெளியிடப்படும். புத்தகங்களிலிருந்து அநேக பாடங்களை கற்றுக்கொள்ளமுடியும். வேதாகமத்தில் வேறு சில கதாபாத்திரங்களும் உண்டு. ஆனால் அவர்களைப் பற்றி நாம் குறை வாகத்தான் அறிந்திருக்கிறோம். இந்த வேதாகம கதாபாத்திரங்களைப் பற்றி ஆங்காங்கே ஒரு சில இடங்களில் தான் குறிப்பிடப் பட்டிருக்கிறது. இவர்களை பெரும்பாலும் நம் கண்டு கொள் வதில்லை. இருந்தபோதிலும் ஏதோ ஒரு நோக்ககத்திற்கான இவர்கள் வேதாகமத்தில் இடம் பெற்றிருக்கிறார்கள்.

யோவான் 20:30–31 வசனங்களில், இந்தப் புத்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு செய்தார் என்று வாசிக்கிறோம். வேதாகமத்தில் பதிவு செய்யப்பட்ட காரியங்களை நம் விசுவாசத்தை பலப்படுத்தவே பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. (IIதீமோத்தேயு3:16,17) வசனங்கள் வேதத்திலுள்ள வார்த்தைகள் எல்லாம் தேவனிடத்திலிருந்து வந்தவைகள் என்று அவைகள் நாம் கற்றுக்கொள்வதற்காகவே நமக்கு கொடுக்கப்பட்டுள்ளன என்றும் சொல்கிறது. மறக்கபட்ட ஆண்களும், பெண்களும் அல்லது சிறிய அளவில் அறியப்பட்ட கதாபாத்திரங்கள் நமக்கு விலையேறப்பெற்ற பாடங்களை கற்றுத்தரும் என்பதில் எந்த சந்தேகமும் இருக்க முடியாது.

பழைய ஏற்பாட்டில், தேவனால் மாபெரும் விசுவாச வீரர்களாக தேவனால் எண்ணப்பட்ட பல மனிதர்களைப் பற்றி நாம் வாசிக்க முடியும் (எபிரெயர்11). இத்தகைய விசுவாச வீரர்களும் ஒருவர் மோசே, ஆனால், இந்த மோசேக்கு அறிவுரை வழங்கிய இஸ்ர வேரல்லாத ஒரு மனிதர் இருக்கிறார். தேவனால் அழைக்கப்பட்ட மனிதனுக்கு ஆலோசனை வழங்க யார் துணிவார்? இதற்கான விடை மோசேயின் மாமனாராகிய எத்திரோ என்பதாகும். இம்மனிதனைப் பற்றி முதன் முதலாக யாத்திராகமம் 2:16–21 வசனங்களில் தான் குறிப் பிடப்பட்டிருக்கிறது. இவ்வசனப்பகுதியில் பார்வோனின் கோபாத்துக்கு தப்பித்துக்கொள்ள எகிப்திலிருந்து தப்பி மீதியான் தேசத்திற்க்கு போய்ச்சேருகிறார்.அந்த மீதியான் தேசத்து ஆசாரியனுடைய

ஏழு குமாரத்திகளுக்கும் தண்ணீர் மொண்டு கொடுத்து உதவி செய்தான். இங்கே மோசேயின் மாமனார் ரெகுவேல் என்றழைக்கப் படுகிறார். அவர் மோசேயை வீட்டுக்கு போஜனம் பண்ணும்படி அழைத்து பின்னாளில் தன் குமாரத்திகளில் ஒருத்தியை மோசேக்கு மனைவியாகக் கொடுத்தார். அடுத்தமுறை நாம் மோசேயின் மாம னாரைப்பற்றி யாத்திராகமம் 3:1ல் பார்க்கிறோம் அங்கே அவர் எத்திரோ என்றழைக்கப்படுகிறார். இம்மனிதனை பற்றி யாத்திராகமம் புத்தகத்தின் மற்ற பக்கங்களில் குறிப்பிடும் போதெல்லாம் எத்திரோ என்ற பெயராலேயே குறிப்பிடப்பட்டிருக்கிறார்.

தேவனால் அழைக்கப்பட்ட மனிதனாகிய மோசேக்கு ஆலோசனை வழங்கிய அந்நிய தேசத்தைச் சேர்ந்த இந்த ஆசாரிய னிடமிருந்து நாம் எதைக்கற்றுக் கொள்ள முடியும்? **முதலாவது** இந்த எத்திரோ **உபசரிக்கிறவராக** இருந்திருக்கிறார். எத்திரோவின் குமாரத்திகளுக்கு மோசே முதலில் உதவிசெய்தபோது அவர்கள் மோசே இல்லாமல் வீட்டிற்க்கு வந்தார்கள். ஆனால், எத்திரோ உங்களுக்கு உதவின அந்த மனிதனை அழைத்து வாருங்கள் அவனுக்கு போஜனம் கொடுக்க வேண்டுமென்று சொல்லி அவர்களை அனுப்பி வைத்தார். [யாத்திராகமம் 2:20] யாத்திராகமம் 3:1ல் **மோசே தன் மாமனாகிய எத்திரோவின் ஆடுகளை மேய்த்து வந்தார்** என்று பார்க்கிறோம். எத்திரோ ஒரு அந்நியனுக்கு உணவளிப்பதில் தாமதப்படுத்தவில்லை. நாமும் கூட மற்றவர்களுக்கு உதவவும், உபசரிக்கவும் துடிப்பாக இருக்க வேண்டும்[I பேதுரு4:9].



**இரண்டாவது,** எத்திரோ மற்றவர் களிடமிருந்து மரியாதையை சம்பாதித் தான் யாத்திராகமம் [8:1-8] வசனங் களில் இஸ்ரவேலர்கள் எகிப்தை விட்டு வெளியேறினபோது எத்திரோ மோசேயின் மனைவியையும், அவள் பிள்ளைகளையும் எப்படி கொண்டு வந்து சேர்த்தான் என்பதை வாசிக்க முடியும். மோசே தன் மாமனுக்கு எதிர் கொண்டுவந்ததையும் நாம் வாசிக்க முடியும். மோசே தன் மாமனுக்கு எதிர்கொண்டுபோய் அவனை முத்தம்செய்தான்; ஒருவரை ஒருவர் சுக செய்தியை விசாரித்துக் கொண்டு, கூடாரத்தில் பிரவேசித் தார்கள் [யாத்திராகமம் 18:7] எத்திரோ மரியாதையை சம்பாதித்துக் கொண்டதாக மோசே காட்டினார். கிறிஸ்தவர்களாகிய நாம் மற்றவர்கள் நம்மை மதித்து அதன் மூலம் தேவனை மகிமை படுத்தும் படி நடந்து கொள்ள வேண்டும். **புறஜாதிகள் உங்களை அக்கிரமாக் காரரென்று விரோதமாய்ப் பேசும் விஷயத்தில் அவர்கள் உங்கள் நற் கிரியைகளைக்கண்டு அவற்றினிமித்தம் சந்திப்பின் நாளிலே தேவனை மகிமைபடுத்தும்படி நீங்கள் அவர்களுக்குள்ளே நல்நடக்கையுள்ளவர்களாய் நடந்து கொள்ளுங்கள்** [I பேதுரு2:12].

அடுத்து, எத்திரோ தேவனுடைய ஜனங்களோடே களிகூர்ந்த ஒரு மனிதனாக இருந்திருக்கிறார். தேவன் செய்த நன்மையான காரியங்களுக்காக அவருக்கு பலிசெலுத்தியிருக்கிறார். அது மட்டுமல்ல தன் மருமகனாகிய மோசேக்கு நல் ஆலோசனைகளை வழங்கியிருக்கிறார். எத்திரோ தேவன் தம்முடைய ஜனங்களை அடிமைத்தனத்திலிருந்து விடுவித்தமைக்காக களிகூர்ந்தார். யாத்திராகமம் [18:9-11] இவ்விதமாக சொல்கிறது.

**கர்த்தர் இஸ்ரவேலரை எகிப்தியரின் கைக்குத் தப்புவித்து, அவர்களுக்குச் செய்த சகல நன்மைகளையுங் குறித்து எத்திரோ சந்தோஷப்பட்டு உங்களை எகிப்தியரின் கைக்கும் பார்வோனின் கைக்கும் தப்புவித்து எகிப்தியருடைய கையின் கீழிருந்த ஜனத்தை விடுவித்த கர்த்தருக்கு ஸ்தோத்திரம். கர்த்தர் எல்லா தேவர்களைப் பார்க்கிலும் பெரியவர் என்பதை இப்பொழுது அறிந்திருக்கிறேன். அவர்கள் இடும்பு செய்த காரியத்தில் அவர்களை மேற்கொண்டார் என்று சொல்லி;** எத்திரோ சர்வாங்க தகனபலியையும் மற்ற பலிகளையும் தேவனுக்குக் கொண்டுவந்து செலுத்தினான். பின்பு ஆரோனும், இஸ்ரவேல் மூப்பர் அனைவரும் வந்து எத்திரோவுடனே தேவ சமுகத்தில் போஜனம் பண்ணினார்கள் [யாத்திராகமம்18:12] நாமும் கூட தேவன் நமக்கு செய்த எல்லா அருமையான காரியங்களையும் ஒரு போதும் மறக்கவே கூடாது. நம் வாழ்க்கை தேவனுக்கு நன்றி செலுத்துவதிலும் [கொலோ 2:7; 3:117] தேவனுடைய ஜனங்களோடே அவரை ஆராதிப்பதிலும் கழிய வேண்டும் [எபிரெயர் 10:25]. மறுநாளிலே, மோசே ஜனங்களை நியாயம் விசாரிக்கிறதைக் கண்டு மோசேக்கு ஒரு ஆலோசனையை எத்திரோ வழங்கினார். ஜனங்களின் தேவைகளை அறிந்து உள்ளம் உருகியதைத் கவனித்தார். மோசே தனி ஆளாக ஜனங்களையும் நியாயம் விசாரித்தால் அவர் சோர்ந்துபோவார் என்று எண்ணிய எத்திரோ அவருக்கு ஒரு நல்ல ஆலோசனையை வழங்கினார். அந்த ஆலோசனை என்னவென்றால், பெரிய காரியங்களை மாத்திரம் நீர் நியாயம் விசாரியும் என்று ஆலோசனை கொடுத்தார். [யாத்திராகமம்18:13-22]. மேலும், எத்திரோ ஆலோசனைகளை நிறைவேற்றுவதற்கு முன்பாக தேவனிடத்தில் காரியங்களை எடுத்துசெல்ல வேண்டுமென்றும் ஆலோசனை வழங்கினார். இந்தப் பிரகாரம் நீர் செய்வதும், இப்படி தேவன் உமக்குக் கட்டளையிடுவதும் உண்டானால், உம்மாலே தாங்கக்கூடும்; இந்த ஜனங்கள் எல்லோரும் தாங்கள் போகும் இடத்துக்கு சுகமாய்ப் போய்ச் சேரலாம் என்றான் [18:23].

உண்மையாகவே, எத்திரோ நாம் உயர்வாகப் பார்த்து மெச்ச வேண்டிய ஒரு நபர்தான். இவர் மற்றவர்களால் மதிக்கப்பட்டு தேவன் மீதும் அவருடைய ஜனங்கள் மீதும் மரியாதை மனப்பான்மையை கொண்டிருந்தார். வேதாகமத்தின் இந்த மறக்கப்பட்ட மனிதர்கள் மற்றவர்களுடைய சந்தோஷத்திலும் பங்கெடுத்து, வாழ்க்கையின் எல்லா காரியங்களுக்கும் தேவ ஆலோசனையை நாடியிருக்கிறார்கள். இவருடைய அருமையான பண்புகளை நாமும் பின்பற்றுவோம். ✝




எபேசியர் நிருபம் மூலமாக தேடுதல் வேட்டை

# Scavenger Hunt Through Ephesians

Rebecca Rushmore

- தேவன் எப்போது சகலவற்றையும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டுவார்?

- யார் மூலைக்கல்லாயிருக்கிறார்?

- யார் யூதர்களோடு உடன் சுதந்தரராயிருக்கிறார்?

- எப்படி நம் கிறிஸ்து நம் இருதயங்களில் வாசமாயிருக்க வேண்டும்?

- நான்காம் அதிகாரத்தில் பட்டியலிடப்பட்டிருக்கிற ஏழு ஒன்றுகளை எழுதுக?

- நாம் ஏன் மற்றவர்களை மன்னிக்க வேண்டும்?

- சபையாருக்கு ஏன் கீழ்ப்பட்டிருக்க வேண்டும்?

- எந்த பாதுகாப்பு கவசத்தோடு விசுவாசம் ஒப்பிடப்பட்டிருக்கிறது?

- எந்த ஆயுதத்தோடு தேவனுடைய வார்த்தை ஒப்பிடப்பட்டிருக்கிறது?

- பவுலின் சுக செய்திகளை எபேசு பட்டணத்தாருக்கு அறிவிக்க பவுல் யாரை அனுப்பினார்?

# சோதனையில் மகிழ்ச்சியாயிருப்பதற்கான காரணங்கள்

# Reasons For Having Joy In Trials

Gary C. HamPton

இந்நாட்களில் நாம் ஒவ்வொருவரும் வாழ்க்கையில் ஏதாவது சோதனைகளின் வழியாக கடந்த வருகிறோம். மனிதக் கண்ணோட்டத்தில் பார்த்தால் அவைகள் துக்ககரமானது. இருந்த போதிலும், யாக்கோபு இந்த நிருபத்தை சோதனையில் சந்தோஷமாயிருப்பதற்கான காரணங்களுடன் திறக்கிறார். அந்த காரணங்களை ஆராய்ந்து பார்ப்பதற்கு முன்பாக யாக்கோபு சிதறப்பட்ட ஜனங்களுக்கு எழுதினவைகளைக் குறித்து ஆழ்ந்து சிந்திப்பது நன்றாயிருக்கும்.

புதிய ஏற்பாட்டில் நான்கு பேர் யாக்கோபு எனும் பெயரால் அடையாளம் காணப்படுகிறார்கள், யூதாவின் தகப்பனாகிய யாக்கோபு. இந்நிருபத்தை வெறுமனே தன் பெயரைக் குறிப்பிட்டு அறியப் படுவதற்கு வாய்ப்பே இல்லை. லூக்கா6:16; அப்போஸ்தலர் 1:13]. அல்பேயுவின் குமாரனாகிய யாக்கோபு. யாக்கோபை பொறுத்த வரை, அவருடைய குடும்பத்தைப் பற்றி சில தகவல்கள் கொடுக்கபட்டு இருக்கின்றன. பெரிய அளவில் தகவல்கள் ஒன்றுமில்லை. எனவே, இந்த யாக்கோபு இந்நிருபத்தின் ஆசிரியாயிருப்பதற்கு வாய்ப்பு இல்லை. [அப்போஸ்தலர் 1:13; லூக்கா 6:15; மாற்கு 3:18; மத்தேயு 10:38]. செபேதேயுவின் குமாரனும், யோவானின் சகோதரனுமாகிய யாக்கோபு. அந்நாட்களிலே எல்லோராலும் அறியப்பட்டிருந்தார். ஆனால், கி.பி 44ல் அவர் ஏரோது ராஜாவால் கொல்லப்பட்டார். ஆகவே, இந்நிருபத்தின் ஆசிரியர் நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சகோதரன் யாக்கோபு என்ற முடிவுக்கு வரலாம். [மத்தேயு 13:55; மாற்கு 6:3]. இயேசு கிறிஸ்து பூமியிலே ஊழியம் செய்த கொண்டிருந்த நாட்களில் அவர்களுடைய சகோதரர்கள் அவரை விசு வாசிக்கவில்லை [யோவான் 7:1-5; மாற்கு. 3:31. இருந்தபோதிலும் உயிர்தெழுதலுக்குப் பிறகு இயேசுவின் சகோதரர்கள் சீஷர்களோடும் மேல் வீட்டில் ஜெபித்துக் கொண்டிருந்தார்கள் [அப்போஸ்தலர் 1:12-14]. உயிர்தெழுதல் அவர்களுக்கு இயேசுவை தேவனுடைய குமாரனாக விசுவாசிக்கச் செய்திருக்கும் [I கொரிந்தியர் 15:7].

நிருபத்தின் ஆரம்பத்தில் யாக்கோபு வாழ்த்துதலுடன் ஆரம்பிக்கிறார். இங்கே **வாழ்த்துதல்** என்பது உங்களுக்கு மகிழ்ச்சி உண்டாயிருக்கட்டும் என்று பொருள்படும். இங்கே யாக்கோபு வாசகர்களான கிறிஸ்தவர்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும் போது அவைகளை சந்தோஷமாக எண்ணுங்கள் (யாக்கோபு 1:2). இது ஒரு போலியான மகிழ்ச்சி அல்ல, உள்ளப்பூர்வமான சந்தோஷம் . ஏனென்றால், சோதனைகளை மேற்கொள்வதன் விளைவுகள் வெளிப்படையாகத் தெரிகிறதே. சோதனைகளை நாம் வெல்லும் போது வாக்குத்தத்தங்களை பெற்றுக்கொள்கிறோம் ( எபிரெயர் 10:32 –39). நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, என்னிமித்தம் உங்களை நிந்தித்து துன்பப்படுத்தி, பல வித தீமையான மொழிகளையும் உங்கள் பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்; சந்தோஷப்பட்டு, களிகூருங்கள்: பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்; உங்களுக்கு முன்னிருந்த தீர்க்க தரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே (மத்தேயு 5:11,12) என்ற சொல்கிறார்.

Robertson எனும் வேத வல்லுநர் ஒருவர் இச்சோதனைகளில் அறியாமலேயே விழுந்துவிடுகிறார் என்கிற உண்மையை வலியுறுத்துகிறார். ஒருவர் எதிர்பாராதவிதமாக, தன் பங்கில் எந்த தவறும் செய்யாத நிலையிலும் (லூக்கா 10:30) கள்ளர் கையில் அகப்பட்ட மனிதனைப் போல் இருக்கிறார் என்று சொல்கிறார். இங்கே, யாக்கோபு சோதனைகள் வருமென்று உறுதியாகச் சொல்கிறார். ஒருவர் கிறிஸ்தவராவதினால் அவர் வாழ்க்கை பிரச்சனைகளிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியுமென்று சொல்ல முடியாது. இயேசு கிறிஸ்து சீஷர்களைப்பார்த்து என்னிடத்தில் உங்களுக்கு சமாதானம் உண்டாயிருக்கும் பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். **உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு.** ஆனாலும் திடன் கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார் (யோவான் 16:33). முதல் சுவிசேஷப் பயணத்தின் முடிவில் பவுல் திரும்பவும் சபைகளிடத்தில் போய் சகோதரர்களின் விசுவாசத்தை பலப்படுத்தினார். அவர் அப்போஸ்தலர் 14:22ல் இவ்விதமாகச் சொன்னார். நாம் **அநேக உபத்திரவங்களின் வழியாய்** தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டுமென்று சொன்னார். அப்போஸ்தலனாகிய பேதுருவும் கூட சகோதரரைப் பார்த்து உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக் குறித்து ஆச்சரியப்பட வேண்டாம். கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும்போது நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள் என்று உற்சாகப்படுத்தினார் (I பேதுரு 4:12–14).

சோதனையானது பொறுமையை உண்டாக்குகிறபடியால் சோதனையில் களிகூர வேண்டும். (யாக்கோபு 1:3). இங்கே சோதிக்கப்படுதல் என்பது அசுத்தங்களை நீக்கும்படியாக அடுப்பின் வழியாக கடந்து செல்லும் தாது பொருட்கள் என்றுதான் பொருள்படும். I பேதுரு 1:6,7). ஆகவே, இது ஒருவருடைய விசுவாசத்தின் தூய்மையை நிரூபிப்பதற்கான சோதனைப் போன்றதாகும். ஆதியாகமம் 22:1–14). மேலும், பொறுமையை அதன் முடிவு வரை முன்னேற அனுமதித்தால் தேவனுடைய மனுஷன் குறைவில்லாத, பூரண மனுஷனாக மாற முடியும் (யாக்கோபு 1:4). வேத வல்லுநர் ஒருவர், **ஒன்றிலும் குறைவற்றவர்கள் எனும் வார்த்தை** அடிப்படையாக **பந்தயத்திலே** பயன்படுத்தும் வார்த்தை. இது முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவர்களாக தங்களை வளர்த்துக் கொள் பவர்கள் மற்றவர்களை விட வாழ்க்கைப் பந்தயத்தில் பின் தங்க மாட்டார்கள் எனும் உண்மையை சுட்டிக்காட்டப் பயன்படுத்தப்படுகிறது.

✝

**என் இரட்சிப்பும், என் மகிமையும் தேவனிடத்தில் இருக்கிறது; பெலனான என் கன்மலையும், என் அடைக்கலமும் தேவனிடத்தில் இருக்கிறது (சங்கீதம் 62:7).**

**கர்த்தரை விட்டும் அவருடைய சபையை விட்டும் ஜனங்கள் வெளியேறுவது எவ்வளவு சோகாரமானது? அவர்கள் எங்கே போகிறதாக நினைக்கிறார்? அவர்களுக்கு கல்லறையிலிருந்து அடைக்கலம் யாரால் கொடுக்க முடியும். அவர்களுடைய அர்ப்பணிப்பின் உறுதிமொழிகளுக்கு என்ன நடந்தது? கர்த்தர் நம்மை விட்டு விலகுவதுமில்லை, நம்மை கைவிடுவதில்லை என்று நமக்கு உறுதி அளித்திருக்கிறார்.**

# யார் கிறிஸ்தவன்?
# Who is a Christian?

**Maxie**

**ஏ**து ஒருவரை கிறிஸ்தவராக்குகிறது என்பதை குறித்து ஜனங்கள் மத்தியில் நிறைய குழப்பங்கள் நிலவுகின்றன. பெரும் பாலானவர்கள் கிறிஸ்துவுக்குள் தனக்கிருக்கும் விசுவாசத்தை வெளிப்படையாக அறிவிப்பவர் அல்லது கிறிஸ்தவர் என்று சொல்லிக் கொள்பவர் எல்லோரும் உண்மையில் கிறிஸ்தவர்கள் என்று நினைக்கிறார்கள். ஆனால், இது உண்மையா? கிறிஸ்தவர் என்பது இதைவிட கூடுதலான பொருள்களை உள்ளடக்கியதல்லவா?

வேதாகமம் கிறிஸ்துவின் சுவிசேஷம் இரட்சிப்பு உண்டாவதற்கு தேவ பெலனாயிருக்கிறது என்று கூறுகிறது. (ரோமர் 1:16). ஒருவர் கிறிஸ்தனாவதற்கு சுவிசேஷத்தை கேள்விப்பட்டு விசுவாசிப்பது மாத்திரமல்ல. அவர் அதற்குக் கீழ்ப்படிய வேண்டும்! கிறிஸ்து சொன்னதை கவனியுங்கள் **விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்** ( மாற்கு 16:16). ரோமர் ஆறாம் அதிகாரத்தில் விசுவாசிகள் தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு மனப்பூர்வமாய் கீழ்ப்படிந்ததினாலே பாவத்திலிருந்து விடு விக்கப்பட்டார்கள் என்று வாசிக்கிறோம் ( ரோமர் 6:16-18). அந்த உபதேசம் சுவிசேஷந்தான். அவர்கள் கிறிஸ்துவின் மரணத்திற் குள்ளாக ஞானஸ்நானம் பெற்று, கிறிஸ்து தேவனுடைய வல்லமை யினாலே எழுப்பப்பட்டது போல புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு தண்ணீரிலிருந்து வெளியேறும் போது கீழ்ப் படிகிறார்கள் (6:11).

பெரும்பாலான மக்கள் ரோமர் 5:1க்குப் போய் விசுவாசத்தினாலே மாத்திரம் இரட்சிப்பு என்று நிரூபிக்க முயற்சிக்கிறார்கள். ஆனால், அவர்கள் ரோமர் ஒன்றாம் அதிகாரம் வசனங்கள் 5 மற்றும் 16 ஆம் அதிகாரம் 25 ஆம் வசனத்தில் இடம் பெற்றுள்ள கீழ்ப்படிதலுள்ள விசுவாசம் போன்ற வார்த்தைகளை கண்டுகொள்வதில்லை. ஒருவருடைய தனிப்பட்ட விசுவாசம் அவரை கிறிஸ்துவின் கட்டளை களுக்கு கீழ்ப்படிய வழி நடத்தும் போது (பரிசுத்தவான்களுக்கு ஓர் விசை ஒப்பு கொடுக்கப்பட்ட விசுவாசத்தில் அந்த கட்டளைகள் இயல்பாகவே அமைந்துள்ளன அந்த நபர் கிறிஸ்தவராகிறார். ஆகவே, ஒரு உண்மையான விசுவாசி கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெறுகிறார் (கலாத்தியர் 3:26,27).

இந்த மாதிரி, அப்போஸ்தலர் இரண்டாம் அதிகாரத்தில் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. இங்கே சுவிசேஷம் அறிவிக்கப்படு வதை கவனியுங்கள் (22-36) வசனங்கள் அவர்கள் பாவமன்னிப்புக்

கென்று மனந்திரும்பி கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெறக் கட்டளையிடப்பட்டார்கள் [ வசனம் 38 ] அப்படிச் செய்தவர்கள் [வசனம் 41] கர்த்தருடைய சபையிலே சேர்க்கப்பட்டார்கள் [வசனம் 47].

சிலர் கிருபையின் பக்கமாக கவனத்தைத் திருப்பி விட்டு கீழ்ப் படிதலுக்கு எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள். கிருபையின் மீது கவனம் செலுத்தப்பட வேண்டியது தான். ஏனென்றால், கிருபையினாலே தான் இரட்சிப்பு சாத்தியமாகிறது என்று வேதாகமம் போதிக்கிறது.[ எபேசியர் 2:8,9; தீத்து 3:7]. தேவனுடைய கிருபையை நாம் குறைத்து மதிப்பிடக்கூடாது. உண்மையாகவே, நாம் தேவனுடைய கிருபையில் களிகூருகிறோம். ஆனால், தேவன் கிருபையை எல்லோர் மேலும் பொழிந்தருள்வதில்லை. சத்தியத்தை கேட்க மறுப்பவர்களுக்கு [ மத் தேயு 13:15]. சத்தியத்தை விசுவாசிக்க மறுப்பவர்களுக்கு யோவான் 3:18:36; மாற்கு 16:16]. சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிய மறுப்பவர்களுக்கு [II தெசலோனிக்கேயர் 1:8,9]க தேவன் தம்முடைய கிருபையை பொழிந்தருள்வதில்லை. மேலும், இயேசு தாமே **மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆரா தனை செய்கிறார்கள்** என்று சொல்லியிருக்கிறார் [ மத்தேயு 15:7-9].

சமீப காலங்களில் தாராளமயக் கொள்கையை தழுவியிருக்கும் சில சகோதரர்களோடு எனக்கிருக்கும் மிகப்பெரிய பிரச்சனை என்ன வென்றால், மேற்சொல்லப்பட்டவெளிப்படையான வேதாகம உபதேசத்தை விட்டுவிட்டு அல்லது கண்டு கொள்ளாமல் தவறு செய்யும் மார்க்கப்பிரிவினை கூட்டத்தோடு உறவு வைத்துக் கொள் வது தான். இவர்கள் தாங்கள் தவறான உபதேசத்தில் இருப்பதை யெல்லாம் மறந்துவிட்டு, தேவனுடைய கிருபைக்கு முக்கியத்துவம் கொடுத்து தேவன் எல்லோரையும் ஏற்றுக்கொள்கிறார் என்று தவறான எண்ணம் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் ரோமர் 2:5-11; 16:17; கலாத்தியர் 1:8-9; I தீமோத்தேயு 4:1; II தீமோத்தேயு 4:34; I யோவான் 4:1: II யோவான் 9-11; வெளிப்படுத்தின விசேஷம் 2:2; 14:16; 20- 25 போன்ற வசனப்பகுதிகளை மறுபடியும் வாசித்தால் சாலச் சிறந்த தாயிருக்கும்.

சகோதரரே, உண்மையாகவே இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தாகும். ஜாக்கிரதையாக படிப்பதன் மூலமாக நம்மால் சத்தியத்தை அறிந்து கொள்ள முடியும். II தீமோத்தேயு 2:15; யோவான் 8:32]. நாம் நம் முழு மனதோடு சத்தியத்தை விசுவாசித்து நம் அன்றாட வாழ்க்கை யில் அதன்படி வாழ்ந்து, அன்புடன் சத்தியத்தை கைக்கொண்டு எபேசியர் 4:15, பகற்காலமிருக்கு மட்டும் அவருக்காக வேலை செய்து [யோவான் 9 :4]. இழந்து போனவர்களிடத்தில் சத்தியத்தை கொண்டு செல்வோம். ✝

## வேதாகம கேள்விகள்

## ஏன் அநேகர் சத்தியத்தைக் கண்டுபிடிக்காமல் வேதத்தை படிக்கிறார்கள்?

## Why Do So Many Study Without Arriving at the Truth?

Ardron Hinton

**ப**லர் வேதாகமத்தை அடிக்கடி பயன்படுத்துகிறார்கள் என்பதற்காக அவர்கள் அறிய வேண்டிய காரியங்களை கற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்று பொருள்படாது. சில வேதாகம சத்தியம் சரியாக படிக்கப்படுவதில்லை. உதாரணமாக, அத்தேனே பட்டணத்தார். அந்நாட்களிலே அறிவாளிகளாக புதிய காரியங்களை கேட்பதைப் பொழுது போக்காகக் கொண்டிருந்தனர். ஆனால், அவர்கள் அந்நிய தேவர்களை வணங்கியிருக்கிறார்கள். அந்த அத்தனே பட்டணத்தார் எல்லாரும், அங்கே தங்குகிற அந்நியரும், நவமான காரியங்களைச் சொல்லுகிறதிலும், கேட்கிறதிலுமேயொழிய வேறொன்றிலும் பொழுது போக்குகிறதில்லை (அப்போஸதலர் 17:21). அவர்கள் தங்கள் மதம் கேளிக்கையை அளிக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். இவர்கள் எப்போது கற்றாலும் ஒரு போதும் சத்தியத்தை அறிந்து உணராதவர்களாயிருக்கிறவர்களைப் போல் இருக்கிறார்கள் (II தீமோத்தேயு 3:7). இது பவுலின் பிரசங்கத்தைக் கேட்வர்களுடைய மனநிலையைப் பிரதிபலிக்கிறது. அவர்கள் தேவபக்தியற்ற வாழ்க்கையின் சுவையை அனுபவித்திருந்தார்கள். அவர்கள் தேவனுடைய சத்தியம் எங்கே இருக்கிறது என்று தேட வில்லை. சத்தியமானது தேவனுடைய வார்த்தையை உள்ளடக்கிய வேதாகமத்தில் இருக்கிறது. ஆனால், அவர்களை எது பிரியப்படுத்தினதோ அதையே தெரிந்து கொண்டார்கள். ஓசியா 4:6 ல் சத்தியத்துக்கும், தவறுக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை அறியாமல் இருப்பதன் விளைவை நாம் கற்றுக் கொள்கிறோம். **என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சங்காரமாகிறார்கள்.**

எதிர்புறமாக நீதியின் மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள் (மத்தேயு 5:6) கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள் அப்பொழுது கண்டடை வீர்கள். தட்டுங்கள் அப்பொழுது உங்களுக்குத்

திறக்கப்படும். ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக் கொள்கிறான். தேடுகிறவன் கண்டடைகிறான்: தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும் (மத்தேயு 7:7,8).

அந்தப்பட்டணத்தார் மனோ வாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக் கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்ததினால், தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப் பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்தார்கள் (அப்போஸ்தலர் 17:11). ஆகையால், ஏற்றக்காலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கி யிருங்கள். அவர் உங்களை விசாரிக்கிவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர் மேல் வைத்து விடுங்கள் (I பேதுரு 5:6-7). இந்த இரண்டு வசனங்களில் சத்தியத்தை நாம் காணும்போது அதை ஏற்றுக் கொள்ளும் திறந்த மனதும், விருப்பமும் அவசியமானது என்று அறிய முடிகிறது.

---

## கொடுங்கள்

- **தேவனுக்கு எல்லாவற்றிலும் முதற்பலனைக் கொடுங்கள் (நீதிமொழிகள் 3:9,10)**
- **நீங்கள் எதை விதைக்கிறீர்களோ அதையே அறுப்பீர்கள் (கலாத்தியர் 6:7)**
- **கொடுக்கப்படும் ஒன்றைவிட, அதைக் கொடுப்பவரின் மனநிலை முக்கியமானது (I கொரிந்தியர் 9:7)**
- **முதலில் நம்மை நாமே கர்த்தருக்கு ஒப்புக் கொடுக்க வேண்டும் (I கொரிந்தியர் 8:5)**
- **இலவசமாய்ப் பெற்றீர்கள், இலவசமாய்க் கொடுங்கள் (மத்தேயு 10:8).**

## வேதாகம கேள்விகள்

## ஓர் உண்மையுள்ள கிறிஸ்தவன் அரிதாகத்தான் இரட்சிக்கப்படுவானா?

## Will a Faithful Christian Barely Be Saved?

Dennis Gulledge

அப்போஸ்தலர் பேதுரு இவ்விதமாக எழுதினார். **நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே துவக்குங்காலமாயிருக்கிறது; முந்தி நமம்மிடத்திலே அது துவக்கினால் தேவனுடைய சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களின் முடிவு என்னமாயிருக்கும்? நீதிமானே இரட்சிக்கப்படுவது அரிதானால் பக்தியில்லாதவனும் பாவியும் எங்கே நிற்பான்?** [பேதுரு : 4:1718], இந்த வசனங்கள் சகோதரர்களுக்கு தங்கள் இறுதி இரட்சிப்பு சம்மந்தமாக சந்தேகங்கள் உண்டாகும்போது மனதில் தோன்றுகின்றன. சிலருடைய மனதில் தோன்றும் எண்ணம் என்னவென்றால், யாராவது இரட்சிக்கப்பட்டால். அது அரிதான சம்பவமாகத்தான் இருக்கும் என்பதாகும். இது முற்றிலும் ஒரு தவறான புரிந்துகொள்ளுதல்.

இங்கே நியாயத்தீர்ப்பு என்பது கிறிஸ்தவர்கள் அனுபவிக்கப் போகிற அக்கினிமயமான சோதனைகளையும், பாடுகளையும் குறிக்கும்படியாக பயன்படுத்தபட்டிருக்கும் வார்த்தையாகும் [வசனம் 12]. இங்கே தேவனுடைய வீடு என்பது சபைக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் மற்றுமொரு பெயர்[I தீமோத்தேயு3:15] இந்த சபை வரவிருக்கும் சோதனை காலத்தில் அதிகமாக பாதிக்கப்படும். இங்கே அரிது என்பது மிகவும் கடினமான ஒரு காரியத்தைத் தான் குறிக்கிறது. இவ்வசனப் பகுதி கடைசி நியாயத்தர்ப்பைப் பற்றி பேசவில்லை. மாறாக, அவர்களுக்கு கடுமையான பாதிப்பை ஏற்படுத்தப்போகும் உபத்திர காலத்தை பற்றித்தான் பேசுகிறது. ஆகவே, இங்கே அப்போஸ்தலனாகிய பவுல் ஓர் உண்மையுள்ள கிறிஸ்தவன் இரட்சிக்கப்பட்டால் அது அரிதான ஒரு சம்பவமாகத்தான் இருக்கும் என்று சொல்லவில்லை! அந்த சந்தேகத்தை நம் மனதிலிருந்து எடுத்துப் போடுவோம்!

பேதுரு ஏற்கனவே [IIபேதுரு1:11] ல் இவ்விதமாகச் சொல்லியிருந்தார் **இவ்விதமாய் நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும்** என்று. இவ்வார்த்தைகள் கி.பி. 70 ல் எருசலேம் அழிக்கப்படுவதற்கு சில காலத்துக்கு முன்பாக எழுதப்பட்டது. அந்த உபத்திரவத்தின் தாக்கம் மிகக்கடுமையாக இருக்கும். [மத்தேயு 24:21-22] இயேசு கிறிஸ்துவின் அறிவுரைப்படி எருசலேமை விட்டு வெளியேறினால் கிறிஸ்தவர்கள் மரணத்தியிருந்து தப்பித்திருக்கலாம். ஆனால், அக்காலத்தில் சபைகளுக்கு மிகுந்த உபத்திரவம் உண்டாயிற்று.

## உண்மையுள்ள வருகை

## Faithful Attendance

Mark N. Posey

**மு**ன்னுரை எல்லா ஆராதனை கூடுகைகளில் உண்மையாகப் பங்கெடுத்து வார்த்தைகளால் விவரிக்க முடியாத அளவுக்கு மதிப்புள்ள ஆவிக்குரிய வளர்ச்சியை தெரிவிக்கிறது. உண்மையா யிருப்பதன் நன்மைகளை கீழ்க்கண்டவாறு கவனியுங்கள்.

**மையப்பகுதி**

1. தேவனுடைய ஆராதனை ஒருவேளை மாற்றுகிறது. ஒரு கிறிஸ்தவன் புதிய சிருஷ்டியாக மாறியிருக்கிறான் [ரோமர் 12:18] தொடர்ந்து பரிசுத்தமாயிருப்பது ஆவிக்குரிய வளர்ச்சிக்கு அவசியமாகும் [II பேதுரு 3:18].

2. தேவனுடைய அன்பு நெருக்கி ஏவுகிறது. கிறிஸ்துவின் அன்பு தான் நன்மையும் கிருபையும் நம்மை தொடர பாடுபடத்தக்கதாகவும் கர்த்தருடைய வீட்டில் என்றென்றும் வாசம் செய்யவும் நம்மை நெருக்கி ஏவுகிறது [சங்கீதம்13:6].

3. தேவனுடைய குடும்பம் உற்சாகப்படுத்துகிறது. நாம் பாடலில் ஒருவருக்கொருவர் புத்தி சொல்கிறோம் அன்புக்கும் நற்கிரியை களுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவருக்கொருவர் புத்திச் சொல்கி றோம். நம் சபை குடும்பத்துக்காக தேவனுக்கு ஸ்தோத்திரம்.

4. தேவனுடைய பிள்ளைகள் நீதியின் மேல் பசியும், தாகமும் உள்ளவர்களாயிருக்கிறார்கள். ராஜ்யத்தின் பிரஜைகள் நீதிக்காக பசியும் தாகமும் உடையவர்களாயிருக்கிறார்கள் [மத்தேயு 5:6], சுவிசேஷம் தேவ நீதியை வெளிப்படுத்துகிறபடியால் [ரோமர்1:17] தேவனுக்காக நாம் பசியும், தாகமும் உள்ளவர்களாயிருக்கிறோம்.


5. தேவனுடைய சத்துரு பதுங்கியிருக்கிறான். கெர்ச்சிற சிங்கத்தைப்போல் பிசாசு இரை தேடி அலைகிறான் [Iபேதுரு 5:8]. ஆகவே, கர்த்தருக்காக உண்மையாக வாழ்கிற காரியத்திலே தெளிவும் ஜாக்கிரதையும் மிகவும் அவசியமாயிருக்கிறது.

**முடிவுரை:**

தேவனோடும், அவருடைய ஜனங்களோடும் இருக்கும்படியாக நம்முடைய ஆசை உறுதியானதாகவும், உண்மையானதாகவும் இருக்க வேண்டும்.

## திருமறை தியானம்

**தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்**



**நம்பிக்கை** TV **வெள்ளி காலை** 7:30 - 8.00 **மணி**

**தமிழன்** TV **சனி காலை** 7:00 - 8.00 **மணி**

**மாத இதழ் : திருமறை ஆசான்**

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

**வேதாகம** அஞ்சல்வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம் ஆம், வேதாகமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு **7** பகுதிகளாப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட **100** பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.


தொடர்புக்கு

இயக்குநர், அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

த.பெ. எண் 27, காங்கேயம் 638 701.

தமிழ்நாடு, இந்தியா.


**பரிசுத்த வேதாகமத்தின் தெளிவான உபதேசத்தை வெளிப்படுத்தும் பல்வேறு தலைப்புகளில் வெளியிடப்பட்டுள்ள பல வண்ணங்களில் ஆன கைப்பிரதிகள் (Tracts) வேண்டுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்**


E.Z.S. **ராஜநாயகம்** : 98427 30382

P.R. **சுவாமி** : 098440 70763


P.C. **பிலேமோன் ராஜா**: 9244204420

B. **அர்ஜுனன்** : 994435 58041

## சத்திய வழி


❖ பேச்சாளர் : **சகோ. P.R. சுவாமி**
❖ நிகழ்ச்சி : வேதாகமக் கல்வி & அஞ்சல் வழி வேதாகமக் கல்வி
<u>தொடர்புக்கு</u> : சத்திய வழி, அஞ்சல் பெட்டி 8405, பெங்களூர் – 560084.
போன் : 080-25463507, செல் : 098440 70763

## கிறிஸ்துவின் வசனம்



❖ பேச்சாளர் : **சகோ. B. அர்ஜுனன்**
❖ தமிழன் TV : செவ்வாய் மாலை 6:00 – 6:30 மணி
❖ நம்பிக்கை TV : வெள்ளி 8:00 – 8:30 மணி
❖ மாத இதழ் : கிறிஸ்துவின் வசனம்
<u>ஆவிக்குரிய புத்தகங்கள் கிடைக்குமிடம்</u> ;
கிறிஸ்துவின் சபை, தபால் பெட்டி 5, வத்தலகுண்டு – 624 206.
திண்டுக்கல் மாவட்டம். போன் : 04543 263278 செல் : 94435 58041

## கிருபையுள்ள வார்த்தை



❖ பேச்சாளர் : **சகோ. P.C. பிலேமோன் ராஜா**
❖ தமிழன் : ஞாயிறு காலை 6:45 காலை 7.00 மணி
அடிப்படை மற்றும் மேல்நிலை தபால் பாடங்கள்
❖ நம்பிக்கை TV : ஞாயிறு மாலை 3:30 காலை 4.00 மணி
❖ **Good News TV** : செவ்வாய் இரவு 7:30 – 8.00 மணி
❖ பைபிள் பாடங்கள் : அடிப்படை மற்றும் மேல்நிலை தபால் பாடங்கள்
❖ பார்வையற்றோருக்கு THE VOICE OF TRUTH ப்ரைல் இதழ் (தமிழ் / English)
❖ தமிழ் மாதப் பத்திரிக்கை : கிருபையுள்ள வார்த்தை
❖ **English Quaterly Magazine** : THE VOICE OF TRUTH INTERNATIONAL
❖ **J.C. School of Evangelism** : கிறிஸ்தவர்களுக்கான சுவிசேஷப் பள்ளி
<u>தொடர்புக்கு</u> : தபால் பெட்டி 15, அரசரடி, மதுரை – 625 016.
செல் : 92 4421 4424, 92 4431 4431, 92 4420 4420

## ‘ சத்தியத்தின் குரல் ‘ சந்தா விண்ணப்பம்

❑ “சத்தியத்தின் குரல்” காலாண்டு இதழுக்கு நான் சந்தாதாரராக இருக்க விரும்புகிறேன். இத்துடன் ரூ. 100 ( **4** இதழ்கள் ) (அ) ரூ. 200 ( **8** இதழ்கள் ) க்கான காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன். என் விலாசம் கீழே உள்ளது.

❑ “சத்தியத்தின் குரல்” காலாண்டு இதழுக்கு என்னுடைய ............................................... முன்னிட்டு ஒருதரம் வெகுமதி (A Gift) கொடுக்க விரும்புகிறேன். அதற்கான ரூ. ........................ காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன் என் விலாசம் கீழே உள்ளது.

❑ “சத்தியத்தின் குரல்” நூலை காலாண்டு தோறும் 25 பிரதிகள் பெறுவதற்காக ரூ. 500 அனுப்ப விரும்புகிறேன். அல்லது ஒவ்வொரு வருடமும் ரூ. 1500 அனுப்பி நான்கு காலாண்டுகளுக்கு 25 பிரதிகள் பெற்றுக்கொள்ள விரும்புகிறேன். (சபையார் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திப் பயன்பெறுங்கள்)

**(இந்தப் படிவத்தை உங்கள் காசோலையுடன் இணைத்து அனுப்புங்கள்)**

கடிதங்களும், காசோலைகளும், வரைவோலைகளும் அனுப்ப வேண்டிய முகவரி

**E.Z.S. ராஜநாயகம்**

“சத்தியத்தின் குரல்” காலாண்டு இதழ்

**288, தாராபுரம் ரோடு, காங்கேயம் – 638 701.**

**Ph : 04257 230030, Cell : 98427 30382, 99655 30385**

**E-mail : rajarichal@yahoo.co.in**

பெயர் : ____________________________________________

தெரு / ரோடு : ______________________________________

நகரம் : ________________________ பின் கோடு : ______________

மாநிலம் : __________________________________________